GOKULAM ஜூலை '95 ரூ. 5.00

# கோகுலம்

வண்ண லேபில்கள் உள்ளே!



பட்டு பொம்மைக் குரங்கிது;
பழத்தில் பங்கு கேட்காது!


REWARD!
BRING 10 DIFFERENT WRAPPER STORIES AND THEIR WRAPPERS TO GET 3 MONOPACKS FREE
Big Babol
SOFT NON STICKY BUBBLE GUM
HURRY KIDS!
Look out for wrapper stories inside Big Babol monopacks only
Collect the reward from your nearest dealer.
Offer available in select cities
PERFETTI



# கோகுலம்

1995
ஜூலை மாத
இதழ்
மலர் : 13
இதழ் : 6

உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேணும். - பாரதியார்.

## அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

அப்பாடி! ஒருவழியாக விடுமுறை முடிந்து, பள்ளி திறந்தாயிற்றா? புதிய வகுப்பு, புதிய ஆசிரியர்கள், புதிய நண்பர்கள், புதுப் புத்தகங்கள். சிலருக்குப் புது ஊர், புதிய பள்ளியாகக் கூட இருக்குமே? இவைகளைப் பற்றிக் கூட நீங்கள் எழுதியனுப்பலாமே? இப்பொழுதே எழுத ஆரம்பியுங்கள்.

இந்த இதழில் ஓராண்டுக்காலமாக நம்மையெல்லாம் மகிழ்வித்து வந்த சந்தீப்பும், ராஜாவும் பிரியா விடை பெறுகிறார்கள். இரண்டாவது சாவி முடிந்து விடுகிறது என்றாலும், இதன் தாக்கம் கண்டிப்பாக நம்மிடம் நிலைத்து நிற்கும். 'அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்' என்ற திருவள்ளுவரின் வாக்கையும் வன்முறை என்ற எந்தப் பூட்டையும் அன்பு என்ற சாவிதான் திறக்கவல்லது' என்ற காந்தியடிகளின் கருத்தையும் 'இரண்டாவது சாவி' உறுதிப்படுத்துகிறது.

புதிய தொடர்கதையைப் பற்றிய அறிவிப்பும் இந்த இதழில் வெளியாகியுள்ளது. பல ஆண்டுகளாக சிறுவர் இலக்கியத்தைச் செம்மைப்படுத்தி வரும் மதிஒளி இதை எழுதுகிறார் என்பதே இதன் சிறப்பை விளக்கப் போதுமானது. ஆவல், பரபரப்பு, தியாகம் என்று எல்லாம் நிறைந்த கதையாக இது இருக்கப் போகிறது.

வாண்டுமாமாவின் 'மரகதச் சிலை'க்கு உங்களிடம் உள்ள வரவேற்பைப் பார்க்கும் போது திகைப்பாகத்தான் உள்ளது. சிறுவர் இலக்கிய உலகில் தனக்கென தனி இடம்பிடித்துள்ளவர் இவர். தொடக்க காலத்தில் கோகுலத்தின் பொறுப்பாசிரியராக இருந்து அதை மிளிரச் செய்த பெருமையும் இவருக்கு உண்டு. இந்த ஆண்டு மே 21-ஆம் தேதி இவருக்கு எழுபது வயது நிறைந்துள்ளது. எண்ணற்ற இளம் வாசகர்களை உருவாக்கித் தந்திருக்கும் இந்த வித்தகருக்கு ஆயிரக்கணக்கான கோகுலம் குழந்தைகளின் சார்பில் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இடம் இல்லாமையால் இந்த இதழில் 'உங்கள் நூலகம்', பிருந்தாவனக் கவியரங்கம்' இடம்பெறவில்லை. மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,
ரேவதி
(கௌரவ ஆசிரியர்)



# கோகுலம்

## 1995 ஜூலை

## இந்த இதழில்...





(அறிவியல் சித்திரப்படம்)
பக்கம் 71




'மரகதச் சிலை - பகுதி II
பக்கம் 33

'மனைவியைச் சிறையா வைக்கிறது மலை மொங்கன்?
பக்கம் 65








உலகிலேயே மிகப்பெரிய பிரமிட் எங்க இருக்கிறது என்று கேட்டால், உடனே எகிப்தில் என்று உங்களிடம் இருந்து பதில் வரும். அது தவறு. மிகப்பெரிய பிரமிட் மெக்சிகோவில் உள்ளது. இதன் உயரம் 177அடி. 25 ஏக்கர் நிலப்பரப்பை இந்தப் பிரமிட் ஆக்கிரமத்துக் கொண்டு அமைந் திருக்கிறது.

— செஞ்சி தா.ஷேக்.



## அப்படியா!

சர்ச்சில், ஆறாம் ஜார்ஜ் மன்னர், சாமர் செட்மாம், சார்லஸ் டார்வின் ஆகியோரிடம் பொதுவான ஒரு குறை பாடு இருந்தது. அது என்ன தெரியுமா? அவர்கள் யாவரும் திக்குவாய்க்காரர்கள்.

- உ. இராமநாதன்





அண்ணன் போர் வீரன். தம்பிக்கு சலவைத் தொழில். இருவரும் ஒரே வீட்டில் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர். அண்ணனிடம் ஓர் உயர்ந்த ஜாதிக் குதிரை இருந்தது. தம்பியிடம் ஒரு கழுதை இருந்தது. இரண்டையும் இரவில் வீட்டின் பின்னால் இருந்த ஒரே கொட்டகையில் கட்டி வைப்பார்கள்.

வாரத்திற்கு ஒருமுறை அண்ணன் குதிரைக்கு உடம்பு பிடித்து, பாலீஷ் போடுவான்; வாலை வாரி பேன் எடுத்து விடுவான். தினமும் பச்சைப் புல் லோடு, கோதுமை, கொள் போன்ற நவதானியங்களை வைப்பான்.

குதிரைக்கு நடக்கும் உபசாரங்களைக் கழுதை பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருக்கும். "பகல் முழுக்கப் பொதி சுமந்து நாம் உழைக்கிறோம். பழைய சாத்துக் கஞ்சியை உப்புக் கூடப் போடாமல் வைக்கிறார்கள். இந்த உடம்பு நோகாத குதிரைக்கு இத்தனை உபசாரம்! நவதானிய உணவு! பச்சைப் புல்!" என்று கழுதை பொருமிக் கொண்டிருக்கும்.

குதிரைக்கு அதன் உயரத்தைப் போலவே உயர்ந்த மனம். "நண்பா, கொஞ்சம் கோதுமைத் தவிடு தின்கிறாயா?" என்று அது அன்புடன் கேட்கும்.

"எனக்கு எதுக்கு அதெல்லாம்? உன் போல் உடம்பு நோகாத சொகுசுக் காரங்களுக்குத்தான் அதெல்லாம் தேவை," என்று கழுதை கடுகடுக்கும். முகத்தைத் திருப்பிக் கொள்ளும். குதிரை பாவம். அதற்கு மேல் பேசாது.



# கழுதையும் குதிரையும்!

ஒருநாள் குதிரை வழக்கம் போல், "நண்பா, கொஞ்சம் புல் தின்கிறாயா?" என்று கேட்டது கழுதையிடம்.

"உன்னைப் போல உடம்பு வளர்ப்பவர்களுக்குத்தான் பச்சைப் புல், நவ தானியம் எல்லாம் தேவை. நானெல்லாம் பாட்டாளி இனம். உழைக்கவே பிறந்தவங்க" என்று கடுகடுத்தது கழுதை.

குதிரை வழக்கம் போல் பேசாமல் இருக்கவில்லை.

"நண்பா, இனிமேல் என்னுடைய தொந்தரவு உனக்கு இருக்காது," என்றது.

கழுதை, வெறுப்பு மாறாமல் குதிரையைப் பார்த்தது.

"என்ன ஆச்சு? மன்னருக்குப் பிறந்த நாள் விழாவா? அணிவகுப்பில் கலந்து கொள்ளப் போகிறாயா? வண்ண வண்ணப் பட்டாடைகளும், மின்னும் சேணங்களும் போட்டு மினுக்கப் போகிறாயா?" என்று கேட்டது.


"இல்லை. பக்கத்து நாட்டு மன்னர் படையெடுத்து வருகிறாராம். அதனால் இன்னும் சிறிது நேரத்தில் நமது நாட்டுப் படை கிளம்ப இருக்கிறது. முன்னணியில் நான்தான் நிற்கப் போகிறேன். நான் உயிருடன் திரும்புவது நடக்காத காரியம்."

கழுதை திகைத்துப் போய் பதில் கூறத் தெரியாது நின்றது.

"மேனி மினுக்கன், சொகுசுக்காரன் என்றெல்லாம் என்னைச் சாடினாயே... என் போன்றவர்களை எதற்காக இப்படி ஊட்டமாக வளர்க்கிறார்கள் என்பது புரிந்ததா? உள் நாட்டுக் கலகம் வந்தாலும் சரி, அயல்நாட்டுப் படையெடுப்பு நிகழ்ந்தாலும் சரி, மனிதர்கள் மோதிக் கொண்டால் தாக்குதலை சமாளிக்க நாங்கள்தான் அனுப்பப்படுகிறோம். உன் பிறப்பு பரவாயில்லை. தொந்தரவு இல்லாத அமைதியான எளிய வாழ்க்கை."

குதிரை கண்கலங்கியது. கழுதையும் கூடத்தான்!

மனிதன் விலங்குகளைக் கொழுக்க வைப்பது சுயநலத்திற்காகத்தான்.





INDIA'S LARGEST SELLING COMICS
DIAMOND COMICS
PRAN'S
DAABU & Devi Baroona
AGNIPUTRA ABHAY & The Blazing Flame
PRAN'S
CHACHA CHAUDHARY & AFLATOON
MAHABALI SHAKA & The Jungle Law.
MANDRAKE-32
PRAN'S
SHRIMATIJI Breakfast T.V.
PRAN'S
RAMAN Moga Singh's Car
JAMES BOND-35
DIAMOND COMICS DIGEST
PHANTOM-45

## கதையை முடியுங்கள் - போட்டி முடிவு

இந்தப் போட்டிக்கு வந்த கதைகளைப் படித்து முடிவெடுப்பதே ஒரு சவாலாக இருந்தது. சற்றும் எதிர்பார்க்காத முடிவுகளைக் கொண்ட கதைகள் நிறைய இருந்தன. எனவே, பரிசைப் பகிர்ந்தளிக்க எண்ணி ஐந்து கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

**ரூபாய் முப்பது பரிசு பெறும் கதைகளை எழுதியவர்கள் :**

1. ஆர். கோபி கண்ணன், காரைக்கால்.
2. ஆர். பாலாஜி, சென்னை - 81.
3. த. சிவக்குமார், நெய்வேலி.
4. நா. சாந்தி, சோழன் மாளிகை, குடந்தை.
5. வி. விஜயலட்சுமி, சென்னை - 61.

பரிசு பெற்ற கதைகள் ஐந்தும் அடுத்த இதழில் வெளியாகும். பரிசுபெற்றவர்களுக்கு வாசகர் சார்பில் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி!

## கோடை விடுமுறைப் போட்டி - II முடிவு

இதில் பெருமளவுக்கு உற்சாகமாகக் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை 2106க்கு வந்துவிட்டது! அவ்வளவும் சரியான விடை! குலுக்கல் முறையே பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க உதவியது.

**ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :**

1. வி. ரம்யா, காரைக்கால் - 2.
2. ஜி. மெர்லி, மதுரை - 4.
3. ஜி. ஷிரின், சேலம் - 9.
4. மு. தில்ஷாத்பேகம், கோவை - 45.
5. பா. அப்ரமேயன், சென்னை - 44.
6. எஸ். ரம்யா, பத்ராவதி, கர்நாடகா.
7. பி. எஸ். ஸ்ரீநாத், சித்தூர், ஆந்திரப்பிரதேசம்.
8. எஸ். ராமானுஜன், டெல்லி - 91.
9. ஆ. ஜெர்மி பிராங்ளின், உதய்நகர், புள்ளம்பாடி அஞ்சல்.
10. இ. பிரதீபா, பட்டிவீரன்பட்டி.
11. ம. சரஸ்வதி, பாளையங்கோட்டை.
12. இரா. மரகதவல்லி, மதுரை - 7.
13. வெ. குறள்மொழி, கடத்தூர்.
14. எம். யாசர் அராபத், அம்மாபேட்டை.
15. எம். ஜெமினி, சென்னை - 101.
16. கே. தஸ்தகீர், தஞ்சை - 9.
17. ஆர். அம்முக்குட்டி, துவரிமான் கிராமம் & அஞ்சல்.
18. ம. ஜென்சி, கரடிகுளம் & அஞ்சல்.
19. எம். ஷேக் பாத்திமா, மறைமலைநகர் & P.O.
20. பி. கார்த்திகேயன், புதுதில்லி - 5.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி!

**சரியான விடை :**

அருமை நண்பா, கோடை விடுமுறையில் கோடைகானலுக்குச் செல்கிறேன். வருகிறாயா? உடனே பதில் எழுது - நண்பன் சங்கர்.

# இறைவனின் திருவுளம்!

சீனாவில் எல்லா வசதிகளையும் கொண்ட கிழவர் ஒருவர் இருந்தார். தந்தையிடம் அளவிட முடியாத அன்பு கொண்ட ஒரு புதல்வன், விலை மதிக்க முடியாத ஒரு குதிரை, மற்றும் குறையாத செல்வம் என்று அவர் பல பேறுகளைப் பெற்றிருந்தார். தன்னிடம் இத்தனை பேறுகள் உள்ளன என்பதைப் பற்றி அவருக்குச் சிறிதும் கர்வம் இல்லை. எல்லாம் இறைவனின் திருவருள் என்று எண்ணியிருந்தார்.

ஒருநாள் அவருடைய மதிப்பு மிக்க குதிரை, லாயத்திலிருந்து அறுத்துக் கொண்டு மலைப் பகுதிக்கு ஓடி விட்டது.

இதைக் கேள்வியுற்ற அக்கம்பக்கத்தினர் ஆறுதல் கூறி, "உங்களுடைய அருமையான குதிரை போய்விட்டதா? என்ன துரதிர்ஷ்டம்!" என்றனர்.

கிழவரோ, "அது துரதிர்ஷ்டம் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? அதுவும் இறைவனின் திருவருள்" என்று கூறிச் சிரித்தார்.

சில நாட்கள் கழித்து அந்தக் குதிரை தானாகவே திரும்பி வந்தது. தன்னுடன் கூடவே மிக அழகிய, உயர்ந்த பன்னிரண்டு குதிரைகளையும் அது அழைத்து வந்திருந்தது!

ஊர் மக்கள் திரண்டு வந்து கிழவரைப் பாராட்டி, "என்ன அதிர்ஷ்டம்!" என்றனர்.

கிழவர் திரும்பிப் பதிலளித்தார் : "இது எப்படி அதிர்ஷ்டமாகும்? இதுவும் இறைவனின் திருவருளே" என்றார்.

மறுநாள் ஒரு துயரச் செய்தி காத்திருந்தது.



ஒரு முரட்டுக் குதிரையைக் கிழவருடைய ஒரே செல்லப்பிள்ளை அடக்க முயன்றபோது, இடறி விழுந்து காலை முறித்துக் கொண்டு, வாழ்நாள் முழுவதும் ஊனமாகிவிட்டான்!

மீண்டும் ஊரார் வந்து, "உங்களுடைய மகன் இப்படி முடமாகிவிட்டானே! என்ன துரதிர்ஷ்டம்!" என்று வருந்தினர்.

"இது துரதிர்ஷ்டம்தான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? இதுவும் இறைவனின் திருவருளே!" என்றார் கிழவர் புன்னகை மாறாமல்.

சில மாதங்கள் கழித்து போர் மோகங் கொண்ட அந்த நாட்டு அரசன் கிழவருடைய ஊருக்கு வந்து திடகாத்திரமான வாலிபர்களையெல்லாம் கட்டாயப்படுத்திப் போருக்கு அழைத்துச் சென்றான். போரில் அனைவரும் ஊனமுற்றனர் அல்லது கொல்லப் பட்டனர். தன்னுடைய உடல் ஊனத்தினால் போருக்கு அழைத்துச் செல்லப் படாத கிழவரின் மகன் தப்பினான்.

"இதுவும் என் அதிர்ஷ்டமோ, துரதிர்ஷ்டமோ இல்லை. இறைவனின் திருவுளமே" என்றார் இப்பொழுதும் கிழவர்.

(ஒரு சீனக் கதை)

— கோவி. அனுராதா



# யார் அழகு?

**உ**டையார்குடி என்ற ஊரில் சுதாகர் என்ற விவசாயி இருந்தான். அவன் கடுமையான உழைப்பாளி. அதோடு நல்ல அறிவாளி.

வறுமையின் அதிதேவதை மூதேவியும், செல்வத்தின் அதிதேவதை லக்ஷ்மியும் அவனைச் சோதிக்க எண்ணினர். இருவரும் ஒன்றாக அவன் முன் தோன்றினர்.

"சுதாகர், நீ பெரிய அறிவாளியாமே! எங்கள் இருவருக்குள் யார் அழகு என்பதை உடனே கூறு" என்று கேட்டனர்.

சுதாகர் திக்குமுக்காடிப் போனான். லக்ஷ்மியை அழகு என்றால் மூதேவியின் பகையைச் சந்திக்க நேரும். மூதேவியை அழகு என்றால் லக்ஷ்மியின் பகை ,யைச் சந்திக்க நேரும். புத்திசாலியான சுதாகருக்கு ஒரு யோசனை தோன்றியது.

"இருவருமே அழகுதான். இருந்தாலும் தாயே, நீங்கள் வருவதை விட போகும் போதுதான் மிக அழகாக இருக்கிறீர்கள்" என்று மூதேவியிடம் கூறிய சுதாகர், "தாயே, தாங்கள் போகும் போது இருப்பதை விட வரும் போதுதான் அழகாக இருக்கிறீர்கள்'' என்றான் லக்ஷ்மியிடம்.

சுதாகரைச் சோதித்துத் துன்புறுத்த வந்த இருவரும் திகைத்துப் போய்த் திரும்பினர்.

— மோ. பத்மபநாபன்

# உன்கிட்டே தரமாட்டேன்!

லாலாபுரம் சுந்தரராஜன்

பள்ளி இறுதி மணி முழங்கியது. வகுப்புகளிலிருந்து வண்ணத்துப்பூச்சிகளாய் வெளியே பறந்து வந்தனர் மாணவிகள்.

அணிவகுத்து நின்ற ஆட்டோக்களும் ரிக்ஷாக்களும் வழக்கமான குழந்தைகளை வாரிப் போட்டுக் கொண்டு இடத்தைக் காலி பண்ணிக் கொண்டிருந்தன.

வராந்தா வாசலில் நின்ற தேவியின் துருதுரு விழிகள் கலையும் கூட்டத்தைக் கவனத்துடன் துழாவின. "டாண்" என்று நான்கு மணிக்கு வாசலில் வந்து வரவேற்று அழைத்துச் செல்லும் ரிக்ஷா கோபாலுவை ஏன் இன்னும் காணவில்லை!

மலைத்துப் போய் நின்ற அவளை நோக்கி வெள்ளை யூனிஃபார்ம் அணிந்த புது மனிதன் ஒருவன் வந்தான்.

"நீதானேம்மா தேவிங்கறது? பேங்க் ஆபீஸர் சுந்தர் ஸார் டாட்டர் தானே?'' என்று பாசத்துடன் விசாரித்தான்.

"ஆமாம், நீங்க யாரு?'' துடிப்பாகக் கேட்டாள் தேவி.

"நான் பேங்க் மானேஜரின் டிரைவர். உன்னை வழக்கமா அழைச்சிட்டுப் போற கோபால்ங்கிற ரிக்ஷாக்காரன் உடம்புக்குச் சுகமில்லேன்னு உங்கப் பாவுக்குப் போனில் சொன்னானாம். அதனாலே அவர் என்னை அனுப்பி உன்னைக் கூட்டி வரச் சொன்னார்."

அப்பாவின் பெயர், உத்தியோகம், ரிக்ஷா கோபால் இத்தனை விவரங்களையும் துல்லியமாகச் சொல்லும் அந்த டிரைவரை நம்பாமல் என்ன செய்வது? அதிலும் புத்தம் புதிய பிளஷர் கார் பயணம் புதிதாகக் கிடைத்திருக்கிறதே? மகிழ்ச்சியில், தேவி மனந்துள்ள ஓடிப் போய் முன் சீட்டில் ஏறிக் கொண்டாள்.

மெதுவாக ஊர்ந்த வண்டி கீழ மாசி வீதியின் திருப்பத்தில் போய் நின்றது. பஸ் ஸ்டாப்பில் ரெடியாக இருந்த இரண்டு முரடர்கள் சொல்லி வைத்தாற்போலக் காரில் பின்சீட்டுக் கதவுகளைத் திறந்து கொண்டு உள்ளே ஏறி அமர்ந்தனர். அவ்விருவரின் முகத்தை டிரைவர் சீட்டில் தலைக்கு மேலிருந்த முகப்புக் கண்ணாடியில்



பார்த்த போது தேவியின் உள்ளத்தில் ஒரு வகை திகில் பிறந்தது.

கடா மீசை, இரத்தச் சிவப்பேறிய கண்கள், பரட்டை முடி இத்தனையும் சேர்ந்து அவர்கள் சினிமாவில் வரும் முரடர்கள் போலவே தோன்றினர். அவர்கள் பார்வையில் கொடூரம் தொனித்தது.

சந்தேகப் பார்வையுடன் டிரைவரை ஓரக்கண்ணால் நோக்கினாள் தேவி. அவன் அவளைக் கவனிக்காமல் டிராபிக்கில் கவனம் செலுத்தி கார் ஓட்டுவது போல் பாசாங்கு செய்தான்.


இயல்பிலேயே தேவி மிகவும் கெட்டிக்காரப் பெண். குழந்தைகள் கடத்தல் பற்றிப் பத்திரிகைகளிலும், கதைகளிலும் படித்த ஞாபகம் வந்தது அவளுக்கு. 'நன்றாகச் சிக்கிக் கொண்டு விட்டோம்' என்று அவளது உள்ளுணர்வு உறுத்தியது. கத்திக் கூச்சலிட்டால் காரியம் கெட்டுவிடும் என்பதை என்பதை நன்கு தெரிந்து வைத்திருந்தாள்.

உள்ளத்தில் துணிவை வரவழைத்துக் கொண்டு கண்ணை மூடிக் கொண்டு ஒரு நிமிடம் யோசித்தாள். அவள் மனத்தில் ஒரு திட்டம் உருவாயிற்று.

"டிரைவர் அங்கிள், நீங்க அழகாகக் கார் ஓட்டுறீங்களே! எங்க கோபால் ரிக்ஷாவில் ஏறிச் சவாரி பண்ணிச் சலிச்சிப் போச்சி" என்று ஒன்றும் அறியாத வெகுளிப் பெண் போலச் சிரித்து நடித்தாள்.

உடனே டிரைவர், "அப்படியா தேவி?" என்று ஒரு நமுட்டுச் சிரிப்புச் சிரித்தான். அடுத்தகணம் எதையோ நினைத்துக் கொண்டவள் போலத் தன் பையைத் திறந்து, ஒரு புத்தகத்தைத் துழாவி ஒரு நகைக் கடை பில்லைத் தேடி எடுத்து டிரைவரிடம் நீட்டினாள் தேவி.

"இந்தா பாருங்க அங்கிள்! நான் மறந்தே போயிட்டேன். எனக்கு ஒரு செயின் பண்றதுக்கு அம்மா பணமெல்லாம் கொடுத்துட்டாங்க. அந்த நகையை இன்னிக்கிச் சாயங்காலம் கோபாலு அண்ணன்கிட்டே சொல்லி வாங்கி வரணுமுன்னு அம்மா பில்லைக் கூடக் கொடுத்தனுப்பிச்சாங்க. அப்பா இது பற்றி உங்ககிட்டே ஏதும் சொல்லி அனுப்பலையா?" என்று குழைந்தாள்.



அவள் நீட்டிய பில்லை வாங்கிப் பார்த்த டிரைவர், அதில் கண்டிருந்த பெருந்தொகையைப் பார்த்து அயர்ந்து விட்டிருக்க வேண்டும். பின்னால் அமர்ந் துள்ள முரடர்களிடம் அந்த பில்லை நீட்டினான். அதை வாங்கிய முரடர்கள் உள்ளத்திலும் எச்சில் ஊறியது.

"உம், தெற்காவணி மூல வீதிக்கு வண்டியைத் திருப்பு" என்றனர்.

தேவி உடனே எழுந்து பின்னால் திரும்பி அந்த பில்லைப் படக்கென்று பறித்துக் கொண்டு, "ஊஹூம் உன் கிட்டே தரமாட்டேன். நானும் எங்க டிரைவர் அங்கிளும் மட்டுமே போயி வாங்கிட்டு வருவோம்" என்று வக்கணை யாகக் கோபித்துக் கொள்வது போல நடித்தாள்.

அவள் சரியான வெகுளிப் பெண் என்று நம்பிய முரடர்கள், "நாங்க வர லேம்மா. நீயும் உங்க அங்கிளும் மட் டுமே போங்க!" என்று சிரித்துக் கூறி அவளைச் சமாதானப்படுத்தினர். பில் லில் குறிப்பிட்டிருந்த கடைக்கு முன் னால் போய் வண்டி நின்றது.

"அங்கிள், நீங்க இறங்கி கதவைத் திறங்க. உங்க பக்கமே நான் இறங்கி வரேன்" என்றாள் தேவி. டிரைவர் திரும்பி கதவைத் திறக்கும்போதே யாரும் அறியாமல் நைசாகக் கார் சாவி யைப் பூட்டிக் கையில் எடுத்து மறைத் துக் கொண்டு இறங்கினாள். முரடர்கள் சந்தேகப்படாமல் இருக்கத் தன் புத்தகப் பையை வண்டியிலேயே விட்டுவிட்டுப் போனாள்.

கடைக்குள் நுழைந்ததும் டிரைவரை வாசலில் நிறுத்திவிட்டு தேவி மட்டும் உள்ளே ஓடி கல்லாவில் இருந்த உரிமை யாளரிடம் இரகசியமாக விஷயத்தைக் கிசுகிசுத்தாள்.

தேவியின் தைரியத்தையும் சமயோ சித புத்தியையும் மனதிற்குள் மெச்சிக் கொண்ட உரிமையாளர் முகத்தில் எவ்வித உணர்வையும் காட்டிக் கொள் ளாமல் அவளை உட்காரச் சொல்லி விட்டு வாசலில் நின்ற டிரைவரை உள்ளே அழைத்தார்.

என்னமோ ஏதோவென்று தயக்கத் துடன் வந்த டிரைவரை அன்பொழுகப் பேசி வரவேற்ற கடைக்காரர், "பத்து நிமிஷம் நீங்களும் பாப்பாவும் வெயிட் பண்ணுங்க. அந்த நகைக்கு மாடியிலே மெருகு



"போடும் வேலை நடக்குது, வாங்கிட்டுப் போயிடுங்க!" என்று கூறிவிட்டு, அதை வாங்கிவரச் செல்வது போல் மாடி ஏறி நடந்தார்.

டிரைவரும் சரியான இடை வேட்டை கிடைத்த பூரிப்பில் நாற்காலியில் அமர்ந்து தேவியோடு பேச்சுக் கொடுக்கலானான்.

மாடிக்குச் சென்ற நகைக்கடை உரிமையாளர் அங்கிருந்து டெலிபோன் மூலம் போலீசுக்குத் தகவல் கொடுக்க ஐந்தே நிமிடங்களில் போலீஸ் ஜீப்புகள் வந்து கடையை மறித்தன. அதைக் கண்டு பதறிப் போனான் டிரைவர்.

மோசம் போனதை அறிந்து மெல்ல வெளியே நழுவிக் காருக்குள் ஏறிய டிரைவர் வண்டியை ஸ்டார்ட் செய்யப் பார்த்தான். சாவியைக் காணோமே!

அதற்குள் போலீஸ் அந்தக் கடத்தல்காரர்களைச் சுற்றி வளைத்தது.

காவல் நிலையத்தில் கட்டி வைத்து உதைத்த உதையில் கடத்தல் கும்பல் உண்மை முழுவதையும் கடுகைக் கூட மறைக்காமல் கக்கிவிட்டார்கள்.

வசதியுள்ள வீட்டுக் குழந்தையான தேவியைக் கடத்திச் சென்று பெருந்தொகையைக் கறக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். அதற்காக நீண்ட காலம் நோட்டம் விட்டு வழக்கமாகத் தேவியைப் பள்ளிக்கு அழைத்துச் செல்லும் ரிக்ஷாக்காரன் கோபாலைக் கடத்திக் கொண்டு போய் கட்டிப்போட்டு தேவியைப் பற்றிய விவரங்களை அறிந்து கொண்டு, தங்கள் பணியைத் தொடங்கி இருக்கிறார்கள்.

அன்று காலை பள்ளி புறப்படும் போது தற்செயலாகக் கீழே கிடந்த அந்த நகைக் கடை பில் தேவியின் கண்களில் பட்டிருக்கிறது. அதை எடுத்து அம்மாவிடம் கொடுக்கப் பத்திரப்படுத்தித் தன் புத்தகப் பையில் வைத்திருக்கிறாள் அவள். காரில் கடத்தல்காரர்களின் பிடியில் சிக்கிவிட்ட தேவிக்கு அந்த பில்லின் நினைவு வந்துவிட, புத்திசாலித்தனமாக அதைப் பயன்படுத்தி அவர்களுக்குத் தண்ணி காட்டி விட்டாள் தேவி.


மறுநாள் செய்தித்தாள்களில் 'பத்து வயதுச் சிறுமியின் சாமர்த்தியம்' என்ற கொட்டை எழுத்துக்களில் தேவியின் சாகசங்கள் பத்திபத்தியாக வெளிவந்தன.

தேவியின் பள்ளியாசிரியர்கள் மட்டுமா? காவல்துறை, பொதுமக்கள் எல்லோருமே அவளது தைரியத்தையும் சமயோசித அறிவையும் வியந்து பாராட்டினர்.




இங்கிலாந்தை ஆண்ட முதலாம் ஜார்ஜ் மன்னருக்கு ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை கூடத் தெரியாது. காரணம், இம்மன்னர் ஜெர்மனியில் பிறந்தவர் என்பது தான். இவர் கடைசிவரை ஆங்கிலம் கற்றுக் கொள்ளவே இல்லை.

- தக்கோலம் அ. முஸ்தபா



# குறுக்குவழிதான் பிடிக்கும்!

**காட்சி - 1**

*(ரமணியின் வீடு. அம்மா பூ தொடுத்துக் கொண்டிருக்க ரமணி வருகிறான்)*

**ரமணி :** அம்மா, எனக்குப் பத்து ருபாய் உடனே வேணும். நண்பர்கள் எல்லாம் சினிமாவுக்குப் போகிறார்கள்.

**அம்மா :** பள்ளியில் படிக்கும் பையனுக்குப் புத்தகம், நோட்டு அவசியம். சீருடை தவிர்க்க முடியாதது. செருப்பு தேவைதான். உணவு அவசியம்தான். ஆனால், சினிமா தேவைதானா? சினிமா ஒரு பொழுதுபோக்கு. அது நம்மை மகிழ்விக்க ஏற்பட்டதே தவிர, அதைப் பார்ப்பதற்காக நாம் படைக்கப்படவில்லை. வசதி மிக்கவர்களுக்கு வேண்டுமானால் இது தேவைப்படலாம். ஆனால் நம்ம நிலைமை அப்படி இல்லே ரமணி!

**ரமணி** *(காதுகளை மூடிக் கொண்டு):* ஆரம்பிச்சுட்டீங்களா உங்க புராணத்தை?

**அம்மா :** புராணம் இல்லே ரமணி, உண்மை நிலை. அப்பா இல்லாத துன்பம் உனக்குத் தெரியக் கூடாது என்பதற்காக. நீ படிக்க வேண்டும் என்பதற்காக நான் எப்படியெல்லாம் பாடுபடுகிறேன் தெரியுமா ரமணி? இரண்டு வீடுகளில் சமையல் வேலை, வேலைக்காரி வேலை. ஒழிந்தபோது பூத்தொடுக்கும் வேலை என்று நாள் முழுக்க மூச்சுக் கூட விட நேரமில்லாமல் கடுமையாக உழைக்கிறேன். எல்லாம் எதுக்கு? உனக்காக. நீ துன்பம் தெரியாமல் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்பதற்காக.

**ரமணி :** உன்னை யாரும்மா இப்படி உழைக்கச் சொல்றாங்க? நானும் ஏதாவது வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கறேன்னுதானே சொல்றேன்? எனக்குப் படிப்பு போதும்.

**அம்மா :** அப்படிச் சொல்லாதேடா ரமணி. சினிமா பார்க்க முடியலைங்கிறதுக்காக படிப்பை விட்டுட்டு வேலைக்குப் போறேங்காதே. நீ நல்லாப் படிச்சு பெரிய நிலைக்கு வரணும்.

**ரமணி :** *(அலுத்தபடி)* மறுபடி புராணத்தை

ஆரம்பிச்சுடாதே.

(போகிறான்)

### காட்சி - 2

*(ரமணியின் வீடு. ரமணி ஏதோ படித்துக் கொண்டிருக்க அம்மா கோபத்துடன் வருகிறாள்.)*

**அம்மா** *(வந்து கொண்டே)* : ரமணி, ரமணி... *(சட்டையைப் பிடித்து இழுத்து)* ஏண்டா, திருப்பதிக்குப் பிரார்த்தனை, போகப் போறோம்னு பெரிய கடை வீதியில் நேத்து உண்டி குலுக்கினியா? சொல்லுடா?

**ரமணி** : ஆமாம். உண்டி குலுக்கினேன்.

**அம்மா** : சாமி பெயரைச் சொல்லி உண்டி குலுக்கியிருக்கியே? இது தப்புன்னு உனக்குத் தோணவே இல்லையா? நீ படிக்கிற பையன் தானே? தெய்வத்தை ஏமாத்தலாமா?



**ரமணி** : ஏம்மா இப்படிக் கத்தறே? எனக்கு சினிமா பார்க்கப் போகணும். போல இருந்தது. நீயும் காசு தரமாட்டேன்னுட்டே. அதனால பொய் சொல்லி உண்டியல் குலுக்கினேன். சாமி பெயரைச் சொன்னதால் இருநூறு ரூபாய்க்குமேல் உண்டில சேர்ந்துதும்மா! இன்னும் மூன்று மாதங்களுக்கு நான் உங்களிடம் சினிமா போகப் பணம் கேட்க மாட்டேன். அதுமட்டும் இல்லேம்மா. இனிமே அடிக்கடி இப்படி அக்கம் பக்கத்து ஊர்களில் உண்டி குலுக்கப் போறேன். நிறையப் பணம் சேர்த்து ரெண்டு கிரைண்டர் வாங்கிப் போடறேம்மா. அரவை நிலையம் ஆரம்பிச்சு உங்களை உட்கார வைக்கிறேன். சமையல் வேலை, எடுபிடி வேலைக்குப் போகாம இருந்த இடத்தில் இருந்தபடி, நீங்க நிறையச் சம்பாதிக்கலாம்.

**அம்மா** : *(அதிர்ச்சி அடைந்து)* ரமணி, எனக்கு அரவை நிலையமும் வேண்டாம். கைநிறையக் காசும் வேண்டாம். நீ ஒழுங்கா இருந்து படிச்சு உழைச்சு முன்னுக்கு வரணும். ஊரை ஏமாத்திப் பிழைக்கிற வசதியான வாழ்க்கை நமக்கு வேண்டாம்.

**ரமணி** : எனக்கு வேணுமே? எனக்கு வேண்டிய வசதியைப்



யாராவது கூறுவாங்களா? தீய வழியில் வரும் பணம் நமக்கு வேண்டாம்.

**ரமணி** : எனக்கு வேண்டும்.

**அம்மா** : *(கோபத்துடன்)* வசதியான வாழ்க்கை வாழ வேண்டும் என்று நான் ஏங்கவில்லை. நாணயமாக, உழைத்துப் பிழைக்க வேண்டும். உன்னையும் படிக்க வைத்து உயர்த்த வேண்டும் என்றுதான் நான் ஆசைப்படுகிறேன். கஷ்டமாக இருந்தாலும், இதுதான் பாவமில்லாத இலட்சிய வாழ்க்கை.

**ரமணி** : எனக்கு அதுக்குப் பொறுமை இல்லை. சினிமா பார்க்காமல், வேண்டியதை வாங்கி ஒட்டலில் தின்னாமல் கஷ்டப் படுவது ஒரு வாழ்க்கையா? குறுக்கு வழியில் சில மாதங்கள் நடந்தால் போதும்.

பண்ணித் தர உங்களால முடியலேங்கும்போது, என் வழியில் நான் சம்பாதித்துக் கொள்ளவாவது நீங்கள் அனுமதிக்கத்தான் வேண்டும். அரவை நிலையம் ஆரம்பித்த பிறகு இந்த வழிக்குப் போக மாட்டேன். அது வரை நீங்கள் அனுமதிக்கத்தான் வேண்டும்.

**அம்மா** : இரண்டு நாள் மட்டும் விஷம் குடிக்கிறேன் என்று பிறகு நிறுத்திவிடலாம்.

**அம்மா** *(கோபம் மாறாமல்)* : எனக்கு அடங்கிய பிள்ளையாக, கஷ்டப்பட்டாலும் ஒழுங்கான வாழ்க்கை வாழ்ந்து, படித்து உயர விரும்பினால் இந்த வீட்டில் இரு.

**ரமணி** : எனக்குக் குறுக்கு வழிதான் பிடிக்கிறது. நான் என் நண்பர்களுடன் தங்கிக் கொள்கிறேன். (போகிறான்)

## காட்சி - 3

*(செல்வந்தர் பொன்னம்பலத்தின் வீடு. பொன்னம்பலம் பேப்பர் படித்துக் கொண்டிருக்க அம்மா வருகிறாள்.)*

**பொன்னம்பலம்** : வாங்கம்மா. நான்தான்

உங்களை வரச்சொன்னேன். இந்த விண்ணப்பத்தைப் படிச்சுப் பாருங்க. அதில் கேட்டிருக்கும் தகவல்களை முதல்ல பென்சிலில் எழுதிக் காட்டுங்க. சரியா இருக்கான்னு பார்க்கிறேன். பிறகு, பேனாவில் எழுதலாம்.

*(கொடுக்கிறார்)*

**அம்மா** : குழம்பு கொதித்துக் கொண்டிருக்கு. அதைக் கவனிச்சிட்டு, சமையலையும் முடிச்சிட்டு இந்த விண்ணப்பத்தைப் படிச்சுப் பார்த்து, பூர்த்தி பண்ணறேன் ஐயா.

**பொன்னம்பலம்** : நீங்க எங்க வீட்டுக்கு வேலைக்கு வந்து ஆறு மாதம்தான் ஆச்சு. பேருதான் சமையல் காரியே தவிர, நீங்க எங்க வீட்டில் செய்யாத வேலை இல்லை. பார்வை இல்லாத என் அம்மா, நடக்க முடியாத என் மனைவி, பாசத்துக்கு ஏங்கும் என் மகள் சுதா, எல்லோருக்கும் நீங்கள் நடமாடுகின்ற தெய்வம் மாதிரி இருக்கிறீர்கள். உங்களுக்கு ஏதாவது உதவ நான் விரும்புகிறேன். இரண்டு கிரைண்டர்களை வாங்கிப் போட்டு அரவை நிலையம் ஆரம்பிக்க வங்கியிடம் கடன் வாங்க விண்ணப்பிக்கும் ஃபாரம்தான் இது. படித்துப் பாருங்கள்.

*(அம்மா உள்ளே போகிறாள். வாசலில் ரமணியின் குரல் கேட்கிறது. வருகிறான்.)*

**ரமணி** *(பணிவுடன்)* : ஐயா, என் பெயர் குமார். எனக்கு அப்பா அம்மா யாரும் இல்லே, அனாதை. தெரிந்தவர் வீட்டில் இருந்து படிக்கிறேன். நீங்கள்தான் என் படிப்புக்கு ஏதாவது உதவ வேண்டும்.

**பொன்னம்பலம்** : கேட்கவே மனசுக்குக் கஷ்டமா இருக்கு. தம்பி, அப்பா அம்மா இல்லாத அனாதையா நீ! என்ன கொடுமை! நான் வசதியா இருந்தப்ப உன் மாதிரி பல அனாதைப் பிள்ளைகளை நானே இந்த வீட்டில் தங்கவைத்து ஆதரவு தந்து படிக்க வைச்சிருக்கேன். இப்போ என் கை நொடிச்சுப் போச்சு.

**ரமணி** : ஐயா, கைவிரிச்சுடாதீங்க ஐயா. உங்களை மாதிரி பெரிய உள்ளம் படைச்சவங்க என் மாதிரி அனாதைகளைக் கைதூக்கி விடலேன்னா எங்களுக்கு ஏது விமோசனம்? ஏதாவது உதவுங்கையா.

**பொன்னம்பலம்** : என்னால் ஆனதைத் தரேன் தம்பி. உன்னை வெறுங்கையோட அனுப்ப மாட்டேன். ஆமாம், நீ எந்த ஊருன்னு சொன்னே?

**ரமணி** : எதுவுமே சொல்லலையே? எனக்குச் சொந்த ஊர் கடலை வாக்கம். பரங்கிப்பேட்டைக்குப் பக்கத்துல.

**பொன்னம்பலம்** *(மகிழ்ச்சியோடு)* : அட, கடலைப்பாக்கமா? நம்ம சமையற்கார அம்மாவுக்கும் கடலைப்பாக்கம்னுதானே சொன்னாங்க? *(உள்ளே திரும்பி)* அம்மா, இங்கே வந்து பாருங்க. உங்க கடலைப்பாக்கத்துலேருந்து ஒரு பையன் அனாதைன்னு உதவி கேட்டு வந்திருக்கான். சாப்பிடச் சொல்லி ஐந்தோ பத்தோ தரலாம்னு இருக்கேன். இலையைப் போடுங்க. சாப்பிட வரோம்.

**ரமணி** *(தனக்குள் திகிலுடன்)* : இது என்



"எனக்கு ¼ பரீட்சை, ½ பரீட்சை லீவு மாதிரி முழுப்பரீட்சை லீவு பிடிக்கவே பிடிக்காது!"

"ஏன்... அதிக நாள் லீவு விடறதாலா?"

"ஊஹூம்; லீவு முடிஞ்சதும் 'ரிஸல்ட்' வருதே...!"

- சீர்காழி வி. ரேவதி

னடா கிணறு வெட்ட பூதம் கிளம்பிட்டது! யாரா இருந்தால்தான் என்ன? சமயத்துக்குத் தகுந்ததுபோல் திரிச்சு விட வேண்டியதுதான். எனக்கு என்ன கற்பனைக்குப் பஞ்சமா? இந்த ஆளு சுத்த தொண தொணப்பு. ஏமாளி போல இருக்கு. எப்படியோ பணம் பெயர்ந்தால் சரி.



"எங்கே எல்லோரும் கூட்டமா போயிட்டிருக்கீங்க?"

"பக்கத்து ஊருக்குத்தான். 'பிளேக்' இல்லாத சுத்தமான எலி நிறைய இருக்காம்!

- மேலப்பாதி நாகராஜ்.

## காட்சி - 4

*(பொன்னம்பலத்தின் வீடு. பொன்னம்பலமும் ரமணியும் இலைக்கு முன் உட்கார்ந்து கொண்டிருக்க, அம்மா வந்து திகைக்கிறாள். ரமணியும் திகைக்கிறான்.)*

**பொன்னம்பலம் :** என்னது! ஒருத்தரை ஒருத்தர் பார்த்துத் திகைக்கிறீங்க! தம்பி குமார்... இவங்களுக்கும் உங்க ஊர் கடலைப்பாக்கம் தான். *(அம்மாவிடம் திரும்பி)* அம்மா, இந்தத் தம்பிக்கும் உங்க ஊர் தானாம். தாய் தந்தையில்லாத அனாதையாம். உதவி கேட்டு வந்திருக்கான். இந்த அனாதைத் தம்பியைப் பத்தி உங்களுக்குத் தெரியுமாம்மா?

**அம்மா** *(குரல் தழுதழுக்க)* : ரொம்ப நல்லாத் தெரியுங்க...

*(உள்ளே போகிறாள்)*

**பொன்னம்பலம் :** அப்புறம் என்ன? தம்பி, இவங்க சொல்லிட்டா அதுக்குமேல எதுவுமே யோசிக்க வேண்டாம் தம்பி... இவங்க மாதிரி ஒருத்தரை நான் கதைகளில்கூடப் படித்ததில்லை. உண்மையான உழைப்பு. எங்க வீட்டில் இவங்க மனசு வைச்சா கண்டுபிடிக்க முடியாதபடி ஏராளமாகத் திருடலாம். ஆனால் இவங்க கை ரொம்ப ரொம்ப சுத்தம். நன்கொடை, அன்பளிப்பு, இனாம்னு எதைத் தந்தாலும் வாங்கறதில்லை. *(அம்மா குழம்பு ஊற்ற வருகிறாள்)* ஏம்மா, அந்த விண்ணப்பத்தைப் படிச்சீங்களா?

**அம்மா :** ஐயா, அந்த விண்ணப்பம் எனக்குப் பொருத்தமானது இல்லீங்க. கணவர், பிள்ளைகள் இல்லாத அனாதை என்பதை உறுதிப்படுத்தும்படி கேட்டிருக்காங்களே? எப்படி ஐயா கூசாமல் பொய்யை எழுதுவேன்?

**பொன்னம்பலம் :** ஏம்மா? உங்களுக்கு இருந்த ஒரே மகனும் ஓடிப் போய்ட்டான்னு சொல்றீங்க! இப்படிப்பட்ட தாயுடன் வாழக் கொடுத்து வைக்காத அந்தக் கிறுக்குப் பிள்ளை இருந்தென்ன போயென்னம்மா?

**அம்மா :** *(பதறி)* ஐயா, உயிருடன் பிள்ளை எங்கேயோ இருக்கும்போது அனாதைன்னு எழுதுவது ஊரை ஏமாற்றுவதுதானே? எனக்கு அந்த வங்கிக் கடன் வேண்டாங்க

*(உள்ளே போகிறாள்)*

**பொன்னம்பலம் :** தம்பி குமார்... இந்த அம்மாவின் உயர்ந்த பண்பைப் பார்த்தாயா? அரிச்சந்திரன் காலத்தில் பிறந்திருக்க வேண்டிய புண்ணியப் பிறவி இந்தம்மா. இவங்களை மாதிரி நியாயம் தவறாத உறுதியான அறிவுடையவர்கள் எத்தனை துன்பத்தை அனுபவித்தாலும் அதைப் போக்கிக் கொள்ள இழிவுச்

செயல்களைச் செய்ய மாட்டார்களாம். இதைத் திருவள்ளுவரே கூறுகிறார். அந்தக் குறளுக்கு நடமாடும் இலக்கண மாக இவர்கள் இருக்கிறார்கள் *(எழுந்து கை கழுவப் போகிறார்.)*

*(அம்மா வருகிறாள்)*

**ரமணி :** *(விசும்பலுடன்)* அம்மா, என்னை மன்னித்து விடுங்கள்.

**அம்மா :** எதற்காக மன்னிப்பு? நான் உயிருடன் இருக்கும்போதே என் எதிரி லேயே தாய் தந்தையில்லாத அனாதை என்று கூசாது பொய் சொன்னதற் காகவா? திருப்பதிக்கு என்று பொய் சொல்லி உண்டி குலுக்கியபோதே நீ இந்த நிலைக்கு ஜகப்புரட்டனாக வந்து விடுவாய் என்பதை எதிர்பார்த்தேன். ஏமாறவில்லை!

**ரமணி :** அம்மா, உயிருடன் இருக் கும்போதே நான் அம்மா இறந்துவிட்ட தாகக் கூறியதைக் கேட்ட பிறகும், அனாதை என்று கூறி பாங்கில் கடன் வாங்க மறுத்துவிட்டீர்களே அம்மா... என்னிடம் போதிய பணம் சேர்ந்துவிட் டது.

**அம்மா :** திருப்பதி, அனாதை என்று நாடகமாடிச் சேர்த்ததுதானே?

**ரமணி :** ஆமாம் அம்மா. இனிமேல் நான் இப்படி ஊரை ஏமாற்ற மாட் டேன். ஒழுங்காகப் படிக்கிறேன். என் னிடம் உள்ள பணம் அரவை நிலையம் வைக்கப் போதுமானது.

**அம்மா :** ரமணி, நீ மண் பானை யைப் பார்த்திருக்கிறாயா? சுட்ட மண் பானைக்கும், சுடாத பச்சை மண் பானைக்கும் உள்ள வித்தியாசம் உனக் குத் தெரியுமா?

**ரமணி :** ஏன் தெரியாமல் அம்மா? பச்சை மண்பானையில் நீரைவிட்டால், பானை கரைந்து நீர் வெளியே போய் விடும். சுட்ட மண்பானையில் விடும் நீர் பத்திரமாக இருக்கும்.

**அம்மா :** வஞ்சகமான வழிகளில் பணம் சேர்த்து வாழ நினைப்பது பச்சை மண்பானையில் நீரை விட்டு வைப்பது போன்றது. இதை நான் கூற வில்லை. திருவள்ளுவர் கூறியிருக்கிறார்.

**ரமணி :** பெற்ற தாயை நன்றாக வாழ வைக்கத்தானே இதைச் செய் தேன்?

**அம்மா :** பசியோடு இருக்கும் தாயின் பசியைப் போக்கக் கூட நியா யத்திற்குப் புறம்பான வழிகளைப் பயன் படுத்தலாகாது என்கிறார் திருவள்ளு வர்.

**ரமணி :** இதுதான் உங்கள் முடிவா?

**அம்மா :** நியாயத்திற்கும் மனசாட் சிக்கும் புறம்பான வழிகளில் பணம் சேர்த்து வசதியாக வாழ்வது உண்மையில் மகிழ்ச்சி அல்ல; இகழ்ச்சியே. நீ போக லாம். நீ பொன்னம்பலம் ஐயாவை ஏமாற்ற நான் அனுமதிக்க மாட்டேன்.

**ரமணி :** *(கண்கலங்க)* அம்மா அம்மா *(விசும்புகிறான்)*

**அம்மா :** ஏண்டா கலங்குகிறாய்? உன்னைப் பொறுத்தவரை நான் ஏற்



**"ஏண்டா... வாட்ச்மேன் வேலையை விட்டுட்டே?"**

**"போடா. கொஞ்சம் நேரம் கூட 'கண் அசர' முடியலை!"**

**- எம். கே. வேங்கவேல்.**

கௌவே இறந்தவள்தானே? நீ விரும்பியபடி குறுக்கு வழியில் பணம் சேர்த்து விட்டாய். நிம்மதியாக இருக்க வேண்டியதுதானே?

**ரமணி** : தன் வீட்டுச் சமையற்காரி என்று உன்னைக் காட்டி இந்தப் பொன்னம்பலம் எத்தனை பெருமைப்பட்டுக் கொள்கிறார்! உன் அருமை எனக்குத் தெரியாமல் போச்சே! அம்மா, எனக்குப் பணம் வேண்டாம். கஷ்டத்தைத் தாங்கிக் கொண்டு உங்களுடைய உண்மையான அன்பை அனுபவித்துக் கொண்டு படிக்க வேண்டும். என் அம்மா என்று உங்களைப் பெருமையுடன் அழைக்கும் பேறு எனக்குக் கிடைக்க வேண்டும்.

**அம்மா** : அப்படியானால் பொன்னம்பலம் ஐயாவிடம் போய் காலில் விழுந்து நடந்ததைக் கூறி மன்னிப்புக் கேள். ஊரை ஏமாற்றிச் சேர்த்துள்ள பணத்தை ஏதாவது அனாதை இல்லத்துக்குக் கொடு.

**ரமணி** : இதோ போறேம்மா....

**பொன்னம்பலம்** *(வந்து கொண்டே)*: நானே வந்துவிட்டேன் ரமணி. எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். உன்னை அம்மா என்று அழைக்கும் பெருமை மறுபடி ரமணிக்குக் கிடைத்ததுபோல், நீ இந்த வீட்டில்தான் இருக்கிறாய் என்ற பெருமை தொடர்ந்து எங்களுக்குக் கிடைக்கும்படி செய்யம்மா. ரமணியை இங்கேயே பள்ளியில் சேர்த்து விடுகிறேன்.

**இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்**
**நடுக்கற்ற காட்சி யவர்.**
**(குறள் 654)**

**ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை.**
**(குறள் 656)**

**சலத்தால் பொருள்செய்தே ஏமாற்றுதல் பசுமண்**
**கலத்துள்நீர் பெய்துஇரீ இற்று.**
**(குறள் 660)**

# நாளை உலகை ஆள்பவர்!



**நா**ளை உலகை ஆளப் போகும்
நல்ல நல்ல பிள்ளைகள்
ஆளாய் உயர்ந்து கல்வி கற்று
ஆற்றல் கொள்ள வேண்டுமே.

சின்னப் பிள்ளை பிஞ்சுக் கரங்கள்
செய்வது ஒன்று ஒன்றுதான்
கன்னம் தொட்டுச் சுற்றி அணைத்துக்
காட்டி எதையும் கேட்பதே.

பாடி ஆடும் பச்சைப் பிள்ளை
பாவம் வேலை செய்வதோ
வாடி வதங்கி நாள் முழுதும்
வயலில் சேற்றில் நிற்பதோ?

தீக்குச் சிக்கி மருந்தைச் சுற்றி
தினமும் சூட்டில் கிடப்பதோ
போக்க வேண்டும் இந்தக் கொடுமை
புதிய மாற்றம் செய்குவோம்.

குழந்தை வேலை செய்து வாடும்
கொடுமை விலகச் செய்குவோம்
குழந்தை என்றும் பள்ளி சென்று
கூடி ஆடச் செய்குவோம்!

— செல்ல கணபதி

# கேளுங்கள் சொல்லப்படும்- சேரநம்பி

● அம்பாரி, பிசாசு இரண்டும் தமிழ்ச் சொற்களா? இல்லை சம்ஸ்கிருதமா?

- மு. கிருஷ்ணகுமாரி, தாமரைக்குளம்.

இரண்டும் தமிழ்ச் சொற்களும் அல்ல; சம்ஸ்கிருதமும் அல்ல! 'அம்பார்' என்ற பாரசீகச் சொல்லின் திரிபு அம்பாரி. 'பைசாஸ்' என்ற இந்துஸ்தானியச் சொல்லின் திரிபு 'பிசாசு.'

● இதுவரை பூச்சிகளை வைத்து யாராவது கண்காட்சி நடத்தியிருக்கிறார்களா?

- வா. பாலாஜி, சீர்காழி.

கனடா நாட்டின் மான்ட்ரீல் நகரில் சுமார் ஐந்து லட்சம் பூச்சிகளைக் கொண்ட ஒரு நிரந்தரக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கண்காட்சியின் கட்டடம் கூட பூச்சி வடிவிலானது. உலகில் சுமார் பத்து லட்சம் பூச்சி வகைகள் உள்ளனவாம். இவைகளுள் பாதி இந்தக் கண்காட்சியில் உள்ளன!

● டீசலுக்குப் பயன்படக் கூடிய தாவர எண்ணெய்



கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

- மா. வெள்ளையம்மாள், கரூர்.

டீசலாகப் பயன்படுத்தத்தக்க மாற்று எரிபொருள் எண்ணெய் ஒன்றைக் கண்டுபிடிக்க உலகெங்கும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. கலிபோர்னியா பல்கலைக் கழகத்தின் மெல்வன் கால்வின் என்பவர், "கோபைபெரா" என்ற மரத்தின் எண்ணெயைக் கொண்டு டீசல் எஞ்ஜினை இயக்க முடியும் என்பதைக் கண்டுபிடித்துள்ளார். இதைச் சுத்தப்படுத்தாமல் அப்படியே பயன்படுத்த முடியுமாம்! பரிசோதனை அளவில் வெற்றிதான். நடைமுறைக்கு இன்னும் வரவில்லை.

● ரோமானியர்கள் காலத்திலேயே லண்டன் மாநகர் இருந்தது என்பது உண்மைதானா?

- வா. பண்டரிநாத், பிட்சாண்டார்கோவில்.

உண்மைதான். ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே லண்டன் இருந்திருக்கிறது. அப்பொழுது இதன் பெயர் லண்டினிம் (Londinium).

● மலை ஆடுகளின் (IBEX) வயதை

எப்படிக் கண்டுபிடிக்கிறார்கள்?

- வி. சின்னத்தாயார்,
மேட்டுப்பாளையம்.

மலை ஆடுகளின் கொம்பில் அடுக்குகள் இருக்கும். இந்த அடுக்கு வரிகளைக் கொண்டு வயதைக் கணக்கிடுவார்கள்.

● பால்பேரிங்கைக் கண்டுபிடித்தது யார்?

- சைமன் துரைராசன்,
சாத்தூர்.

உரசலைத் தவிர்க்க இப்பொழுது பயன்படுத்தப்படும் பால் பேரிங்குகள் எனப்படும் உலோக உருண்டைகள் 1794 ஆம் ஆண்டுதான் பிலிப்ஸ் வேகன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் இந்தக் கண்டுபிடிப்புக்கு முன்னோடி பென்வென்டோ சிலினி (Benvenuto Cellini) என்ற இத்தாலியச் சிற்பி. இவர் வீனஸ் தேவதைக்காக மரத்திலே ஒரு சிலையைச் செய்தார். அதன் முன்னழகு பின்னழகு இரண்டையும் மக்கள் கண்டு களிக்க வேண்டும் என்பதற்காக இந்தச் சிலையை எளிதாகச் சுழலும்படி இதன் பீடத்தின் கீழ் மரத்தால் ஆன உருண்டைகளை வைத்தார். இது நடந்தது 1543 ஆம் ஆண்டில். இதுவே பால்பேரிங்கின் முன்னோடி முயற்சி.





● இன்சுலீன் என்ற சர்க்கரை வியாதிக்கான மருந்தைப் போட்டுக் கொண்ட முதல் நோயாளியின் பெயர் தெரியுமா?

- முகம்மது சுக்கூர், கடலூர் - 2.

1921 ஆம் ஆண்டு இன்சுலின் மருந்தை ஃப்ரெட்டிரிக் கிராண்ட் பேன்டிங்கும், சார்லஸ் பெஸ்கரும் கண்டுபிடித்தார்கள். இதை முதலில் போட்டுக் கொண்ட பெருமைக்குரிய நோயாளி லெனார்டு தாம்சன் என்ற கனடா நாட்டுச் சிறுவன். இவனுக்கு வயது 14. போட்டுக் கொண்ட ஆண்டு 1922.

● கோபுரமும் விமானமும் ஒன்றுதானே?

- பெரியதாசன்,
செங்குன்றம்.

இல்லை. இறைவனின் (சாமியின்)

## காளான்கள் ஏன் வெளுப்பாக உள்ளன?


கருவறைக்கு மேல் (கர்பக்கிரகம்) உள்ளது விமானம். ஆலயத்தின் நுழைவாயிலில் உள்ளது கோபுரம்: முன்பெல்லாம் விமானம் சிறியதாகவும், கோபுரம் உயரமாகவும் இருந்தது. ராஜராஜ சோழன்தான் விமானத்தை உயரமாக்கி, கோபுரத்தைச் சிறியதாக்கி, பெரிய கோவிலைத் தஞ்சையில் அமைத்தான்.



● இந்துக் கடவுளர்களில் மூன்று கண்களை உடைய சாமிகள் உள்ளனர். இதேபோல் மூன்று கால்களை உடைய சாமிகள் உண்டா?

- கூ. ஜெயசிலன்,
புதுவை - 4.

காய்ச்சல் நோயை குணமாக்கவல்ல ஜ்வர தேவதை என்று ஒரு பெண் தெய்வம் உண்டு. இதற்கு மூன்று கால்களே! பிருங்கி என்று ஒரு முனிவர். இவருக்கும் மூன்று கால்களே!




● 666 என்கிற எண் துரதிர்ஷ்டமானது என்று ஏன் எண்ணுகிறார்கள்?

- ஜோ. பிரசன்னமேரி,
நாகர்கோவில்.

விசாரித்த வரையில், கிறித்துவர்களின் புதிய ஏற்பாட்டில், 666 என்பது சாத்தானுக்கு உரியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், இதுவே இந்த எண்ணை ஒதுக்கக் காரணம் என்றும் தெரிய வருகிறது. எல்லோருமே இதை ஒதுக்குவதாகத் தெரியவில்லை.



● நேருஜி சிறையில் இருக்கும்போது எழுதிய உலக சரித்திரம் (கிளம்ஸஸ் ஆஃப் வோர்ல்டு ஹிஸ்டரி) போல் வேறு யாராவது சிறையில் இருக்கும்போது இலக்கியம் படைத்திருக்கிறார்களா?

- வி. சுந்தரி, சிதம்பரம்.

பால கங்காதர திலகர் சிறையில் இருக்கையில் கீதைக்கு உரை எழுதினார். அபுல்கலாம் ஆஜாத் குரானுக்கு விளக்கம் எழுதினார். - எல்லாம் சுதந்திரப் போராட்டத்தில் சிறையில் தண்டனை அனுபவித்தபோது!

● 'Scent Posts' என்று விலங்கு நூல்களில் குறிப்பிடுகிறார்களே! இது என்ன?

- வி. தாமோதரன்,
மன்னார்குடி.

நாய், புலி, சிங்கம் போன்ற விலங்குகள் தங்களுக்கு உரிய எல்லைகளை அடையாளமிட சிறுநீர் அல்லது மலம்

கழித்து வைக்கும். இது பயங்கர வாடை வீசும். இப்படி எல்லைக்கு அடையாளமிடுவதையே 'Scent Posts' என்கிறார்கள்.

● **பூச்சிகளைப் பற்றிச் செய்யப்படும் ஆராய்ச்சிக்கு என்ன பெயர்?**


- வி. கடலரசு,
நெய்வேலி.

பூச்சி இயல் ஆராய்ச்சிக்குப் பெயர் என்டோமலாஜி (Entomology)

● **காட்ராக்ட் (Cataract) ஆபரேஷன் என்று ஓர் அருவியின் படம் போட்டு ஒரு செய்தி வெளியாகியிருந்தது. காட்டரேட்டுக்கும் அருவிக்கும் என்ன சம்பந்தம்? கண் படத்திற்குப் பதில் தவறுதலாக அருவியுடன் படத்தைப் போட்டு விட்டார்களா?**

• கா. தேசிகாச்சாரி,
ஸ்ரீமுஷ்ணம்.

காட்ராக்ட் என்றால் கண் படல நோய்தான் நமது நினைவுக்கு வருகிறது. அதனால் ஏற்பட்ட குழப்பமே இது. அகராதியை எடுத்துப் பாருங்கள். காட்ரேட் என்பதற்கு பெரிய நீர்வீழ்ச்சி, மிகப் பெரிய கிடுகிடு பள்ளம் என்ற பொருளும் இருக்கும். அருவி நீரை திசை மாற்றவோ, கிடுகிடு



பள்ளத்தை மூடவோ எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கும் 'காட்ரேட் ஆபரேஷன்' என்று பெயர். இடத்தைப் பொறுத்துப் பொருள் கொள்ள வேண்டும்.

● **கிரிக்கெட்டில், பேட்ஸ்மேன் அடிக்கும் பந்தைக் கண்டுபிடிக்க முடியாது போய்விட்டால் அதற்கு ரன் உண்டா?**

- தூ. மாசிலாமணி,
வடலூர்.

பேட்ஸ்மேன் அடிக்கும் பந்தைக் கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டால் அதற்கும் ஆறு ரன்கள் உண்டு. ஆனால் இதையும் அம்பயர்தான் ஏற்று அறிவிக்கலாம்.

● **காளான்களும் தாவரங்களின் தானே? அவை மட்டும் ஏன் பச்சையாக இல்லாது வெண்மையாக உள்ளன?**

- வா. மங்கை,
கொத்தமங்கலம்.

தாவரங்களுக்குப் பச்சை வண்ணம் தரும் பச்சையம் (Chlorophyll) காளான்களில் குறைவாக இருப்பதால் வெளுத்துக் காணப்படுகின்றன. பச்சைக் காளான்களை உருவாக்க ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

# ஓவிய ராஜா!

ஓவியர் ராஜா ரவிவர்மாவைப் பற்றிப் படித்திருப்பீர்கள். இந்திய ஓவியர்களிலேயே மிகச்சிறந்த இடம் அவருக்கு உண்டு. இயற்கைக் காட்சிகளை வரைந்த முதல் இந்தியர் அவர்தான். கடவுளரின் உருவங்களை வரைய மனிதர்களையே மாடலாகப் பயன்படுத்தியதும் அவரே. தன்னுடைய ஓவியங்கள் செல்வந்தரை மட்டுமல்லாது, மிகச் சாதாரண மக்களையும் சென்றடையச் செய்த முதல் ஓவியரும் அவர்தான். அவருக்கு முன் இருந்த வர்ணச் சித்திரக் காரர்களின் பெயர் மக்கள் முன் இந்த அளவுக்குப் பிரபலமாகவில்லை.

ராஜா ரவிவர்மா 1848-ல், திருவனந்தபுரத்திற்கு 40 கி.மீ. தொலைவில் உள்ள கிளிமனூர் அரண்மனையில் பிறந்தார். பதினான்கு வயதிலேயே அவருடைய கலைத்திறன் வெளிப்படலாயிற்று. திருவாங்கூர் மகாராஜாவின் ஆதரவில் அவருடைய கலை மேலும் வளர்ந்தது.

ரவிவர்மாவிற்கென்று ஓர் ஓவியக் கூடத்தை அவர் அமைத்துக் கொடுத்தார். கலை சம்பந்தப்பட்ட ஐரோப்பிய நூல்களையும் மகாராஜா அவருக்கு வழங்கினார்.

ஆயில் பெயிண்டிங்குகளை வரைவதில் ரவிவர்மா ஆர்வம் காட்டினார். ஆடைகளையும், சரும நிறத்தையும் தத்ரூபமாக ஓவியத்தில் கொண்டுவரும் திறமை அவருக்கு இருந்தது.

ஐரோப்பிய கலைஞர்கள் இந்தியர்களின் உருவத்தை மட்டுமே வரைந்தார்கள். அவர்களால் இந்தியர்களின் உணர்ச்சிகளை முழுமையாக வெளிப்படுத்த இயலவில்லை. ரவிவர்மாவோ தமது ஓவியங்களில் மனித பாவங்களையும் அதாவது உணர்வுகளின் வெளிபாடுகளையும் பிரதிபலிக்க வைத்தார்.


1870-ல் தொடங்கி சுமார் முப்பது ஆண்டுகளுக்கு ரவிவர்மா அயராது உழைத்தார். வியாபாரிகளும், ராஜாக்களும் அவருடைய ஓவியங்களை மிக விரும்பி மேலும் மேலும் 'ஆர்டர்' கொடுத்த வண்ணம் இருந்தார்கள்.

1888-ல் பரோடா மகாராஜா 14 ஓவியங்களை ரவிவர்மாவிடம் வாங்கினார். அதற்கு விலையாகக் கொடுக்கப்பட்ட தொகை ரூபாய் 50,000. அந்நாளில் அது மிகப் பெரிய தொகை.

ரவிவர்மா தன்னுடைய பெயிண்டிங்குகளை வைத்து, வெளிநாடுகளிலும் கண்காட்சி நடத்தி இருக்கிறார். ஆனால், அவர் தன்னுடைய ஓவியங்களுடன் அயல்நாடு போகவில்லை. அப்போதெல்லாம் இந்துக்கள் கடல் கடந்துபோவது பாவமாகக் கருதப்பட்டது.

எனினும், அமெரிக்கா, வியன்னா நாடுகளிலிருந்து அவரது ஓவியங்களுக்குப் பரிசாக பல பதக்கங்கள் வந்து குவிந்தன. ஒரு கட்டத்தில் தாம் போட்டிகளில் பங்கு பெறுவதையே அவர் நிறுத்திக் கொண்டார். மற்ற ஓவியர்களுக்கும் பரிசு கிடைக்கச் செய்ய வேண்டும். அதற்கு நாம் தடையாக இருக்கக் கூடாது என்கிற நல்லெண்ணமே காரணம்!

இந்து புராணக் காட்சிகளும், கடவுள் திருவுருவங்களும் ரவிவர்மாவின் 'சிறப்பு' என்று சொல்ல வேண்டும். கிருஷ்ணர், லட்சுமி, சரஸ்வதி போன்ற கடவுளர்களின் வடிவங்களை அழகிய மனித ரூபத்தில் தீட்டினார் அவர். இராமாயணக் காட்சிகளை வரையும் போது



தன்னுடைய மருமகள் குஞ் குட்டியை, சீதா பிராட்டிக்கு மாடலாகப் பயன்படுத்தினார்.

ரவிவர்மாவின் ஓவியங்களில் சேலைக்கு பிரத்யேக கவனம் செலுத்தப்பட்டிருக்கும். பளிச்சிடும் வண்ணங்களையும், மடிப்புகளையும் அப்படியே ஓவியத்தில் கொண்டு வந்து விடுவார். இந்தியப் பெண்கள் சேலையை தேசிய உடையாக ஏற்றதற்கு ரவிவர்மாவின் பெயிண்டிங்குகளும் கூட ஒரு காரணம் என்று சொல்ல வேண்டும்.

காலையில் நான்கு மணிக்கெல்லாம் அவர் படுக்கைவிட்டு எழுந்து கொள்வார். குளித்து, பூஜை முடித்து உதய ஒளியிலேயே ஓவியம் தீட்ட உட்கார்ந்து விடுவார். நீண்ட நேரம் வரைவார். கற்பனை உந்தப்படும் நேரங்களில, நடுசியிலும் கூட பிரஷ்ஷைக் கையில் எடுத்து விடுவார்.

ரவிவர்மா வசதியாக வாழ்ந்தார். நிறைய பொருட் செலவில் கிளிமனூர் அரண்மனையை அழகுபடுத்தினார்.

திருவாங்கூர் அரண்மனையில் ஐயப்பன் என்ற யானைக்கு மதம் பிடித்து பலபேரைக் கொன்று விட்டது. அதைச் சுட்டுக் கொல்வதாக இருந்தார்கள். ரவிவர்மா அந்த யானையை விலைக்கு வாங்கி வந்து கிளிமனூர் அரண்மனையில் வைத்துப் பராமரித்தார். அது அவரிடம் சிநேகமாய் இருந்தது. கொஞ்ச நாளில் அதற்கு மீண்டும் மதம் பிடித்தது. யாராலும் அடக்க முடியவில்லை. ஆனால், ரவிவர்மாவோ இரண்டு சீப்பு வாழைப் பழங்களைக் காண்பித்து யானையை அமைதிப்படுத்தினார். அவருக்குக் குழந்தைகளிடம் அலாதி அன்பு உண்டு. குழந்தைகளும் அவரை நேசித்தனர்.

1906-ல் தமது 58 ஆம் வயதில் ரவிவர்மா காலமானார். அவர் மறைந்து வெகுகாலம் ஆனபின்பும் இன்றும் கூட அவருடைய ஓவியங்கள், ஆயிரக்கணக்கான வீடுகளை அலங்கரித்துக் கொண்டுதான் இருக்கின்றன. அவற்றின் வண்ணங்கள் துளிக்கூட மாறவில்லை, அவருடைய புகழைப்போல!

— சி.எஸ். தேவநாதன்


# விடுமுறையைக்

'விடுமுறையைக் கழித்தேன்!' பகுதிக்கு, ஏராளமானவர்கள் எழுதியனுப்பியிருக்கிறார்கள். இன்னமும் எழுதி அனுப்பி வருகிறார்கள். இது வரை எழுதி அனுப்பாதவர்கள் இப்பொழுது கூட உடனே எழுதி அனுப்பலாம். உள் நாட்டு உறையில் எழுதி அனுப்பினால் போதுமானது. முழு முகவரியை, பின்கோடு உட்படக் கொடுங்கள்.

## தோட்டக்கலை

**நா**ன் விடுமுறைக்கு எங்கள் மாமா வீட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கு பெரிய தோட்டம் இருக்கிறது. பலவகையான பூச்செடிகளும், அழகு மரங்களும் இருக்கின்றன. தோட்டக்கலையில் விருப்பம் உள்ள நான் புதுமையான சில பூத் தொட்டிகளை வாங்கி வரச் செய்து தோட்டத்தை அழகுபடுத்தினேன், பதியம் போடுதல், ஒட்டுக் கன்று வளர்த்தல் போன்ற நுட்பத்தைக் கற்றுக் கொண்டேன். நான் கேட்பதையெல்லாம் என் மாமா தவறாது வாங்கித் தந்தார்கள். தோட்டம் முன்பை விட இப்பொழுது அழகாக இருக்கிறது. வண்ண விளக்குகள் போட்டு இப்பொழுது இரவிலும் அழகாகக் காட்சி தருகிறது. தோட்டக்கலை பற்றிய முழு விவரங்களையும் தெரிந்து கொண்டேன்.

*ஆர். விசாலம், செம்பனார்கோயில்.*





## காஜா கற்றேன்!

**ப**த்தாம் வகுப்பு முடித்து விடுமுறையில் இருக்கிறேன். இவ்விடுமுறையைப் பயனுள்ள வழியில் கழிக்கத் திட்டமிட்டேன்.

எங்கப்பா சிறிய அளவில் தையல் கடை ஒன்றை வைத்துள்ளார். இவ்விடுமுறையில் துணிகளுக்கு காஜா, பட்டன் தைக்கக் கற்றுக் கொண்டேன். இதனால் எனது அப்பாவுக்கு வேலை குறைந்தது. விடுமுறையைப் பயனுள்ள முறையில் கழித்ததுடன், ஒரு கைத் தொழிலையும் கற்றுக் கொண்டேன்.

*வி. பிரபாகர், விருத்தாசலம்.*

# கழித்தேன்!




## ஹைஹயா, பீச்!

பள்ளி நாட்களில் ஸ்கூல் போகும் அவசரத்தில் 'பீச்' மிகப் பக்கத்திலிருந்தும் தாமதமாக எழுந்திருக்கும் வழக்கத்தால் காலையில் வாக்கிங் போக மாட்டேன். விடுமுறையில் ஊரிலிருந்து வந்த தாத்தாவிற்குத் துணையாகப் போக ஆரம்பித்தேன். காலை, மாலை உற்சாகமான அனுபவம். அது மட்டுமா? மெரினா பீச்சில் உள்ள நீச்சல் குளத்தில் தாத்தாவின் உதவியுடன் தினமும் நீச்சல் கற்றுக் கொண்டேன். 'டைவ்' கூட அடிக்கிறேன்.

நீச்சல் எல்லோருக்கும் தெரிய வேண்டிய ஒரு கலை.

*சு. மதிவாணன், சென்னை - 5.*





## மரம் நட்டோம்!

இந்த விடுமுறையில், எங்கள் மாணவர் சங்கத்தினர் அனைவரும் ஒன்று கூடி, மரம் நடுவது என்று முடிவு செய்தோம். எங்களால் இயன்ற அளவு நிதி திரட்டி மாங்கன்றுகளை வாங்கி தினமும், எல்லோரும் குறிப்பிட்ட புறம்போக்கு நிலங்களிலும் சாலை ஓரங்களிலும் நட்டோம். பிறகு மீண்டும் நட்ட இடத்திற்குத் தினமும் சென்று செடிகளைப் பராமரித்து வேலி போட்டு தண்ணீர் விட்டு வருவதற்கே நேரம் சரியாக இருந்தது. விடுமுறையின் நோக்கம் பயனுள்ளதாகக் கழிக்க வேண்டும் என்பது. நீங்களும் கூட இது போல் மரம் நட்டு சுற்றுச் சூழலை அழகு படுத்தலாமே? எப்படியோ என் நீண்ட நாள் ஆசை நிறை வேறியது.

*பா. ஜெயக்குமார், வந்தவாசி.*



## பயன் மிக்க விடுமுறை!


விடுமுறையில் சித்தி வீட்டுக்குச் செல்வதாக இருந்த பொழுது தாயின் உடல்நிலை பாதிக்கப்பட்டது. அதனால் எங்கள் வீட்டிலேயே இருந்து விட்டேன். ஊருக்குப் போக முடியவில்லையே என்று வருத்தமாக இருந்தது. என் தந்தையின் யோசனைப்படி வீட்டில் இருந்த வேண்டாத துணிகளையும் கண்டா முண்டா பொருள்களையும் கண்டு பிடித்து அப்புறப்படுத்தினேன். தோட்டத்தில் இருந்த குப்பைச் செடிகளையும், புல்செடிகளையும் நீக்கி விட்டு காய்கறிச் செடிகளையும், பூச்செடிகளையும் வைத்தேன். சில செடிகளை வரவேற்பறையிலும் வைத்தேன். அதுமட்டுமா? மாலை நேரத்தில் தட்டெழுத்து வகுப்புக்குச் செல்கிறேன். இவ்வருட கோடை விடுமுறை எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

*மு. பாலாம்பாள், காரைக்குடி.*

## சமைக்கக் கற்றுத் தருகிறேன்!

கோடை விடுமுறையில் என் வீட்டுத் திண்ணையில் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு அடிப்படைக் கணக்குகளையும், அவரவர் பாடப்புத்தகங்களில் இருந்து என்னால் முடிந்தவரை கற்றுத் தந்து வருகிறேன். அதோடு 'ஓவியம் சுலபமாக வரைவது எப்படி?' என்பதையும் தினமும் கற்றுத் தந்து வருகிறேன். எனக்கு முன்பே ஓரளவு சமைக்கத் தெரியும். அதையும் கற்றுத் தந்து வருகிறேன். என்னைப் பொறுத்தவரை மற்றவர்களுக்குப் பயனளிக்கும் முறையில் விடுமுறையைக் கழித்தோம் என்று எனக்கு மனம் நிறைந்திருக்கிறது. இன்னும் என்ன செய்யலாம் என்பதையும் யோசித்து வருகிறேன்.

*இராம. ஜெயகாந்தன், துத்திப்பட்டு.*



# மரகதச்சிலை - 2

கதை : வாண்டுமாமா
சித்திரம் : ரமணி





என் ரகசியம் அம்பலமாகி விடும் போலிருக்கிறதே. நான் இந்த ஓடைக் கரைக்கு வந்திருக்கக் கூடாது.
மரம் கூறியதைக் கேட்டதும் இவள் முகம் ஏன் இப்படிப் பீதி அடைய வேண்டும்? இதில் ஏதோ சூதிருக்கிறது.
பாவம், இந்த மரங்களின் கதையைக் கேட்கப் பரிதாபமாக இருக்கிறது, இல்லையா ரூபமதி? அந்தச் சூனியக்காரியைக் கண்டுபிடித்து, மரங்களாகி நிற்கும் இந்தத் தம்பதிகளுக்கு விடுதலை வாங்கித் தர வேண்டும்.
ரூபமதியே அந்தச் சூனியக்காரி என்பதை அறியாத ஆதித்தன் அவளுடன் ஒரு நகரை அடைகிறான்.
அரசே! நான் மகேந்திரபுரி மன்னர் மன்மதவர்மரின் புதல்வன். தங்கள் நாட்டில் சில காலம் தங்கிச் செல்ல விரும்புகிறேன்.


அரண்மனையிலேயே தங்கும்படி கூறுகிறார் அவர். ஆதித்தனும் அவ்வாறே செய்கிறான். ஒரு நாள் குள்ளன் புலிக்கண்ணனின் வாள், கேடயத்துடன் வெளியே சென்றிருந்தபோது, ஒரு முரடன் கண்களில் அனல் பறக்கக் குள்ளனைத் துரத்துகிறான்.
ஏய், அவலட்சணக் குள்ளா! என் அண்ணனைக் கொன்ற அயோக்கியன் நீதானா?
அவனல்ல - அந்த வாளுக்கு உரிய வீணனைக் கொன்றது நான்தான்...
வீணன் யார் என்பதை என் வாள் அல்லவா முடிவு கட்ட வேண்டும்? என் சகோதரனைக் கொன்றவனைப் பழிவாங்கியே தீருவேன்.
அவர்கள் தங்கள் பகை முடித்துக் கொள்ள வேண்டுமானால், அந்த நாட்டு வழக்கப்படி, பொதுமக்கள் முன்னிலையில் போரிட்டு நேர்மையை நிலைநாட்ட வேண்டுமென்கிறார் மன்னர். மறுநாள் களத்திலே சந்திப்பதாகச் சூளுரைத்துப் போகிறான் சிங்கமுகன். குள்ளன் குழம்பிய உள்ளத்துடன் இரவைத் தூக்கமின்றிக் கழிக்கிறான்.
கானகத்தில் குள்ளன் ஒரு காட்சியைக் கண்டு திகைக்கிறான். ரூபமதி, சிங்கமுகனுடன் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தாள்.
மறுநாள் -


பந்தய மைதானத்தில் பயங்கர ஆயுதங்களுடன் சிங்கமுகனும் ஆதித்தனும் மோதுகிறார்கள்.
அத்தனை சுலபமாக நீ வெற்றியடைந்துவிட முடியாது. நீயும் கீழே இறங்கி வந்து போராடு.
இதோ இந்த என் கோடரியின் வீச்சுக்குப் பதில் சொல்லிவிட்டுப் பேசு!
வெட்டு ஒன்று - துண்டு இரண்டு!
எப்படி என் வாள்வீச்சு?



ஆஹா! இதென்ன புகைமண்டலம்?
சிங்கமுகன் புகைமண்டலத்தினூடே புகுந்து மாயமாகமறைந்துவிடுகிறான். ரூபமதி, ஆதித்தனின் வெற்றிகண்டு, ஆத்திரமும் சிங்கமுகன் மறைவினால் மகிழ்ச்சியும் அடைகிறாள். இதைக் குள்ளன் கவனிக்கத் தவறவில்லை.
வாழ்க...
வாழ்க!.
ஆதித்தா! நீயே வெற்றிபெற்றவன். தோல்விகண்டவன் மோசக்காரன் மாயமாக மறைந்துவிட்டான். நேர்மையான உன் சண்டைகண்டு பாராட்டுகிறேன்.
வீரன் ஆதித்தன்!.
வாழ்க!
வாழ்க
சண்டையிலே வெற்றிபெற்ற என்னைப் பாராட்ட வராவிட்டாலும், என் காயங்களுக்கு மருந்திடவாவது வருவாள் ரூபமதி என்று எண்ணினேன் காளி. எங்கே அவள்?


வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கும் வெள்ளை உள்ளம் படைத்தவர் நீங்கள். ரூப மதியின் தோற்றமும் பார்வையும் எனக்குப் பிடிக்கவில்லை. ஓடைக்கரையிலுள்ள மரம் சொல்லிய கதையைப் போலவே இவள் வாழ்க்கையும் இருக்கிறது.
நேற்றிரவு சிங்கமுகனுடன் கான கத்தில் ரூபமதி பேசிக் கொண் டிருப்பதைக் கண்டேன். உங்கள் வெற்றி அவளிடம் மகிழ்ச்சியை உண்டாக்கவில்லை. இதையெல் லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தால்....
இவ்வுலகில் யாரை நம்புவதென்றே தெரிய வில்லை, காளி.
முதலில் நிர்மலா - இப்போது ரூபமதி.... ம்...
ஆதித்தா, இன்றிரவே நாம் இங்கிருந்து கிளம்பிவிடுவது நல்லதென்று எண்ணுகிறேன்.
காளியின் விருப்பப்படியே அன்றிரவு -
அந்நகரையும் ரூபமதியையும் விட்டுப் பிரிந்து பயணப்பட்ட ஆதித்தன் ஒரு நதிக்கரையில் மரநிழலில் இளைப்பாறிக் கொண்டிருந்தான்.


ஆதித்தா, அதோ பார்! ரூபமதி போலிருக்கிறதே...
இளவரசே! இப்படி என்னைத் தனியே தவிக்கவிட்டு வந்தது, நியாயமா?
காலையில் கண்விழித்ததும் தங்களைத் தேடினேன். காணாமல் எப்படித் தவித்துப் போய்விட்டேன் தெரியுமா? ஏன் இப் படிச் செய்தீர்கள்?
பாசாங்கு போதும். காயம் பட்டுக் கிடந்த என்னைக் காணவராத நீ, இப்போது நீலிக் கண்ணீரா வடிக்கிறாய்?
இதற்காகவா கோபம்? அந்தப்புரத்துப்பெண் கள் தங்களை என் கணவராக்கிச் செய்த கேலியினால் தங்களைச் சந்திக்க வெட்கமடைந்து....


நாடகமாடாதே ரூபமதி. உன்னை எனக்குத் தெரியும். அந்தத் தம்பதிகளை மரங்களாக்கிய சூனியக்காரிதானே நீ?
ஐயோ! இது அபாண்டம் - அநியாயம். இளவரசே! அந்தக் குள்ளனின் பேச்சை நம்பாதீர்கள்.
பெண்ணே! நீ யாராயிருந்தாலும் சரி. இனி என் வழி வேறு, உன் வழி வேறு. நீ போகலாம், என்னைப் பின்தொடராதே.
காளி, குதிரைகளைத் தயார் செய். ரொம்பத் தாகமாக இருக்கிறது. நீர் அருந்தி விட்டு வருகிறேன்.
என் திறமைகள் ஏதும் பயன் படவில்லை. இவனது மனதையும் இனி மாற்ற முடியாது. ஆதியிலிருந்தே குள்ளன் என்னைக் கண்காணித்துவருகிறான் போலிருக்கிறது.இவர்களை இப்படியே விட்டுவிடக் கூடாது... ஆ! அதுதான் சரி... ஓடைநீரில்....?


என் மோதிரத்திலுள்ள இந்த மந்திரப் பொடியைக் கலக் கிறேன்.
தாகம் தணித்துக் கொண்டு போகிறாயா ஆதித்தா! போ, போ... தெளிந்த ஓடை நீரைக் குடித்ததாக எண்ணமோ? போகப் போகத் தெரியும்... ஹ...ஹ...ஹா!
என்ன இது? இந்தக் குன்று இப்படி நடுங்குகிறதே... நில நடுக்கமா?
ஐயோ - மலையே பயங்கரமாகக் குலுங்கிக் குமுறுகிறதே பூகம்பமா - எரி மலையா? நிற்கவும் முடியவில்லையே?
குன்று பிளக்க, அதனுள்ளிருந்து அரக்கன் ஒருவன் தோன்றுகிறான்.


ஆதித்தா! சீக்கிரம் உன் உடைவாளை எடுத்துக் கொள்.
மானிடப் பயல்களே! என் எல்லைக்குள் வந்து உயிரோடு தப்பி ஓட முடியுமா? இதோ -
நல்லவேளை! தப்பினான் ஆதித்தன். அவன் வீரமெங்கே? வலுவிழந்து போய்விட்டானே! ஏன்?
காளி, என் கண்கள் இருண்டு வருகின்றன. கத்தியைத் தூக்கவே சக்தி இல்லை. என் பலமெல்லாம் எங்கே போயிற்று?


அரக்கன் ஆதித்தனைத் தாக்க மறு படி தன் கதாயுதத்தை உயர்த்திய போது, குள்ளன் அவன் காலில் தன் வாளினால் குத்த,அரக்கனின் இலக் குத் தவறுகிறது.
ஹ... ஹா! என்னைக் குத்துபவனும் இருக்கிறானா? இதென்னது? மாயா மோகி னியா?
என்னைத் தெரியவில் லையா மலைவிழுங்கி! நான்தான் நாகநந்தினி. என் தந்தையைப் பகைத்துக் கொண்டாய்.
உன்னைக் குன்றாக்கினார். இப்போது என் மந்திரசக்தியால் நான்தான் உனக்கு விடுதலை அளித் தேன். அந்த அரச குமாரனைக் கொல்லாதே.


அவன் குடித்த ஓடைநீரில் மந்திரப் பொடியைக் கலந்து அவன் பலத்தையெல்லாம் பறித்துவிட்டேன். இப்போது அவன் உனக்கு இணை யல்ல. அவனை உன் கோட்டையில் சிறை வை.
நாகநந்தினியைத் தூக்கிக் கொண்டு, தெம்பிழந்து கிடக்கும் ஆதித்தனையும் இழுத்துக் கொண்டு சென்ற மலைவிழுங்கி, தன் வெண்கலக் கோட்டையிலுள்ள பாதாளச் சிறையில்
ஆதித்தனைச் சிறை வைத்தான்.
ஐயோ! என் பலமெல்லாம் எங்கே? உடைவாளைத் தூக்கவும் தெம்பில்லையே. என் உள்ளமும் உடலும் ஏன் இப்படி நடுங்குகின் றன. இந்தப் பாதாளச் சிறை யிலேயே நான் செத்து மடிய வேண்டியதுதானா?
நாகநந்தினி! இனி நீயே இந்தக் கோட்டையின் தலைவி. எனக்கு விடுதலை அளித்த உனக்கு விருந்து வைக்கிறேன் வா.

(தொடரும்)



சிரி...
''நேத்து நாடகத்துல குரங்கு வேஷம் போடறதுக்கு ரொம்பக் கஷ்டப்பட்டீங்களா?''
''இல்லையே! நான் வால் மட்டும்தான் வைச்சேன்.''
- சீர்காழி வி. கௌரி
''என் பையன் எறும்பு மாதிரி இருப்பான்!''
''அவ்வளவு சுறுசுறுப்பா?''
''இல்லை. எல்லோரையும் கடித்துக் கொண்டே இருப்பான்.''
-ஆரணி ஞானமூர்த்தி
''பள்ளிக்கூடத்திலே தேசிய கீதம் பாடறப்ப உங்க பேரு வருது தாத்தா!''
''எப்படி?''
''பாரத பாக்யவி தாத்தா!''
- ரத்னா
''நாய் கடிக்கு என்னடா செய்யணும்...?''
''நாய்கிட்ட போய் சேட்டை பண்ணினா போதும்!''
- சீர்காழி வி. ரேவதி
''பாம்பு கடிச்சதும் கீறி விட்டால் சரியாப் போயிடும்.''
''அந்த நேரத்துல 'கீரி'-க்கு எங்கேடா போறது...?''
- சீர்காழி வி. ரேவதி



# கெட்ட பெயர்

ஒருமுறை அக்பர் தோட்டத்தில் உலாவச் சென்ற போது ஒரு கல் தடுக்கி விழுந்து அடிபட்டுக் கொண்டார். உடனே தோட்டக்காரன் மீது கடும் கோபம் கொண்டு அவனைத் தூக்கில் போட உத்தரவிட்டார்.

பீர்பாலுக்கு இதுமிகப் பெரிய தண்டனையாகத் தோன்றியது. அவர் சிறைச் சாலைக்குச் சென்று தோட்டக்காரனிடம் ஒரு யோசனை கூறினார்.

மரபுப்படி மறுநாள் தோட்டக்காரனிடம் இறப்பதற்கு முன் அவனுடைய கடைசி விருப்பம் கேட்கப்பட்டது.

அவன், "மன்னரைக் காண வேண்டும், வணங்க வேண்டும்" என்றான். செய்தி அக்பருக்குப் போயிற்று. அக்பர், மரண தண்டனைக் கைதியின் கடைசி விருப்பத்தை நிறைவேற்ற அவைக்கு வந்தார்.

தோட்டக்காரனை விடுவித்தார்கள். அவன் அக்பருக்கு அருகில் பணிவோடு வந்தான்.


திடீரென்று அவன் பணிவு மறைந்தது. கையை ஓங்கி அவருடைய காலில் ஓர் அடி அடித்தான். எல்லோரும் திகைக்க காவலாளிகள் ஓடி வந்து தோட்டக்காரனை இழுத்துச் சென்றனர்.

அக்பருக்கு, தோட்டக்காரனின் செய்கை வினோதமாகத் தோன்றியது. அவனை அருகே அழைத்து, "ஏன் இப்படி நடந்து கொண்டாய்?" என்று கேட்டார்.

"பாதுஷா அவர்களே, நீங்கள் நீதிமான், தர்ம ராஜா என்று பெயரெடுத்தவர். என்னுடைய போதாத காலம். அப்படிப்பட்ட நீங்கள் தோட்டத்தில் கல் தடுக்கி விழுந்ததற்காக, தோட்டக்காரனான என்னைத் தூக்கில் இட்டீர்கள் என்ற கெட்ட பெயர் தங்களுக்கு வரக்கூடாது. இதற்காகவே, தங்கள் காலில் அடித்தேன். இனி, என்னைத் தூக்கில் போடலாம். மன்னனைத் தாக்கிய குற்றவாளியல்லவா நான்?" என்றான் தோட்டக்காரன்.

அக்பருக்குத் தன் தவறு புரிந்தது. உடனே தோட்டக்காரனை விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

— இந்திரா கோபாலன்



## 12. இரண்டாவது சாவி!

**மா**யாண்டி கூறியதைக் கேட்டதும் ராஜா மின்னல் தாக்கிய மரம் போல் அதிர்ந்து நின்றான்! அவனால் அதை ஏற்கவே முடியவில்லை. வாய் குழறியது.

"என்ன... நீ... நீ.... நிஜமாகத்தான் சொல்றியா மாயாண்டி?"

"ஆமாம்! மறுபடியும் வேண்டுமானால் சொல்றேன். நல்லாக் கேட்டுக் கொள். நம்மைக் கைது செய்து ஜெயிலில் அடைத்து சித்திரவதை செய்த மேஜரின் பையன் சர்க்கிள் ராஜசேகரன், இன்னும் சற்று நேரத்தில்.... இங்கே வரப் போறான் இல்லையா? அவனையோ... இல்லாவிட்டால் அவன் மகனையோ இந்த உலகத்தை விட்டே அனுப்பப் போகிறேன்" என்றான் ஆக்



2வது



''கோகுலத்திற்கு எதிரா நான் ஒரு பத்திரிகை ஆரம்பிக்கப் போறேன்''

''பத்திரிகையோட பேர் என்னங்க?''

'' 'கம்'குலம்!''

— சித்தம்பூண்டி புதூர் செல்வராஜ்

இரண்டு சாவிகள் வைக்கப்பட்டிருந்த திப்பெட்டியை மாயாண்டி வாங்கிக் கொண்டான்.

அதிர்ச்சியில் உறைந்து கொண்டிருந்தான் ராஜா.

"இதோ சைலன்சர் பொருத்தப்பட்ட துப்பாக்கி. இதில் சுட்டால் வெடிக்கும் ஒலி கிராமத்தை எழுப்பாது. காரோடு தயாராக நமக்காக மணி காத்துக் கொண்டிருப்பான். நேரம் நாலேமுக்கால். உம்... கிளம்பு."

யோசித்தபடியே ராஜா கிளம்பினான். இருவரும் தெருவில் நடக்கலாயினர். தெருவில் அதிக நடமாட்டம்

இதோ.... காரைத் திறந்து கொண்டு முன் சீட்டிலிருந்து முதலில் மேஜர் இறங்குகிறார். அடுத்து பின் சீட்டிலிருந்து சந்தீப்பின் அம்மா இறங்குகிறாள்.

அடுத்து....

மாயாண்டி விழிகளைக் கூர்மையாக்கிக் கொண்டு துப்பாக்கியை அழுத்தத் தயார் நிலையில் இருந்தான்.

இறங்கியது... சந்தீப்பின் தங்கை சத்யா.

அடுத்து......

மாயாண்டி சுடத் தயாரானான்.

காலில் கட்டோடு இறங்கிய ராஜசேகரன் சற்றுச் சாய்ந்தபடி நடக்க

சுற்றிக் கொண்டு விட்டது. எதிர்பாராது நடைபெற்ற சம்பவத்தின் அதிர்ச்சியிலிருந்து இன்னும் சந்தீப் மீளவில்லை. நடைபெற்ற சம்பவம் கனவோ என்று எண்ணி மறக்க நினைத்தாலும் அடுக்கடுக்காக நடைபெற்ற சம்பவங்கள் கனவு இல்லை என்ற உண்மையைப் பறைசாற்றின.

மனத்திரையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் நிழற்படம் போல் தெளிவாகத் தெரிய ஆரம்பித்தன.


ஆம்! அடிபட்டுக் கிடந்த ராஜாவை அவர்கள் வந்த டாக்சியிலேயே ஏற்றி விராலிமலை மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்தனர். போலீஸ் பாதுகாப்போடு இருந்த அவனை யாரும் பார்க்க விடவில்லை.


வீட்டில் சந்தீப்பிற்கு சாப்பிடக் கூடப் பிடிக்கவில்லை. கிராமம் பூராவும் இதே பேச்சுத்தான்.

மறுநாள் காலை சந்தீப் தாத்தாவோடு ராஜாவைப் பார்க்கச் சென்றான். ராஜா தூங்கிக் கொண்டிருந்தான்.

"தம்பி! நாங்க எத்தனை சொல்லியும் கேட்காமல் என் கிட்டே பேனாவும் பேப்பரும் கேட்டு இந்தக் கடிதத்தை ராத்திரி ரொம்ப நேரம் கண் விழித்து எழுதினார். நீ வந்தால் இந்தக் கடிதத்தை உன் கிட்டே கொடுக்கச் சொன்னார்'' என்று கூறியபடி சீருடை அணிந்த நர்ஸ் சந்தீப்பிடம் கடிதத்தை நீட்டினாள்.

வீட்டிற்கு வந்து கடிதத்தைப் படித்த





# வண்ணத்துப் பூச்சி!

கம்பளிப் புழுவாம் அண்ணாச்சி – உனக்கு
கால்கள் எப்படி பலவாச்சி?
நினைவில் நீதான் ரயிலாட்டம்! – உடல்
நீண்டு வளைந்துமே உன் ஓட்டம்!

இலைகளைத் தின்றுக் கொழுக்கின்றாய் – நீ
இதமாய் நாளும் வளர்கின்றாய்!
பற்றுதல் இல்லா துறவியைப் போல் – ஏன்
பல நாள் அசையா திருக்கின்றாய்?

கூட்டுப் புழுவாம் அண்ணாச்சி! - உன்
கோலம் எனக்கு வியப்பாச்சி!
மறைந்தே வாழும் அண்ணாச்சி! உனை
வாட்டும் பசிதான் என்னாச்சி!

கூட்டுக் குள்ளே உன் வாழ்க்கை – அதில்
கொட்டிக் கிடக்கும் வேடிக்கை!
வண்ணத்துப் பூச்சி வடிவாகி – நீ
அழகாய் விரிப்பாய் உன்சிறகை!

**- கருமலை பழம்நீ**

போது, கடிதம் பேசியது.

"அன்புள்ள சந்தீப் தம்பி.

படிக்க' எழுதத் தெரியாது என்று சொன்ன நான் எப்படிக் கடிதம் எழுதுகிறேன் என்று நினைக்கிறாயா?

உன்னிடம் நான் ஏன் அப்படி நடந்தேன் தெரியுமா?

"சக்ரவர்த்தி என்று எனக்கு உண்மைப் பெயர். சேலத்தில் +2 படிக்கும் போது பெற்றோர் விபத்தில் இறந்து விட்டனர். மேலே படிக்க வசதி இல்லாமல் வேலை தேடினேன். கிடைக்கவில்லை. மணி, மாயாண்டி, பூபதி ஆகிய மூவரின் நட்புக் கிடைத்தது. அவர்கள்தான் என்னை 'ராஜா' என்று அழைத்தனர். அவர்களோடு திருட ஆரம்பித்தேன். மாற்றுச் சாவி போட்டு, பூட்டை உடைத்துத் திருடும் கலையில் நன்கு தேர்ச்சி பெற்றேன். பல லட்சம் மதிப்புள்ள ஒரு பெரிய திருட்டைச் செய்து இந்தத் தொழிலுக்கே முழுக்குப் போட்டுவிட்டுப் பணக்காரனாக வாழ ஆசைப்பட்டோம். பூபதியின் திட்டப் படி சென்னையில் ஒரு பெரிய வங்கியின் லாக்கரிலிருந்து 1000 பவுன் நகைகளை நானும் மாயாண்டியும் திருடி இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டினோம். இரண்டு சாவிகளையும் போட்டால்தான் அது திறக்கும். மாயாண்டியிடம் ஒரு சாவி உள்ளது. என்னிடம் ஒன்று உள்ளது.

அவசரத் தேவைக்காக ஒரு நகையை விற்கும் பொழுது.... நானும் மாயாண்டியும் போலீசில் மாட்டிக் கொண்டோம். எங்களைச் சித்திரவதை செய்தும் உண்மையை ஒத்துக் கொள்ளவில்லை. எனவே, என்னை வேலூர் சிறையிலும், மாயாண்டியை உன் தந்தையின் பொறுப்பிலிருக்கும் சென்னை சிறையிலும் போட்டனர். வேலூர் சிறையிலிருந்து நான் தப்பிய செய்தியை நீ பேப்பரில் பார்த்திருப்பாய். நான் நேராக திருச்சியில் உள்ள மணி வீட்டிற்கு வந்தேன்.

மாயாண்டியிடம் உள்ள சாவியும் கிடைத்தால்தான் இரும்புப் பெட்டியைத் திறக்க முடியும். அதனால் அவனை விடுவிக்க பூபதி உன்

தந்தைக்கு லஞ்சம் தருவதாக ஆசை காட்டினான். நேர்மையான போலீஸ் அதிகாரியான உன் தந்தை மசிய வில்லை. எனவே உன் தங்கையைத்தான் முதலில் கடத்த நினைத்தோம். அவள் பலத்த பாதுகாப்பில் இருந்ததால் உன்னைப் பிணைக் கைதியாக்கி மாயாண்டியை வெளியே கொண்டு வரத் திட்டம் தீட்டினோம். அதன்படி உன்னைக் கடத்த மணி செய்த இரண்டு முயற்சிகளில் நானும் ஈடுபட்டேன். என்னை யாரும் அடையாளம் கண்டு கொள்ளா மலிருக்க தூக்கிக் கொண்டிருந்த முன்பக்க பற்களை பல் டாக்டரிடம் சென்று மாற்றிக் கொண்டேன். மூக்குக் கண்ணாடியைக் கழற்றிவிட்டு காண்டாக்ட் லென்ஸ் வைத்துக் கொண்டேன். தலையை பட்டிக்காட்டானைப் போல மாற்றிக் கொண்டு நடித்தேன். ஆனால்....

"அண்ணே... அண்ணே! என்று கூப்பிட்டு, நீ காட்டிய அன்பில், உடம்பு சரியில்லாத போது நீ செய்த உதவியில் எனக்காக உயிரைவிட்ட 'டைகரின்' மறைவில், முரட்டுக் காளையிடமிருந்து காப்பாற்றிய உன் பாசத்தில் நான் மாறி விட்டேன். அதனால்தான் சஷ்டியன்று இரவு நான் விராலிமலைக்கு வந்து, மணியைப் பின் தொடர்ந்து, அவன் உன்னை அடைத்து வைத்திருந்த இருண்ட குடிசையிலிருந்து காப்பாற்றினேன். மாயாண்டி தப்பித்துக் கொண்ட செய்தியை அறிந்ததுமே நானும் தப்பிச் சென்று இருக்கலாம். இருப்பினும் நான் தப்பவில்லை. காரணம், உங்கள் எல்லோருடைய மாசற்ற அன்புதான். பெற்றோர் காட்டிய அன்பு எனக்கு மறந்து நான் வெறும் பூட்டிய பெட்டியாகத் தான் இருந்தேன். அந்த ஜடமான பெட்டியின் பூட்டைத் திறக்கும் சக்தி மிக்க இரண்டாவது சாவியாக உங்கள் அன்பு என்னைத்திக்குமுக்காட வைத்து இங்கேயே நிறுத்தி விட்டது. உங்களைப் பிரிய என்னால் இயலவில்லை!

"திடீர் என்று மாயாண்டி உங்களைக் கொல்ல நினைத்ததால் எச்சரிக்கை செய்ய முடியாத நிலை. உன் தந்தையின் கூர்மையான விழிகள் என்னைக்



கண்டு பிடித்து விடுமோ என்ற அச்சம். மாயாண்டியால் என்றைக்கிருந்தாலும் உனக்கோ, உன் தந்தைக்கோ, உங்கள் மீது பிரியமாக இருப்பதால் எனக்கோ கூட ஆபத்து தான். அதனால்தான் மின்னல் வேகத்தில் முடிவெடுத்து உன்னைக் காப்பாற்றத் தயாரானேன். அதற்குப் பிறகு நடந்ததெல்லாம் உனக்குத் தெரிந்ததுதானே?

இப்படிக்கு
உன் அன்பை என்றும் மறவாத
*"சக்ரவர்த்தி என்கிற ராஜா."*

கடிதத்தைப் படித்த உடனேயே... பயம் திகில் கோபம் இரக்கம் போன்ற பல உணர்ச்சி அலைகள் சந்தீப்பின் உள்ளத்தில் மோதி மோதிக் குதித்தன. ராஜாவைப் பற்றி, அகமதுவிற்கும் மயிலுக்கும் ஏற்பட்ட சந்தேகம் ஏன் தனக்குத் தோன்றவில்லை என்று அவன் வியந்தான்! தாத்தா ஊசி போட முயன்றபோது, ராஜா தனது இடது தோள்பட்டையைக் காண்பிக்க மறுத்தது ஞாபகத்திற்கு வந்தது. "என்னிடம் மிக மென்மையாகப் பழகிய அந்த அண்ணன் திருடனா! அப்படியென்றால் சிதம்பரம் தாத்தா சொல்லியது போல் - நான் இயற்கையாகக் காட்டிய அன்பால் அவனுடைய கல் மனம் மாறி விட்டதா?"

யோசித்தபடி சிலை போல் அமர்ந்திருந்தான் சந்தீப்.


அன்று மாலையே ராஜாவின் உடம்பு அதிகமாகி விட்டது. சந்தீப்பையும் அவனது நண்பர்களையும் பார்க்க விரும்புவதாகச் செய்தி வரவே ஐந்து நண்பர்களும் மருத்துவ மனைக்குச் சென்றனர்.

முன் போல் "அண்ணே, அண்ணே" என்று கலகலப்பாகப் பேசாது தயங்கிய படி பயம் கலந்த பார்வையோடு தன்னை அவர்கள் பார்ப்பதைக் கண்ட ராஜா அவர்களை அருகில் வரும்படி கூப்பிட்டான்.

சந்தீப் தான் முதலில் சென்றான்.

"ஏன் என்னோடு பேசமாட்டேன் என்கிறீர்கள்? என்னைப் பார்த்தால்

- அரேபிய நாட்டில்தான் காப்பிக் கொட்டையின் பயன் முதன்முதல் அறியப் பட்டது.




- காப்பிச் செடி அபிசினியாவில் கப்பா (CAFFA) என்ற பிரதேசத்தில்தான் அதிகமாக மண்டிக் கிடந்தது. அதனால்தான் அந்தப் பிரதேசத்தின் பெயரையே கொட்டைக்கும் சூட்டி அதனைக் காப்பி COFFEE என்று அழைக்கத் தொடங்கினர்.

- காப்பி பானத்தை வியாபாரக் கண்ணோட்டத்துடன் தயார் செய்து விற்பனை செய்யும் வழக்கம் முதன்முதலாக இங்கிலாந்து நாட்டில்தான் ஏற்பட்டது.

- இலண்டனில் உள்ள ஜார்ஜ் யார்டு என்ற இடத்தில் 1652ஆம் ஆண்டு முதலாவது காப்பிக் கடை திறக்கப்பட்டது.

- மேல் நாடுகளில் காப்பி என்றாலே டிகாஷன் மட்டும் உள்ள கருப்புக் காப்பி தான். அதை BLACK COFFEE என்றே அழைக்கிறார்கள். நாம்தான் பால் சேர்த்துக் குடிக்கிறோம்.

**- டி.எஸ். பாலு**

பயமாக இருக்கிறதா? சந்தீப்! நல்லவன் வேடத்திலே கெட்ட உள்ளத்தோடு உங்களைப் பார்க்க வந்தேன். ஆனா இப்ப திருடன் வேடத்தில் நல்ல உள்ளத் தோடு உங்களிடமிருந்து விடை பெறப் போகிறேன். உன் வீட்டிற்குள் முதலில் நுழைந்த போது... காந்தி மகான் படத் திற்குக் கீழே எழுதப்பட்டிருந்த வாசகங் களைப் பார்த்துச் சிரித்துக் கொண் டேன். ஆனால், நீ பகைவனான என்னை; திருடனான என்னை அன்பு காட்டி அன்பு வழியில் உன்னை அறியாம லேயே திருத்திவிட்டாய். அதனால் நீதான் ஜெயித்து விட்டாய்."

லேசாக மூச்சு வாங்கியது ராஜா வுக்கு. "அகமது, நீ அடிக்கடி சொல்வே இல்லே, எங்கள் பள்ளிக்கூடத்துக் குடி தண்ணீர் வசதிக்காக ரூபாய் ஐம்பதா யிரம் தேவை என்று? என்னைப் பற்றிய தகவல்களை நீங்கள்தான் கொடுத்ததாக நானே போலீஸிடம் சொல்லிவிட்டேன். அதனால் நிச்சயம் பரிசு ஐம்பதாயிரம் ரூபாய் உங்களுக்குக் கிடைக்கும். அதைக் கொண்டு உங்கள் பள்ளியில்... குடி தண்ணீர் வசதிக்கு ஏற்பாடு செய்யச் சொல்லுங்கள். அந்தத் தண் ணீரை ஆயிரக்கணக்கான மாணவர்கள் குடிக்கும் போது என் ஆன்மா நிச்சயம் குளிர்ந்து விடும்."

"இப்ப கூட என் மீது உங்கள் கோபம் தணியவில்லையா?"

"எங்கே, பழையபடி என்னை அன் போடு அண்ணே என்று கூப்பிடுங்கள் பார்க்கலாம்?"

"அண்ணே... ராஜா அண்ணே" என்று நண்பர்கள் உரக்கக் கூவினர்.

ராஜா, மூச்சு இறைக்க, இழுத்து இழுத்து மிகவும் கஷ்டப்பட்டு சிரித் தான். அதோடு அவன் நிரந்தர மௌன மானான்.

அவன் முகத்தில் முறுவல் அரும் பியது. தலை சாய்ந்தது.

"அண்ணே; அண்ணே" என்று சந்தீப் பும் நண்பர்களும் தொடர்ந்து அலறிய அலறல் கேட்பவர்களைக் கலங்க வைத்தது.



"கல்யாண வீட்டிலிருந்து சந் தோஷமா வர்றியே! என்னடா விஷயம்?"

"போட்டுகிட்டு போன செருப்பே திரும்பவும் கிடைச்சிட்டுது. அத னாலதான்!"

— மு. தனகோபாலன்

அன்று விராலிமலை பாரதியார் உயர் நிலைப் பள்ளி விழாக் கோலம் பூண்டிருந்தது. "குடிநீர்க் குழாய் திறப்பு விழா" என்ற வண்ணத் துணி பேனர் எல்லோரையும் வரவேற்றது. ஆழமாக வெட்டப்பட்ட கேணியிலிருந்து ஊற்று போல நீர் சுரக்க தண்ணீர்த் தொட்டி யிலிருந்து பளபளக்கும் பத்துக் குழாய் கள் மூலம் தண்ணீர் கொட்ட, மாவட்ட ஆட்சித் தலைவர் திறப்பு விழா செய் தார். மாணவர்கள் மகிழ்ச்சியோடு நீரை அருந்தினர். உங்க ளுக்கும் எப்பொழுதா வது விராலிமலை செல்லும் வாய்ப்பு இருந்து பாரதியார் உயர்நிலைப் பள்ளிக் குச் சென்றால் திருந்திய திருடன் ஒரு வனின் கடைசி விருப்பமாகக் கட்டப் பட்ட குழாய்களிலிருந்து வரும் இனிய நீரைக் குடித்து மகிழலாம். குழாய் அமைப்புக்கு மேல் "இது மாணவச் செல்வங்களுக்கு, திருந்திய திருடன் ராஜாவின் அன்பளிப்பு" என்ற விநோத மான பளிங்குக்கல் அறிவிப்பையும் கண்டு வியக்கலாம்.

(முற்றும்)

## இருதயம்

*** வா. வெங்கட்ரமணன், கோவை - 12.**

***? சிலருக்கு இருதயம் வலது பக்கம் இருக்கும் என்று ஒரு புத்தகத்தில் படித்தேன். இது சரியா? தவறா?***

! சரிதான். வெகு அபூர்வமாக சிலருக்கு இருதயம் இடப்பக்கத்தில் இல்லாமல் வலது பக்கம் இருப்பதுண்டு. இதை 'இருதய இடமாற்றம்' (Dextrocardia) என்பார்கள் மருத்துவர்கள். இது ஒரு வளர்ச்சி மாற்றக் குறைபாடு. குழந்தை தாயின் கருப்பையில் உருவாகும் போது இதயத்தை உருவாக்கும் அணுக்கள் இடது பக்கம் வளராமல் வலது பக்கம் வளர்வதால் இது ஏற்படுகிறது. இதனால் உடம்புக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை. பயப்பட வேண்டாம்.

*** ஜெ. இராமகிருஷ்ணன், திண்டுக்கல்.**

***? இமைகள் துடிப்பது ஏன்?***

! கண் இமைகளில் சிறு கண்ணீர்ச் சுரப்பிகள் உள்ளன. இவை எந்த நேரமும் சிறிதளவு கண்ணீரைச் சுரந்து கொண்டிருக்கின்றன. கண்களின் வெளிப்புறம் தெரியும் விழிவெண்படலத்தையும், கருவிழி (Cornea)யையும் ஈரப்பசையுடன் வைத்துக் கொள்வதற்கு கண்ணீர் அவசியப்படுகிறது. இமைகளில் சுரக்கும் கண்ணீர் கண்களின் வெளிப்பகுதிக்கு பரவ வேண்டுமல்லவா? அதற்குத்தான் இமைகள் துடிக்கின்றன. ஒவ்வொரு முறை கண் இமைகள் துடிக்கும் போதும் கண்ணீர் கண்களை நனைத்து விடுகின்றன. இதனால் கண்கள் ஈரமாவதுடன், தூசுகள் விலகுகின்றன, பார்வை தெரிவாகத் தெரிகிறது.

*** ஆ.சு. சுபாஷ், ஆறகளூர்.**

***? நாம் கண்ணாடி அணிவதால் இயற்கையாகப் பார்க்கும் தன்மையை கண்கள் இழந்து விடுமா?***

! இல்லை! அப்படி ஏற்படுவதில்லை.

*** டி. ஐயப்பன், காரணாம்பாளையம்.**


***? சிலந்திப்புண் எதனால் ஏற்படுகிறது? அதனைத் தடுக்க என்ன வழிமுறைகள் உள்ளன?***

! நம் தோலில் பாக்டீரியா கிருமிகள் தாக்கும் போது அங்குள்ள திசுக்கள் அழிந்து சீழ் பிடிக்கிறது. இதுதான் சிலந்திப்புண். இதனைத் தடுக்க நம் உடம்பை எப்போதும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். சுத்தமான ஆடைகளையே அணிய வேண்டும். அசுத்தமான இடங்களில் நடப்பது, விளையாடுவது கூடாது. சுயசுத்தம் சிலந்திப் புண்ணை விரட்டும்.

*** எம்.கே. சக்திவேல், சேலம்.**

***? பிறவிக் குருடு, பிறவிச் செவிடு என்கிறார்களே... பிறவியிலேயே குழந்தைகள் எப்படி ஊனம் ஆகிறார்கள்?***

! தாயின் கருப்பையில் குழந்தை வளர்ந்து வரும் போது, பரம்பரை அம்சம்,



# வலது பக்கம் இருக்குமா?

மரபுக் கோளாறுகள், தாய்க்கு ஏற்படும் தொற்று நோய்கள், இரத்தக் குறைபாடுகள், சில மருந்துகளின் பின் விளைவுகள் போன்றவற்றால் குழந்தையின் 'வளர் அணுக்கள்' பாதிக்கப்படும். இதனால் அந்த வளர் அணுக்கள் உருவாக்க வேண்டிய உடல்பகுதி முழுமையாக உருவாக முடியாமல் அரைகுறையாக உருவாகும். இதன் விளைவாக அந்த உடல்பகுதி மேற்கொள்ள வேண்டிய செயல்கள் பாதிக்கப்படும். இப்படித்தான் பிறவிக் குருடு, பிறவிச் செவிடு, பிறவி ஊமை போன்ற பிறவிக் கோளாறுகள் குழந்தைகளுக்கு ஏற்பட்டு விடுகின்றன.


*** டி.எஸ். கண்ணன், சாத்தூர்.**

***? பிட்யூட்டரி சுரப்பி செயலிழந்தால் நமக்கு என்ன தீமை ஏற்படும்?***


! பிட்யூட்டரி சுரப்பி சுரக்கும் இயக்குநீர்கள் (Hormobes) குறையும். முக்கியமாக உடல் வளர்ச்சியை ஊக்குவிக்கும் 'வளர்ச்சி இயக்குநீர்' (Growth Hormone) குறைவாகச் சுரக்கும். இதன் காரணமாக வயதிற்கேற்ப உயரம் இவர்களுக்கு இருக்காது; குட்டையாக இருப்பார்கள். (Dwarfism). இவர்கள் பருவ வயதை எட்டும் போது பாலுறுப்புகள் (Sex Organs) முழு வளர்ச்சி அடையாது. இதற்கு 'Infantalism' என்று மருத்துவப் பெயர்.

*** ஜெ. ஜெய்சங்கர், கச்சிராயபாளையம்.**

***? புகை (சிகரெட்) பிடித்தால் கெட்டதா? இதனால் என்ன நோய் உண்டாகும்?***



! இதிலென்ன சந்தேகம், தம்பி? புகை பிடிப்பது முற்றிலும் கெடுதல்தான். சிகரெட் புகையில் 300க்கும் மேற்பட்ட நச்சுப் பொருள்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை இவை: நிகோடின், தார், கார்பன்-டை-ஆக்சைடு, கார்பன் மோனாக்சைடு, மீதேன், ஹைட்ரஜன் சயனைடு, மற்றும் கார்போனில். இந்த நச்சுப் பொருள்கள் இதயம், நுரையீரல், இரைப்பை, இரத்தக் குழாய்கள் போன்ற முக்கியமான உடல் உறுப்புகளைப் பாதிக்கின்றன. இதன் விளைவாக, மாரடைப்பு, இரத்தக் கொதிப்பு, நுரையீரல் புற்று நோய், இரைப்பைப் புற்றுநோய், கால் அழுகல் நோய் (Gangrene Foot) போன்ற உயிருக்கு ஆபத்தைத் தரும் பல நோய்கள் உருவாகின்றன.



# பட்டு பொம்மை பழத்தில்

குழந்தைகளை மகிழ்விக்கக்கூடிய முக்கியமான பொருள்களுள் பொம்மைகளுக்குத் தனி இடம் உண்டு. சிந்துவெளி நாகரீக காலத்தில் இருந்தே குழந்தைகளை மகிழ்விக்க இவை பயன்பட்டு வந்துள்ளன. விதவிதமான பொம்மைகளைக் குழந்தைகள் வைத்துக் கொண்டு விளையாடியதை இதிகாச புராணங்கள் விவரிக்கின்றன. ஆனாலும் பொம்மைகளுள் திருப்பதி மரப்பாச்சி பொம்மைகளும், தஞ் சாவூர் தலையாட்டி பொம்மைகளும் சிறப்பான பெருமை பெற்றவை.

மண் பொம்மைகள் உடைந்துவிடும். ஆனால் மரப்பாச்சி பொம்மைகள் உடையாது. எந்தப் பொருளைக் கொடுத்தாலும் பல் முளைக்க ஊறும் ஈறுகளுக்கு இடையே வைத்துக் கடிப்பது குழந்தைகளுக்கு வழக்கம். மண்பொம்மைகளாக இருந்தால், வாயில் வைத்துக் கொண்டதும் வர்ணங்கள் கரைந்து குழந்தைகளின் வாய்க்குள் சென்று உடல்நலத்தைப் பாதிக்கும். இந்த ஆபத்து மரப்பாச்சி பொம்மைகளிடம் இல்லை. அதனால் இரண்டு தலைமுறைகளுக்கு முன்பு வரை மரப்பாச்சி பொம்மைகளே குழந்தைகளை மகிழ்வித்து வந்திருக்கின்றன.

தலையாட்டி பொம்மை எப்படி வைத்தாலும் உருண்டு உருண்டு போகுமே தவிர படுக்காது! நிமிர்ந்து விடும்!



செலுலாய்டும், பிளாஸ்டிக்கும் கண்டுபிடிக்கப்படும் வரை இவைகளே குழந்தைகளை மகிழ்வித்து வந்தன.

பிளாஸ்டிக்கின் அறிமுகம் குழந்தைகளுக்கான விளையாட்டு பொம்மைகளை விதம்விதமாகத் தயாரிக்க உதவியுள்ளது. காற்றடைத்த றபொம்மைகள், மூளைக்கு வேலை தரும் 'மெக்கேனோ' மாடல்கள், எழுத்து அடுக்குகள் என்று இவை விதம்விதமாக வரத் தொடங்கி விட்டன.

பஞ்சடைத்த துணி பொம்மைகள்,

சின்னக் குழந்தைகள் மட்டும் இன்றி பெரியவர்களையும் கவரக்கூடியவை. 'டெடிபேரின்' வருகையைத் தொடர்ந்து எல்லா விலங்குகளும் பறவைகளும் துணி பொம்மைகளாக வரத் தொடங்கி விட்டன. இவைகளுக்கு ஒரு சிறப்பு. பூனைக்குட்டி பொம்மையைத் தொட்டுப் பார்த்தால், உண்மையான பூனைக்குட்டியைத் தொடுவது போலவே இருக்கும். இந்த வகைப் பொம்மைகளில் இப்பொழுது தனிக் கவனம் செலுத்தப்பட்டு, நுணுக்கமான கவனிப்புடன் இவை இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகின்றன. அயல்நாடுகளில் இவைகளுக்கு ஏக வரவேற்பு. அட்டையில் நீங்கள் பார்ப்பது பெங்களூரில் தயாரான ஒரு (பட்டுக்) குரங்கு துணி பொம்மை. இதை இடுப்பில் வைத்துக் கொள்ளலாம், உப்பு மூட்டை தூக்கலாம், கழுத்தில் கட்டிக் கொள்ளலாம். தொட்டால் உண்மையான குரங்கைத் தொடும் உணர்வே ஏற்படும்!

# குரங்கிது; பங்கு கேட்காது!


அட்டையில் : **சிறுமி ஸ்ரீதேவி.**
இங்கே சிறுவன் குட்டிக் கார்த்தி.
வண்ணப் படங்கள் : **கேமிரா திருஞானம்.**

## பாட்டில் ஒரு புதிர்!

**மொ**த்தம் எழுத்து நான்கேதான்!
முதலும் கடைசியும் தாவரத்தை
இத்தரையில் வரச் செய்விக்கும்!
இரண்டு, நான்கு எழுத்தைவிட்டு
மிச்சம் உள்ள இரண்டெழுத்தை
மெல்ல மாற்றினால் கவியாகும்!
கடைசி எழுத்தோ தமிழ் மாதம்!
கவிதை, கதை என இரு பதங்கள்
எழுத்தை மாற்றிட உண்டாகும்!
இத்தனை விந்தையா நான்கெழுத்தில்!
இந்த விடுகதை விடை என்ன?
என்றால் விடையே விடுகதை தான்!


— மதிவண்ணன்




HOW ABOUT A TRIP TO
SPACE?
BUY YOURSELF
A COPY TODAY!
JULY
'95
ISSUE!
GOKULAM
The monthly magazine for children
All about the
mysteries of space!
96 pages
for just Rs. 5!
Write to GOKULAM,
47 Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Madras - 600 097
for a subscription.

# வாண்டுதாசன்

**அமரர் அழ. வள்ளியப்பா நினைவுப் போட்டியில் மூன்றாவது பரிசு பெறும் முதல் கதை**






# நான் பொறுப்பு!

"ஜெயகாந்தா, நீ என்ன் சொல்றே?" - வியப்புடன் மறுமுறை அதே கேள்வியைக் கேட்டார் தலைமை ஆசிரியர். அங்கிருந்த ஆசிரியர்களும் திகைத்துத்தான் போனார்கள்.

ஆனால் மறுபடி ஜெயகாந்தன் நிமிர்ந்து தடுமாற்றமின்றி உறுதியாகச் சொன்னான்.

"ஆமாம் சார். வேலனுக்கு நான் பொறுப்பேற்கிறேன். அவன் மீண்டும் தவறு செய்தால் நம்ம பள்ளி விதிகளின்படி நான் பள்ளியை விட்டு வெளியேறுகிறேன்."



ஜெயகாந்தன் பத்தாம் வகுப்பில் படிக்கிறான். நல்ல பண்பான மாணவன். அவனை அறியாத ஆசிரியர்களே இல்லை. எல்லாவற்றிலும் முதல்நிலை வகிப்பவன். அவன் வகுப்பிலேயே படிப்பவன்தான் வேலன். ஆனால், ஜெயகாந்தனுக்கு நேரெதிர். எல்லோரிடமும் வீண் வம்புக்குப் போவதும், ஆசிரியர்களையே அவர்கள் இல்லாத போது கிண்டலடிப்பதும் அவன் பொழுது போக்கு. பொழுதுபோக்கு என்பதைவிட, அவனுடைய இலட்சியம் கூட என்றே கூறலாம். பாடங்கள் எல்லாவற்றிலும் அவன்தான் கடைசி. இத்தனைக்கும் அவன் வசதியானவன். அவன் எதைக் கேட்டாலும் வாங்கித் தர அவனுடைய அப்பா தயாராக இருந்தார். ஆனால், தன் அப்பா சொல்லும் எதையும் கேட்க அவன் தயாராக இல்லை! 'பள்ளி சம்பந்தப்பட்டதைத் தவிர வேறு எதை வேண்டுமானாலும் சொல்லுங்கள். பணிகிறேன்' என்று இருப்பவன்.

வேலனுக்கு ஜெயகாந்தனைக் கொஞ்சமும் பிடிக்காது. ஜெயகாந்தன்தான் வகுப்புத் தலைவன். ஆசிரியர்கள் இல்லாத நேரத்தில் வகுப்பைக் கவனிப்பவன். எந்த அளவிற்கு அவன் அன்பானவனோ அந்த அளவு சற்றும் குறையாமல் கடமையும், கண்டிப்பும் உடையவன். தவறு செய்பவர்களைத் தயங்காமல் ஆசிரியரிடம் காட்டுவான். அப்படியும் வேலன் அடங்க மாட்டான்.

"டேய் ஜெயகாந்தா! பசங்களை ஜாலியா விடுடா. உன் நண்பர்கள் தானே?" என்று வேண்டுகோள் மாதிரித் தொடங்குவான் வேலன்.

"ஜாலியாக இருக்க, இது விளையாட்டு மைதானமில்ல; வகுப்பறை. எந்தெந்த இடத்தில் எப்படி இருக்க வேண்டுமோ அப்படித்தான் இருக்க வேண்டும். நீங்களெல்லாம் என் தோழர்கள் தான். ஆனால், அது வகுப்புக்கு வெளியே. இங்கே என் கடமையை மட்டுமே செய்வேன்" என்பான் ஜெயகாந்தன்.

"பெரிய கடமை வீரர் இவரு! உன்னுடைய கடமையைப் பாராட்டிச்




சிலையா வைக்கப் போறாங்க?" என்று கிண்டலடிப்பான் வேலன்.

"சிலைகளுக்காகத்தான் கடமைகள் செய்யணும்னா, நாட்டில் சிலைகள் வைக்கவே இடமிருக்காது. காந்தியடிகள் சிலை வைப்பார்கள் என்பதற்காகப் பாடுபடவில்லை. கடமைன்னு வரும் போது அதில் வரவுகளைப் பார்த்தால் அது கடமையே இல்லை, சுயநலம்" என்று அமைதியாகப் பதில் சொல்வான் ஜெயகாந்தன்.

"உபதேசம் செய்ய ஆரம்பிச்சுட்டியா! இதோ பாரு ஜெயகாந்தா, என்னைப் பற்றி ஆசிரியரிடம் ஏதாவது சொன்னே, உன் முதுகு எலும்பை உடைச்சுடுவேன்" என்று மிரட்டுவான் வேலன்.

"வேலா! உன்னுடைய இந்த மிரட்டலுக்கெல்லாம் நான் பயப்படக் கூடியவன் அல்ல. 'அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே; உச்சி மீது வான் இடிந்து விழுகின்றபோதிலும்; அச்சமில்லை அச்சமில்லை'ன்னு பாரதியார் எழுதின பாடலைப் படித்து,

என் இரத்தத்திற்குப் புதிய துணிவைத் தந்திருப்பவன் நான். தெரிஞ்சுக்க'' என்பான் ஜெயகாந்தன் உறுதியாக.

அதற்குமேல் பேசினால் என்ன செய்வான் ஜெயகாந்தன் என்பது வேலனுக்குத் தெரியும். அதனால் வேலன் அடங்கி விடுவான். இருந்தாலும் இது போன்றவை அடிக்கடி நடைபெறும் நிகழ்ச்சிகள்தான்.

இரண்டு நாட்களுக்கு முன், வகுப்பில் ஆசிரியர் இல்லாத போது வரம்பு மீறி நடந்து கொண்டதற்காக ஜெயகாந்தன் வேலன், மேல் புகார் எழுதிவிட்டான். வேலன் ஜெயகாந்தனை அதற்காக அடித்தே விட்டான். ஆசிரியர் வந்ததும் விஷயமறிந்து ஆத்திரம் கொண்டார்.

''வேலா, இத்தனை நாட்களாக உன்னை நானே கண்டித்து மன்னித்து விட்டுக் கொண்டிருந்தேன். நீ எல்லை மீறிவிட்டாய். இனிமேல் மன்னிக்க நான் தயாராக இல்லை'' எனக் கூறியவர் அவனைத் தலைமையாசிரியரிடம் அழைத்துச் சென்றுவிட்டார். வேலன் அன்று முழுவதும் அறை வாசலிலேயே நிற்க வைக்கப்பட்டான். ஓர் அடி கூட பலமாக விழுந்தது.

தவறு செய்ததால்தான் தண்டிக்கப்பட்டோம். இனி அதே மாதிரித் தவறைச் செய்யக் கூடாது என்று தன்னைத் திருத்திக் கொள்ள வேலன் முயலவில்லை. ஜெயகாந்தன் கூறியதால்தான் தண்டிக்கப்பட்டோம் என்று அவன் மேல் காய்ந்தான்.

மறுநாள் ஜெயகாந்தன் பள்ளிக்கு வந்து கொண்டிருந்தபோது கல்லை வீசி ஜெயகாந்தனின் நெற்றியில் காயம்பட வைத்தான். ஜெயகாந்தனுடன் வந்த சிறுவர்கள் அவனை உடனே மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை தந்தார்கள். விஷயம் தலைமையாசிரியருக்குத் தெரிந்தது.

அந்தப் பள்ளியில் ஒரு புதுமையான சட்டம் இருந்தது. தவறு செய்பவர்களிடம் ஓர் உறுதிமொழிக் கடிதம் தரப்படும். அதில் தவறு செய்தவர்கள் 'இனி தவறு செய்ய மாட்டேன் என்றும், இதற்கு என் நண்பன் பொறுப்பெ'ன்றும் இருக்கும். கீழே, 'என் நண்பன் இனித் தவறு செய்ய மாட்டான். அப்படிச் செய்தால் அதற்கு நான் பொறுப்பேற்று, தண்டனையாகப் பள்ளியில் இருந்து விலகி விடுகிறேன்' என இருக்கும். அதில் அதே பள்ளியில் படிக்கும் இன்னொரு நண்பன் கையொப்பமிட வேண்டும். வேறு எவரும் கையொப்பமிடக் கூடாது. ஒரு வாரத்திற்குள் நண்பனின் கையெழுத்தை வாங்கித் தரவேண்டும். தவறினால் தவறு செய்த மாணவன் பள்ளியை விட்டே வெளியேற்றப்படுவான்!

இப்படிப்பட்ட நிபந்தனையில் கையொப்பமிட, யார் யார்தான் முன் வருவார்கள்? அதனால், தவறு செய்ய அந்தப் பள்ளியில் யாருமே அஞ்சுவார்கள். வேலனிடமும் அவன் தவறு செய்தவுடன் அந்த உறுதிமொழிக் கடிதம் தரப்பட்டது.

அவ்வளவுதான்! இதுவரை அவனைச் சுற்றியிருந்தபடி 'ஜே' போட்டு உற்சாகமளித்து வந்த நண்பர்களெல்லாம் அவனைவிட்டு விலக ஆரம்பித்து விட்டார்கள்!

''டேய் மகேஷ், நான் ஜெயகாந்தனை மிரட்டும் போதெல்லாம் கைதட்டி உற்சாகமூட்டுவாயே? இதிலே கையெழுத்துப் போடுடா. நான் இனிமே யாரை

---

**''பாண்டியன் எக்ஸ்பிரஸ் எப்ப வரும்?''**

**''கொஞ்ச நேரத்தில் வந்துரும்.''**

**''சோழன் எக்ஸ்பிரஸ்?''**


**''அரைமணி நேரமாகும்.''**

**''ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் எப்ப வரும்?''**

**''ஏன்யா கழுத்தறுக்கிறே? இப்ப நீ எங்க போகணும்?''**

**''இல்லே அவசரமா தண்டவாளத்தைத் தாண்டணும்!''**

**— எம். முகம்மது அசேன்**





யும் எதுவும் செய்ய மாட்டேன்டா'' என்று கெஞ்சினான் வேலன். "நான் மாட்டேம்பா. என் அப்பா திட்டுவார். இதுக்கெல்லாம் கையெழுத்துப் போட்டால்தான் நண்பன் என்றால், நான் உன் நண்பன் இல்லேடா. ப்ளீஸ் என்னை விட்டுடுடா'' எனக் கெஞ்சி விட்டு மகேஷ் சென்று விட்டான். இன்னொருவன் முகம் கொடுத்துப் பேசவில்லை. மற்றொருவனோ மூன்று நாட்கள் விடுமுறையில் சொல்லாமல் கொள்ளாமல் சென்று விட்டான்! எல் லோரும் அவனைக் கண்டதும் விலகி ஓடினார்கள். அல்லது கையெழுத்திட மறுத்து ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி ஒதுங்கிக் கொண்டார்கள்.

புத்தருக்கு போதி மரத்தடியில் ஞானோதயம் ஏற்பட்டதுபோல், அந்தக் கடிதத்தின் விளைவு வேலனுக்குத் தன் நிலையை உணர வைத்து, புதிய திருப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. வேலன் தவித்துப் போய்த் தலைமை ஆசிரியரிடம் கெஞ்சிக் கொண்டிருந்த போது தான் ஜெயகாந்தன் வந்தான். வேலனுக்குத் தானே கையெழுத்திடுவதாகக் கூறி எல்லோரையும் அசத்தினான்.

"ஜெயகாந்தா, நல்லா யோசி. இவனைப் பற்றி உனக்கு நல்லாத் தெரியும்.



## நிலவே!

நிலவே நிலவே
நில்லாய் நிலவே!
அலைமா கடலில்
தோணி போல
உலவும் நிலவே
ஓ... ஓ... நிலவே!

நீயோர் கோளம்
என்பார் நிலவே,
காயும் கதிரின்
ஒளியோ நிலவே
வாங்கிக் கொள்வாய்
நீயே நிலவே!
வாங்கும் ஒளியை
எமக்கும் நீதான்
வைத்திருந்து
பொழிவாய் நிலவே!

— மின்னூர் சீனிவாசன்

முதலைக் கண்ணீர் வடிக்கிறான்! இவனுக்காக இரங்கி உன் படிப்பைப் பாழடிக்காதே" என்றார் வகுப்பாசிரியர்.

''இல்லே சார். நான் நல்லா யோசித்து, தீர்மானமாக எடுத்த முடிவு தான் இது" என்றான் ஜெயகாந்தன்.

"நீ அவனை நண்பனாக மதித்து, திருத்தி, நல்லது செய்ய முயன்றாலும் அவன் உன்னைத் தன் எதிரியாகத் தானே கருதுகிறான்? அதன் விளைவு தானே இத்தனையும்?'' என்றார் தலைமையாசிரியர்.

"வேலன், முதலில் வேண்டுமானால் அப்படி நினைத்திருக்கலாம் சார். அதனால்தான் என்னை அடித்து இந்த வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டான். ஆனால், இந்த ஒரு வாரத்திற்குள் இவன் பட்டிருக்கும் துன்பங்கள், இவனைத் திருத்த ஆயுள் முழுவதும் போதுமானவை. தன்னிடம் உண்மையான அக்கறை கொண்ட நல்ல நண்பர்கள் யார் என்பதை இவன் உணர்ந்திருப்பான். திருந்தி நல்லவனாக இருக்க இவனுக்கு ஒரு வாய்ப்பு அவசியம் சார். எனக்கு அவன் மேல் பூரணமான நம்பிக்கை இருக்கிறது. வேலன் மாறிட்டான்னு உறுதியா நம்பறேன். அவனுக்கு நான் பொறுப்பேற்கிறேன். இதில் எந்த மாற்றமுமில்லை" எனக் கூறிய ஜெயகாந்தன் உறுதிமொழிக் கடிதத்தில் கையொப்பமிட்டான்.

பார்த்துக் கொண்டிருந்த வேலனின் கண்கள் "பொல பொல"வெனக் கண்ணீரைச் சொரிந்தன. ஓடி வந்து ஜெயகாந்தனை அணைத்துக் கொண்டான். "ஜெயகாந்தா, நீ சாதாரண நண்பன் அல்ல. நீ மிதிக்கும் மண்ணாக இருக்கக் கூட நான் அருகதை இல்லாதவன். நீ என் மேல் வைத்துள்ள நம்பிக்கையை நான் நிச்சயம் நிறைவேற்றுவேன். அதற்காகவாவது நான் கண்டிப்பா நல்ல மாணவனாக இருந்து காட்டுவேன், இது சத்தியம்" என்றான்.

எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி நிறைந்தது.



# மனைவியைச் சிறையா வைக்கிறது மலைமொங்கன்?

ரேவதி

நீலகிரி எக்ஸ்பிரஸ் கோவையில் வந்து நின்றது. நம்பியும் செல்வியும் தலையை வெளியே நீட்டி, அழைத்துப் போக யாராவது வந்திருக்கிறார்களா என்று ஆவலாகப் பார்த்தனர்.

அதோ மாமா பையன் பட்டாபி! "ஹாய்!" என்று இருவரும் மகிழ்ச்சிக் குரல் கொடுத்துக் கையசைக்க பட்டாபியும் கையசைத்து வந்துவிட்டான்.

"பட்டாபி, ஸ்டோர் ரூம் ஜன்னலுக்குப் பக்கத்தில் காம்பவுண்டு ஓரமாக ஒரு அத்திமரம் இருக்கே... அதுல ஏதாவது விசேஷம் இருக்கா?"

வந்ததும் வராததுமாக, இன்னும் ஸ்டேஷனைவிட்டு வெளியே கூட வராத நிலையில் இவ்வளவு ஆர்வமாக அந்த அத்திமரத்தைப் பற்றி அண்ணனும் தங்கையும் கேட்ட ஒரே மாதிரிக் கேள்வி, அவர்களை வரவேற்க வந்திருந்த பட்டாபிக்கு வியப்பாக இருந்தது.

''அத்தி மரத்தில் என்ன விசேஷம் இருக்கும்? அது அங்கேயேதான் இருக்கு. ஏராளமா அத்திப்பழம் காய்க்கிறது. நீங்க ரெண்டு பேரும் ஆசை தீரும் அளவுக்கு அத்திப்பழம் தின்னலாம். சரிதானே?" என்றான் பட்டாபி, சிரித்துக் கொண்டே.

பட்டாபி, மாமாவின் ஒரே மகன். கோவைக்கும் பாலக்காட்டுக்கும் நடுவில் இருந்த வானையார்க் காட்டில் மாமா வனத்துறை அதிகாரியாக இருந்தார். அங்கேயே இயற்கையழகு நிறைந்த சூழலில் குவார்ட்டர்ஸ். பட்டாபி, கோவையில் கல்லூரியில் படித்து வந்தான்.

கடந்த ஆண்டு கோடை விடுமுறைக்கு நம்பியும் செல்வியும் மாமா வீட்டுக்கு வந்திருந்தார்கள். வானை முட்டும் மரங்களும், நீரோடைகளும், அணைக்கட்டும், வனவிலங்குகளும், பறவைகளும் நிறைந்து இயற்கை அழகு கொஞ்சிய மாமாவின் குவார்ட்டர்ஸ் இருவருக்கும் மிகவும் பிடித்துப் போய் விட்டது. மாமாவின் பைனாகுலரை வாங்கிக் கொண்டு பறவைகள் கூடுகட்டுவதையும், குஞ்சு



களுக்கு இரை கொண்டு வரும் அழகையும் கண்டு களிப்பதில் விடுமுறை கழிந்ததே தெரியவில்லை.

மாமாவின் குவார்ட்டர்ஸில், ஸ்டோர் ரூம் ஜன்னலுக்கு வெளியே இருந்த பரந்த தோட்டத்தில், ஜன்னலை ஒட்டி ஓர் அத்தி மரம் இருந்தது. அதில் இருந்த பொந்தில் "கிஜு கிஜு"வென்று ஒரு நாள் சத்தம் கேட்டது. இருவரும் மாடிக் கைப்பிடியில் ஏறி, சத்தம் எங்கே வருகிறது என்று கவனித்தனர். வெகு நேரம் கவனித்த பிறகுதான், அது ஸ்டோர் ரூம் ஜன்னலை ஒட்டியிருந்த அத்தி மரத்தில் உள்ள பொந்தில் இருந்து வருகிறது என்பதைக் கண்டு பிடித்தனர்.

இருவரும் ஆவலுடன் கவனித்துக் கொண்டிருக்கும்போதே "விஷ்ஷ்" என்று ஏதோ சத்தம் கேட்டது. பெரிய வினோதமான பறவை ஒன்று பொந்துக்குள் இருந்து வெளியே வந்தது. மாறி மாறி மரக்கிளைகளில் உட்கார்ந்தபடி தோட்டம் முழுவதும் நோட்டம் விட்டது. அந்த வினோதப் பறவையின் உருவ அமைப்பை, நம்பி கவனித்துக் கூறிக் கொண்டே வர, செல்வி அவைகளைக் குறித்துக் கொண்டே வந்தாள்.

"அலகு பெரியது. மஞ்சள் கருப்பு வண்ணத்தில் கொம்பு போல் வளைந்தது. அலகின் மேல் பக்கத்தில் சிறிய நீண்ட கொண்டை வடிவில் ஓர் உறுப்பு. ஒட்டவைத்த மாதிரி இருக்கிறது. கழுகு, கருடனை விட இந்தப் பறவை அளவில் சற்றுப் பெரியது. உடம்பு கருப்பும் வெளுப்புமாக இருக்கிறது. கருப்பு இறகுகளால் ஆன நீண்ட வால். இறகுகளில் வெளிப்பகுதி மட்டும் வெண்மை."

''இனிமேல் நான் கவனித்துக் கொள்கிறேன். நீ எழுது அண்ணா" என்று பைனாகுலரை வாங்கிக் கொண்டாள் செல்வி.

''இந்தப் பறவை அத்தி மரத்தில் உட்கார்ந்து, அத்திப் பழத்தை இழுத்துத் தின்கிறது. கொய்யாப் பழத்தையும் தின்கிறது. ஆனால், அலைந்து அலைந்து தேடித் தின்பது அத்திப் பழத்தைத்தான்."

கிரிக்கெட் கமெண்ட்ரி கொடுப்பதைப் போல் கூறிக் கொண்டே வந்த செல்வி, ''அண்ணா, அண்ணா, இதேபோல் இன்னொரு வினோதப் பறவை. ரெண்டுமாக

அத்திப் பழங்களைத் தேடி, கொத்திக் கொத்தி இழுத்து இழுத்துத் தின்கின் றன" என்றாள் பரபரப்போடு.

"இன்னொரு வினோதப் பறவைன்னா என்ன? இதைச் சேர்ந்த இன்னொன்றா? இல்லே, வேறு மாதிரி வினோதப் பறவையா?" என்று விளக்கம் கேட்டான் குறிப்பெடுத்துக் கொண்டிருந்த நம்பி.

"இதே போன்ற இதே இனத்தைச் சேர்ந்த இன்னொரு பறவை அண்ணா."

"அப்படின்னா, அது இதனுடைய நண்பனாக இருக்க வேண்டும். இல்லே, மனைவியா இருக்கும்."

"ஏண்ணா, ஒருவேளை இது பெண் பறவையா இருந்து, இப்போ வந்திருப்பது இதன் கணவனாக இருக்கக் கூடாதா?"

"தாராளமா இருக்கலாம். ஆமாம். இந்தப் பறவைக்கும் அந்தப் பறவைக் கும் ஏதாவது வித்தியாசம் தெரிகிறதா பார்?"

செல்வி கூர்ந்து கவனித்தாள். அவள் குரலில் மகிழ்ச்சி தெரிந்தது.

"அண்ணா, இப்போ இரண்டாவதாக வந்த பறவையின் கண்களைச் சுற்றி வெள்ளையாக இருக்கு. இந்த வெண் தோல் பகுதியில் சிறகுகள் இல்லை. முதல் பறவையின் கண் பகுதி இந்த மாதிரி இல்லை. மற்றபடி இரண்டுமே ஒரே மாதிரித்தான் இருக்கு."

"அப்படின்னா இதில் எது ஆண், எது பெண்ணுன்னு கண்டுபிடிக்க முடியலையே?"

நம்பி தன் மனக்குறையை வெளிப் படுத்திக் கொண்ட அடுத்த வினாடி செல்வி மகிழ்ச்சிக் குரல் கொடுத்தாள்.

"அண்ணா! இந்த முதல் பறவை ஜன்னலுக்குக் கீழே தரையில் என் னவோ செய்கிறது!"


நம்பி ஆவல் பொங்க பைனா குலரை வாங்கிப் பார்த்தான். செல்வி கூறியது உண்மைதான். ஸ்டோர் ரூம் ஜன்னலுக்கு வெளியே மண் தரையில் சின்னக் குழி மாதிரி செய்து அதில் எதையோ போட்டுத் தன் அலகால் குழைத்துக் கொண்டிருந்தது முதல் பறவை. இரண் டாவது பறவை பறந்து சென்று அத்தி மரத்தில் இருந்த பொந்துக்குள் உட் கார்ந்து கொண்டு குரல் கொடுத்தது. குழியில் இருந்த குழைவைத் தன் பெரிய நீண்ட அலகால் முதல் பறவை தூக்கிச் சென்றது. சிமெண்ட் பூசி அமைப் பதைப் போல் மரப்பொந்தை அடைக்க ஆரம்பித்தது.

"ஐயையோ! இந்த முதல் பறவை இரண்டாவதை மரப்பொந்துக்குள் சிறை வைக்கிறது அண்ணா! அது மூச்சுத் திணறிச் செத்துப் போகாதா?" என்று பதறினாள் செல்வி.

"கொஞ்சம் கவனமாப் பார்ப்போம் என்ன நடக்குதுன்னு" என்றான் நம்பி.

இருவரும் ஆவல் பொங்கக் கவனித் துக் கொண்டிருந்தனர். இரண்டாவது பறவை இருந்த பொந்தின் வாசல் மெல்ல மெல்லச் சிறிதாகிக் கொண்டே வந்தது! முதல் பறவை கீழே பறந்து சென்று ஏதோ குழைவைத் தயாரித்து அலகில் எடுத்து வந்தது. பொந்தின் வாசலை அலகாலேயே பூசியது! பூசிய பகுதி ஒரு முறை பொதுக் கென்று விழுந்துவிட்டது! அதற்காக பறவை சிறிதும் தளரவில்லை! அலுப்பின்றி மறுபடி குழைவைக் கொண்டு வந்து பொந்தின் வாசலைப் பூசி மூடிக் கொண்டே இருந்தது!





"அந்தப் பூனை 'ஆண் பூனை'ன்னு எப்படிக் கண்டுபிடிச்சே?"
"அதுக்குத்தான் 'மீசை' இருக்கே!"
- வெ. மீனாட்சி, சென்னை - 84.

"ஆச்சு. இன்னும் கொஞ்சம்தான் பாக்கி. நடுவில் சின்ன ஓட்டை. அது வழியாக பொந்துக்குள் இருக்கும் இரண்டாவது பறவை தன் அலகை வெளியே நீட்டி நீட்டிக் காட்டுது! ஒரு வேளை 'டாட்டா' சொல்லுதோ!" - பைனாகுலர் வழியாகப் பார்த்துப் பரபரத்தாள் செல்வி.

நம்பி பைனாகுலரை வாங்கிப் பார்த்தான். அவனும் பரபரப்படைந்தான்.

"செல்வி, இப்போ முதல் பறவை அத்திப் பழத்தைக் கொண்டு வந்து, தன் அலகு நுனியில் வைத்து பொந்தின் மூடாத இடைவெளியில் நீட்டுது. உள்ளே இருந்து தன் அலகை நீட்டி அதை வாங்கிக்குது இரண்டாவது பறவை!" என்ற நம்பி, "எனக்கென்னவோ, உள்ளே இருக்கும் இரண்டாவது பறவை அலகை வெளியே நீட்டியது டாட்டா சொல்ல அல்லன்னு தோணுது." என்றான்.

"அப்போ, அது ஏன் இப்படி உள்ளே போய் அடைஞ்சுக்குது?"

இருவரும் யோசித்து யோசித்து மண்டையைப் பிய்த்துக் கொண்டனர். இரவில் மாமாவிடம் தங்கள் குறிப்புகளைக் காட்டி, ஊகங்களையும் கூறியபோது அவர் மகிழ்ந்து போனார். உள்ளே போய் உலக வரைபடம் அளவுக்குப் பெரிதாக ஒரு வண்ண போஸ்டரைக் கொண்டு வந்து பிரித்துக் காட்டினார். அதில் பறவைகளின் வண்ணப்படங்கள் நிறைந்திருந்தன.

"இதில், இந்தியப் பறவை இனங்கள் எல்லாம் இருக்கின்றன. நீங்கள் பார்த்த பறவைகளைக் காட்டுங்கள்."

அண்ணனும் தங்கையும் ஆவலுடன் தேடினர். வெகு எளிதில் இருவரும் அடையாளம் கண்டுபிடித்துக் காட்டினர். கீழே இருந்த பெயரைச் சொல்லிப் படித்தனர்.

"ஹார்ன் பில் Horn Bill."

"சரியாகக் கண்டுபிடித்தீர்கள். இதைத் தமிழில் மலை மொங்கன் என்பார்கள்."

"அந்த இரண்டாவது பறவை ஏன் மாமா தன்னைத் தானே சமாதி வைச்சுக்குது?"

"அப்போ, முதல் பறவை இரண்டாவது பறவையைச் சிறை வைக்கிறதா மாமா?"

"அது சமாதி வைச்சுக்கலே. முட்டை இட்டுக் குஞ்சு பொறிக்கப் போகுது. பொந்துக்குள் இருப்பது பெண் பறவை. இது முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும் வரை அந்தப் பொந்தில் தான் சிறைப்பட்டுக் கிடக்கும். ஆண் பறவை தான் இரையைக் கொண்டு வந்து தரும். அந்தச் சின்ன இடைவெளி வழியா பெண் பறவை வாங்கிக்கும்."

"மண் குழைவைக் கொண்டு வந்து ஆண் எத்தனை அழகாகப் பொந்தைப் பூசி மூடுகிறது!" என்று சொல்லி வியந்த போது மாமா சிரித்தார்.

"அது பூசி மூடியது மண் குழைசலைக் கொண்டு அல்ல.

"மண் குழைசல் இல்லையா! அப்போ அந்தக் குழைசலை அது எதைக் கொண்டு தயாரிக்குது?"

"உண்மையை அறிந்தால் உங்களுக்கு அருவருப்பாக இருக்கும். அது மண்ணால் ஆன குழைசல் அல்ல. ஆண் பறவையின் மலத்தால் ஆன குழைசல்!"

"ஐயையே!" என்று முகம் சுளித்தனர் இருவரும்.

"இயற்கையின் அற்புதங்களில் இதுவும் ஒன்று" என்று கூறிய மாமா, "மலை மொங்கன் பெரும்பாலும் ஒரே இடத்தில்தான் கூடுகட்டிக் குஞ்சு பொரிக்கும்" என்றார்.

"மாமா, அப்போ போன ஆண்டு இவை இங்கே வந்து இதே அத்தி மரப்பொந்தில்தான் கூடு கட்டித்தா?"

"ஆமாம்மா. ஆண் பறவையின் காலி

லும் பெண் பறவையின் காலிலும் நீல பிளாஸ்டிக் வளையம் போட்டிருக் கேன். இப்போ கவனிச்சுப் பார்த்தா அதே பறவைகள்தானா என்பதைக் கண்டுபிடித்து விடலாம். எல்லாவற்றை யும் கவனித்தீர்களே... இதை மட்டும் கவனிக்கலையே!"

மறுநாள் பொழுது எப்பொழுது புலரும் என்று காத்திருந்தனர் மூவரும். முதலில் செல்வியின் கண்ணில்தான் பட்டது! அதுவும் ஆண் பறவை. அவள் பார்த்த போது அது மரத்தை இறுகப் பற்றிக் கொண்டு நின்றபடி இருந்தது. இப்பொழுது அதன் அலகில் ஒரு சின்னத் தவளைக் குட்டி! பெண் பறவை, ஓட்டை வழியாக அலகை மட்டும் நீட்ட, ஆண் பறவை அதில் இரையை வைத்தது!

"மாமா, இதன் ஒரு காலில் நீல பிளாஸ்டிக் வளையம் இருக்கு!" என்றாள் செல்வி.

"அப்போ, அடுத்த கோடை விடு முறைக்கு நாங்க வரும்போது இதுங்க இதே மரத்தில் கூடு கட்டுமா?"

"கண்டிப்பா."

இதை உறுதி செய்து கொள்ளும் ஆவலால்தான் இருவரும் பட்டாபியை ஆவலாகக் கேட்டார்கள். பட்டாபிக்கு அவர்களுடைய ஆர்வம் புரியவில்லை.

ஆனால் மாமா புரிந்து கொண்டிருந் தார். அவர்கள் வந்ததும் அவரே வந்து கதவைத் திறந்தார். அவர் கையில் பைனாகுலர் இருந்தது.

"உங்கள் பழைய மலைமொங்க நண்பர்கள் இருவரும் இந்த ஆண்டும் கூடு கட்ட அதே அத்தி மரத்திற்கு வந்திருக்கிறார்கள்," என்றார் சிரித்தபடி.

"மாமான்னா மாமாதான்" என்று மாமாவின் கழுத்தைக் கட்டிக் கொண் டாள் செல்வி. நம்பி பைனாகுலரை வாங்கிக் கொண்டு விரைந்தான்.

## அறிவியல் உண்மைகள் :

● வினோதமான உருவங்கொண்ட மலைமொங்களின் விலங்கியல் பெயர் ஆந்த்ரா கோசரஸ் கோரநாடஸ் (Anthra Cocerus Coronatus). இது கொராசி ஃபார்மஸ் (Coraciformes) வரிசையில், புசிரோடிடே (Bucerotidae) குடும்பத் தைச் சார்ந்தது.

● பார்ப்பதற்கு ஒரே மாதிரி இருந்தா லும், கண் படலத்தைக் கொண்டு பெண் பறவையை அடையாளம் கண்டு பிடிக்கலாம்.

● பெரும்பாலும் கூடுகட்ட ஒரே மரத்திற்குத்தான் வருகின்றன. பொந்துக் குள் பெண் உட்கார்ந்து கொள்ள ஆண், தன் விட்டை(மலம்)யைக் கொண்டு தயாரித்த ஒரு குழைசலால் சின்ன ஓட்டை அளவுக்கு விட்டுவிட்டு, மீதிப்பகுதியைப் பூசிவிடும். இந்த ஓட்டை வழியாக ஆண் அலைந்து திரிந்து இரை தேடிப் பெண் பறவைக் குக் கொண்டு வந்து இரையைத் தரும். இந்த அலைச்சல் தாங்காமல் சில ஆண் பறவைகள் இறக்கவும் கூடும்!

● குஞ்சுகள் வெளிவந்ததும் பெண் பறவை பூச்சுச் சுவரை உடைத்துக் கொண்டு வெளிவரும். இரண்டுமாக இரைதேடிக் குஞ்சுகளைப் பராமரிக்கும்.

● மார்ச் முதல் ஜூன் வரை கூடு கட்டி முட்டையிடும். இரண்டு முதல் நான்கு முட்டைகள். முட்டைகள் வெண் மையாக இருக்கும்.


● உணவு, எல்லா வகையான பழங் கள், குறிப்பாக அத்தி, நாவல் பழங்கள். சின்ன புழு பூச்சிகள், குட்டித் தவளை கள், பறவைகளின் குஞ்சுகளையும் தூக்கிக் கொண்டு வந்து தின்னும்.

---


"ஏன் கவலையா இருக்கே...?"

"எங்கம்மாவுக்கு உடம்பு சரியில்லை. யாராவது 'ரத்தம்' கொடுத்தா பிழைச் சுக்குவாங்களாம்!"

- எம். கே. வேங்கவேல், சேலம் - 10.



# பலே பலே பாலகிரெய்!



விகடகவி தெனாலி ராமனின் வேடிக்கையையும், நகைச்சுவையையும் கதைகளையும் படித்திருக்கிறோம் இதே போன்ற தெனாலிராமன் ஒருவன் ரஷ்யா விலும் இருந்தான். அவன் பெயர் பால கிரெய்.

இந்த பால கிரெய் ரஷ்யாவின் புகழ் பெற்ற சக்ரவர்த்தியான மகாபீட்டரின் அவையில் தான் விகடகவியாக இருந் தான். பாலகிரெய் சிப்பாயாக விரும்பி னான். விருப்பமில்லாது அவனை சிப்பா யாக்கிய மன்னர், "சிப்பாய் வேலை மிகவும் பொறுப்பானது. குறித்து நேரத்தில் நீ வர வில்லையென்றாலும், உன் உடைவாளைத் தவற விட்டாலும் உனக்கு மரண தண்டனை நிச்சயம்" என்று கூறிக் கடுமையாக எச்சரித்து, சிப்பாய்க்கு உரிய வாளைக் கொடுத்தார்.

பின்னாலேயே ஒரு காவலனை அனுப்பி, பாலகிரெயிக்குத் தெரியாமல் அவனது உடைவாளைத் திருடிக் கொண்டு வரச் செய்தார் மன்னர். மறுநாள் வாளைக் காணாது கலங்கிய கிரெய் தன் னிடம் இருந்த மரவாளை, உறையில் வைத் துக் கொண்டு அணிவகுப்புக்குப் போனான்.

அணிவகுப்பை பார்வையிட்டபடி வந்து கொண்டிருந்தார் மன்னர். ஒரே ஒரு சிப்பாய் மட்டும் அழுக்கான ஆடை அணிந்து இருப்பதைக் கண்டு, சினம் கொண்டார். பால கிரெயை அழைத்து, "இவன் ஒரு பாமரனைப் போல் அழுக்கு உடை யணிந்து வந்து நமது படை யையே அவமானப்படுத்தி விட்டான். இவனுக்குத் தக்க தண்டனை தர வேண்டும். இவன் தலையை உடனே உன் வாளால் வெட்டு' என் றார்.


பாலகிரெய் நடுங்கி னான். எனினும் தனது புத்திசாலித்தனத் தைப் பயன்படுத்தி ஒரு தந்திரம் செய் தான். "அரசே, என்னோடு பணிபுரியும் ஒரு சகோதரனை அற்பமான ஒரு குற்றத்திற்காகக் கொல்லச் சொல்லுகிறீர்கள். இது அநியா யம். இந்த மாதிரி அநியாயங் களுக்காகவா என் வாள் பயன்பட வேண்டும்? கடவுளே! என் வாள் மரவாளாக மாறக் கூடாதா?" என்று கூறிக் கொண்டே உறையில் இருந்த மர வாளை உருவினான்.

சுற்றி இருந்த சிப்பாய்கள் ஆச்சர்யத் தால் வாய் பிளந்தனர். திகைத்துப் போன மன்னர் பாலகிரெயின் புத்தி சாதுர்யத்தை வியந்து "பலே பலே பாலகிரெய்!" என்று பாராட்டி, அந்த வீரனையும் மன்னித்து, பாலகிரெ யிடம், "நீ இனி சிப்பாய் வேலைக்கு லாயக்கில்லை. எப்போதும் போல் என் அவையில் விகடகவியாகவே இரு" என்று கூறினார். பாலகிரெயும் அதை ஏற்றுக் கொண்டு மீண்டும் விகடகவியாகவே இருந்து மன்னரையும் மக்களையும் தன் நகைச்சுவையால் மகிழ்வித்து வாழ்ந்திருந் தான்.

— பா. ஜெயக்குமார்


# சுவாசம்


ஆழி




தரை மட்டத்திலிருந்து காற்று மண்டலம் சுமார் 320 கி.மீ. உயரத்திற்குப் பூமியை முழுவதுமாகச் சூழ்ந்திருக்கிறது. ஆனால், 16 கி.மீ. உயரத்திற்கு மேல் காற்றின் தன்மை குறைந்து கொண்டே போகிறது! காற்றில் என்னென்ன கலந்திருக்கின்றன? 78 சதவீதம் நைட்ரஜன், 21 சதவீதம் ஆக்ஸிஜன், 1 சதவீதம் ஆர்கான் வாயு, கரியமில வாயு, மற்ற வாயுக்கள். காற்று மண்டலத்தில் ஒரு லிட்டரில் 210 க.செ.மீ. ஆக்ஸிஜன் இருக்கிறது. பூமியில் காற்று மண்டலம் சூழ்ந்திருப்பதற்குக் காரணம் புவி ஈர்ப்பு விசைதான்.

ஒவ்வோர் ஆண்டும் பூமியில் உள்ள தாவரங்கள் சுமார் 650 ஆயிரம் மில்லியன் டன் கார்பன் டை ஆக்ஸைடைக் கிரகித்து, சுமார் 350 ஆயிரம் மில்லியன் டன் ஆக்ஸிஜனை உற்பத்தி செய்கின்றன.






சுவாசித்தல் என்பது ஒரு செல் உயிரிகளிலிருந்து பாலூட்டிகள் வரை அனைத்து உயிரினங்களிலும் நடைபெறுகிறது. உயிர்வாழ ஆக்ஸிஜன் மிகவும் அவசியம். உயிர் இனத்தின் ஒவ்வொரு செல்லுக்கும் ஆக்ஸிஜன் கிடைக்க வேண்டும்; காற்றிலிருந்தோ, நீரிலிருந்தோ ஆக்ஸிஜனைப் பெற வேண்டும்.


ஒரு செல் உயிரியான அமீபாவும், ஆக்ஸிஜனைக் கிரகித்து கார்பன் டை ஆக்ஸைடை வெளிவிடுகிறது.

ஒரு லிட்டர் தண்ணீரில், 10 கன செ.மீ. ஆக்ஸிஜன் இருக்கிறது. மீன், நீரில் கலந்துள்ள ஆக்ஸிஜனை எடுத்துக் கொள்ளுகிறது. வாய் வழியாக உட்கொள்ளப்பட்ட நீர், மீனின் செவுள்களின் வழியாக வெளியேறுகிறது. செவுள்களில் உள்ள ஏராளமான 'செவுள் இழைகளால் நீரில் கரைந்துள்ள ஆக்ஸிஜன் கிரகிக்கப்பட்டு இரத்தத்துடன் கலக்கிறது. அதே சமயம், உடலின் எல்லா இடங்களிலிருந்தும் இரத்தத்தை அடையும் கார்பன் டை ஆக்ஸைடு, செவுள்களின் வழியே நீரில் வெளியேற்றப்படுகிறது.






மின்சார விலாங்கு மீன், தன்னிடம் உள்ள 600 வோல்ட்கள் கொண்ட மின்சக்தியால் தன்னைச் சூழ்ந்துள்ள நீரை, ஆக்ஸிஜன் செறிவு கொண்டதாக ஆக்கிச் சுவாசிக்கிறது. அதன் மின் சக்தி, நீரை, அதன் இரு பிரிவுகளான ஆக்ஸிஜனாகவும் ஹைட்ரஜனாகவும் மாற்ற முடியும்!





‘சேற்றுமீன்’ தன்வாலின் மூலமும் சுவாசிக்கிறது. இதன் வாலில் ஏராளமான கிளைகள் கொண்ட இரத்த நாளங்கள் இருக்கின்றன. இது சேற்றுக் குளத்தின் விளிம்பில் இருந்தபடி வாலை நீருக்குள் மூழ்க வைத்துக் கொண்டு, அதன் மூலம் ஆக்ஸிஜனைப் பெறமுடியும்!



‘நுரையீரல் மீன்’ மற்ற மீன்களிலிருந்து மாறுபட்டது. இந்த மீனின் காற்றுப்பை, நுரையீரல் என்றே குறிப்பிடப்படுகிறது. இதன் நுரையீரல், வாயுமண்டலக் காற்றைச் சுவாசிப்பதற்கு ஏற்ற அமைப்புடன் இருக்கிறது. இதன் வயிற்றுப் பக்கம் உள்ள இரட்டைத் துடுப்புகள், கால்கள் போன்று செயல்படுவதால், இது நீரைவிட்டு நெடுந்தூரம் தரையில் ஊர்ந்து செல்லக் கூடியது.


‘கிரவுண்ட் லிங்’ என்னும் மீன்கள், கோடை காலத்தில், நீர் வரண்ட இடங்களில், நீரில் உள்ள காற்றைச் செவிள்களின் மூலம் கிரகிக்க வழியின்றி, காற்றை உணவைப் போல் விழுங்கிச் சிறுகுடலுக்குள் செலுத்துகின்றன. அதன் முன்குடல் செரிமானத்திற்கும், கடைக்குடல் சுவாசத்திற்கும் அப்போது பயன்படுகின்றன!






நத்தைக்கு நுரையீரல் கிடையாது. நத்தை ஓட்டின் விலாப்பக்கம் வட்டமான மூச்சுத்திறப்பு ஒன்று, ஒரு குழி வரை செல்லுகிறது. மூச்சுத் திறப்பு வழியாகச் செல்லும் காற்று, குழிக்குள் உள்ள நாளங்களால் ஆக்ஸிஜன் பிரிக்கப்பட்டு, இரத்தத்தை அடைந்து கார்பன் டை ஆக்ஸைடு வெளியேறுகிறது.


தவளையின் நுரையீரல்களின் பரப்பு மிகச் சிறிது. எனவே, தவளை அதிகமாக தோலின் மூலமாகவும் வாயின் மூலமாகவும் ஆக்ஸிஜனைக் கிரகிக்கின்றன.






முதலை வெளிக்காற்றைத்தான் சுவாசிக்கிறது. ஆனால் அது சுமார் 2 மணி நேரம் கூட மூச்சை அடக்கிக்கொண்டு நீரின் அடியில் தங்க முடியும்.






பறவைகளின் நுரையீரல்கள் மிகவும் சிறியவை. ஆனால், நுரையீரல்களைச் சுற்றியுள்ள காற்றுப்பைகள் தீவிரமாகக் காற்றை அழுத்திக்கொடுத்து சுவாசிக்க உதவுகின்றன.


கடல் ஆமையும் வெளிக் காற்றைத்தான் சுவாசிக்கிறது. அது சுமார் 2½ மணி நேரம் கூட மூச்சை அடக்கிக்கொண்டு நீருக்குள் இருந்துவிடும்!




திமிங்கிலம், தலையின் உச்சியில் உள்ள மூக்குத் துளையின் வழியே சுவாசித்து ஆக்ஸிஜனை, தசை ஹீமோகுளோபினில் சேமித்து வைக்கிறது. அது நீருக்குள் சுமார் ஒரு மணி நேரம் கூட மூழ்கியிருக்க முடியும். நீருக்குள்ளே நெடுந்தூரம் நீந்திச் செல்லவும் முடியும். அது 15 நிமிடங்களுக்கு ஒரு முறை கடலின் மேற்பரப்புக்கு வந்து, வெளிக்காற்றைச் சுவாசிக்கிறது. அது மூச்சு விடும்போது, அதன் மூச்சுக் காற்றில் உள்ள நீராவி, கடலின் மேற்பரப்பில் நீரூற்று மாதிரி பீச்சியடிக்கும். பாலூட்டிகளில் இதன் நுரையீரல்களே மிகவும் பெரியவை!



நமது சுவாசம்: நாம் உள்ளே இழுக்கும் காற்று, நுரையீரல்களுக்குள் சென்றவுடன் அதிலுள்ள ஆக்ஸிஜன், நுண்ணறைகளுக்குள் சென்று, இரத்தத்தில் கலக்கிறது. அதேபோல், இரத்தத்திலுள்ள கார்பன் டை ஆக்ஸைடும் நுண்ணறைக்கு வந்து வெளிச் சுவாசத்தின் மூலம் வெளியேற்றப் படுகிறது.



நுரையீரல்களின் எடை சுமார் 500 கிராம். நுரையீரல்களில் சுமார் 250 மில்லியன் 'ஆல்வியோலஸ்' என்னும் நுண்ணறைகள் உள்ளன. நமது தோலின் பரப்பைப் போல் 20 மடங்கு பரப்புடையவை நுரையீரல்கள்— சுமார் 100 சதுர மீட்டர். நுரையீரல்களில் சுமார் 3 லட்சம் நுண்ணிய இரத்தக் குழாய்கள் உள்ளன. இவற்றை ஒரே நீளமாக இணைத்தால் அது 2400 கிலோ மீட்டர் இருக்கும்!




சுவாசம், வயதுக்கு வயது மாறுபடுகிறது. பிறந்த குழந்தை ஒரு நிமிடத்திற்குச் சுமார் 60 முறை சுவாசிக்கிறது. 15 வயதுள்ளவர்கள் — பெண்கள் சுமார் 20 முறையும், ஆண்கள் சுமார் 18 முறையும் சுவாசிக்கிறார்கள். அதிக வயதடைந்தவர்கள் மிகக் குறைவாகச் சுவாசிக்கிறார்கள். ஒரு பெண்ணின் நுரையீரல்கள், அவளைப்போல் எடையுள்ள ஓர் ஆணின் நுரையீரல்களைவிட அளவில் குறைவாக இருக்கும்.


சராசரியாக, ஒரு மனிதன் 24 மணி நேரத்தில் 23,000 தடவைகள் சுவாசிப்பதாகவும், அந்தக் காற்றின் அளவு 120.3 கன மீட்டர் என்பதாகவும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.



கடலில் முத்துக் குளிப்பவர்கள், நீருக் கடியில் சுமார் **5** நிமிடங்கள் வரை மூச்சை அடக்கியிருப்பார்கள். ஆனால், 1994-ஆம் ஆண்டு, 'பீட்டர் ஹிர்வெல்' என்னும் ஸ்வீடன் நாட்டுக்காரர், ஆழ்கடலில் மூழ்கி, 6 நிமிடங்கள் 3 விநாடிகள் மூச்சை அடக்கி உலக சாதனை புரிந்திருக்கிறார்.




மலையேறுகிறவர்களுக்கு, மேலே செல்லச் செல்ல காற்றழுத்தம் குறைவதால் மூச்சுத் திணறும். அவர்கள் சுவாசத்திற்குரிய கருவிகளைக் கொண்டு செல்ல வேண்டும்.



இரண்டாம் உலகப் போரின் போது, 1943-இல், 'ஜாக்கு வெய்ஸ் கஸ்டே' என்ற பிரெஞ்சுக் காப்டனும், இமைல் காக்னன் என்ற என்ஜினியரும் இணைந்து 'அக்வாலங்' என்னும் கருவியைக் கண்டுபிடித்தார்கள். இந்தக் கருவியில், காற்று மண்டல அழுத்தத்தில் ஆக்ஸிஜன் நிரப்பப்பட்ட உலோகத்தாலான சிலிண்டர்கள் இருக்கும். இவற்றை முதுகில் கட்டிக்கொண்டு ஓர் இணைப்புக் குழாய் வழியே சுவாசிப்பார்கள், நீரில் மூழ்குகிறவர்கள்.

மனிதன் உயிர்வாழ ஆக்ஸிஜன் அவசியம்தான். ஆனால் சுத்தமான ஆக்ஸிஜனின் நடுவில் ஒரு மனிதன் 24 மணி நேரம்தான் உயிர்வாழ முடியும். அதில் நீண்ட நேரம் இருந்தால், நிமோனியா என்னும் நுரையீரல் அழற்சி நோய் தோன்றி இறக்க நேரிடும்.





# என்ன அப்பா இவர்?

அப்பா பற்பசை டியூபை வாங்கிக் கொண்டு, இருபது ரூபாய் நோட்டை நீட்டினார். கடைக்காரர் பத்தொன்பது ரூபாய் தொண்ணூறு காசுகளுக்கான பில்லைக் கொடுத்தார்.

அப்பா சற்றுநேரம் நவீனுடன் அங்கேயே நின்றார். அவர் ஏன் இன்னும் நிற்கிறார் என்பது நவீனுக்கும் புரியவில்லை. "என்ன சார் வேண்டும்?" என்று கேட்டார் கடைக்காரர். "பில் தந்தீங்க. மீதி பத்து பைசா தரலியே?"

கடைக்காரன் அப்பாவை மேலும் கீழும் பார்த்தார். ஒரு இளக்காரப் பார்வை முகத்தில் நிறைந்தது.

'பெரிய கஞ்சனா இருப்பான் போலிருக்கே! பத்து பைசா மீதிக்கு இப்படி நின்னு கேட்கிறானே! இதுக்கு இந்தக் காலத்தில் என்ன மதிப்பு இருக்கும்?' என்று கடைச் சிப்பந்தி முணுமுணுத்தது நவீனுக்குக் கேட்டது. அவனுக்கு அவமானமாக இருந்தது. அப்பாவின் மேல் கோபமாக வந்தது. என்ன இவர் இந்தப் பத்துப் பைசா காசுக்காக கடைக்காரரிடம் இப்படி விடாமல் கேட்கிறாரே!

"என்கிட்டே பத்து பைசா இல்லே. நாலணாவா இருக்கு. பதினைந்து பைசா கொடுங்க. நாலணாவா தறேன்" என்று அலட்சியமாகக் கூறினார் கடைக்காரர்.

'என்ன அப்பா இவர்' என்று மனதிற்குள் நொந்து கொண்டான் நவீன். ஆனால் அப்பா எதையுமே கண்டு கொண்டதாகத் தெரியவில்லை! பாக்கட்டைத் துழாவி பதினைந்து பைசாவை எடுத்துக் கொடுத்தார். கடைக்காரர் இருபத்தைந்து பைசா நாணயத்தை எடுத்தார், அதை அவர் கையில் கூடக் கொடுக்காமல் முன் வரிசையில் இருந்த மிட்டாய் பாட்டிலின் மேல் வைத்தார்.

அப்பா அப்பொழுதும்கூட துளியும் கோபப் படாமல் அதை எடுத்துத் தன் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு "நவீன், வாடா போகலாம்" என்றார்.

'இனிமேல் இந்த அப்பாவுடன் வெளியே போகவே கூடாது. அவமானம். பத்து பைசாவுக்கு

**சிவ. சிவக்குமார்**

இப்படி நின்று கேட்கிறாரே!' என்று மனதிற்குள் முடிவு செய்து கொண்டான் நவீன். அவன் சென்னையில் விடுதியில் தங்கிப் படிக்கிறான். விடுமுறைக்கு வந்திருந்தான்.

வீட்டுக்கு வந்ததும், அம்மாவிடம் தனிமையில் கடையில் நடந்ததைத் தணிந்த குரலில் முறையிட்ட நவீன், இந்த அப்பா இப்படிக் கஞ்சனா



மாறியிருப்பான்னு நான் நினைக்கவே இல்லைம்மா" என்று ஆதங்கப் பட்டுக் கொண்டான். அம்மா பதிலேதும் கூறவில்லை.

பிற்பகல் சாப்பாடானதும் நவீன் தனது நண்பன் வீட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான். நண்பனின் வீடு நகரத்தின் இன்னொரு கோடியில் இருந்தது. பஸ்ஸில் போயாக வேண்டும்.

"நவீன், போறதுக்கு முன்னாடி நண்பன் வீட்டுல இருக்கானான்னு போன் பண்ணி நிச்சயம் பண்ணிக்கிட்டுப் போ" என்றார் அப்பா.

காலையில் டூத் பேஸ்ட் வாங்கிய அதே கடை. டெலிபோன் பேசி முடித்ததும் "இரண்டு ரூபாய் தம்பி" என்றார் கடைக்காரர்.

"எல்லாக் கடையிலும் ஒரு ரூபாய்தானே?" என்றான் நவீன்.

"நம்ம கடையில் ரெண்டு ரூபாய்தான். போர்டே எழுதி வெச்சிருக்கேன் பார்க்கலையா நீ?"

மனதிற்குள் திட்டிக் கொண்டே நவீன் சட்டைப் பையில் கையை விட்டான். எல்லா இடத்திலும் டெலிபோன் பேச ஒரு ரூபாய்தானே கட்டணம் என்று ஒரு ரூபாய் நாணயத்தைப் போட்டுக் கொண்டு வந்து விட்டான். இப்போ மீதிக்கு என்ன பண்ணுவது? சட்டைப் பையினுள் துளாவினான். மேலும் ஒரு எட்டணா கிடைத்து. கால் சட்டை பின் பாக்கெட்டில் நாற்பது பைசா கிடைத்தது. இன்னும் பத்து காசு தேவை.

"இதுக்காகத்தான் முதல்லயே காசை வாங்கிக்கிட்டு, அப்புறமா பேச அனுமதிக்கணும்னு இவனுங்களுக்குப் படிச்சு படிச்சு சொல்றேன். பெரிய தொல்லையாப் போச்சு" என்று ஏக வசனத்தில் ஆரம்பித்தார் கடைக்காரர். நவீன் கூசி நின்றான்.

"சார், சாவடித் தெருவுல மூணாம் நெம்பர் வீடுதான். இதபோய் எடுத்துக்கிட்டு வந்து தந்துடறேன்."

"பத்து நிமிஷம் யாராவது தெரிஞ்சவங்க போறாங்களானு பாரு. போனா கூப்பிட்டுக் கேளு. இல்லேன்னா கடைப் பையனை கூடவே அனுப்பறேன். கொடுத்து அனுப்பு."

கடைக்காரர் உறுதியாகத் தீர்ப்பைச் சொன்னார். நவீன் மனதிற்குள் குமைந்தபடி தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தான். நல்ல வேளை. அப்பாவே அவனைத் தேடிக் கொண்டு வந்து விட்டார். அவரிடம் பத்து பைசாவை வாங்கிக் கொடுத்து விட்டு நடந்தான் நவீன்.

வழியிலே பள்ளிச் சிறுவர்கள் கொடி நாளுக்காக உண்டியலைக் குலுக்கிக் கொண்டு வந்தார்கள். ஒரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து மடித்து உண்டியில் போட்டு விட்டு இரண்டு கொடிகளை வாங்கி நவீனுக்கு ஒன்று குத்தி விட்டு, தன் சட்டையில் ஒன்றைக் குத்திக் கொண்டார் அப்பா.

"நவீன், கடைக்காரன் கண்டிப்பாக இருந்து பத்து பைசாவைக் கேட்டதைத் தவறு என்று கூறமாட்டேன். காரணம் அது அவன் வைத்த கட்டணம். தனக்கு வர வேண்டிய பத்து பைசாவுக்கு இத்தனை கெடுபிடி செய்கிறவன், இதே கெடுபிடியுடன் மற்றவர்களுக்குத் தான் மீதி தரும் போதும் இருக்க வேண்டும் இல்லையா? அப்படி இல்லாதபோது நாம்தான் கெடுபிடியுடன் இருந்து நம்ம மீதியைக் கேட்டு வாங்கிக் கொள்ள வேண்டும். அது ஐந்து காசாக இருந்தாலும், அதைக் கேட்பதில் அவமானமோ, தலை குனிவோ இல்லை," என்றார் அப்பா.

அப்பாவைப் பற்றிப் பெருமையாக எண்ணியவாரே நடந்தான் நவீன்.



## செல்லுவேன்!

வட்டமான வெண்ணிலா
வானத்திலே ஆடுது
தட்டு போன்ற வெண்ணிலா
தண்ணீரில் ஆடுது
திட்டமான வெண்ணிலா
விட்டத்திலே ஆடுது
சுட்டதோசை வெண்ணிலா
பட்டம் போல ஓடுது
கிட்டத்திலே செல்லுவேன்
தொட்டு தொட்டு மகிழுவேன்
குட்டி நாயைக் கூட்டிக் கொண்டு
குல்லா அணிந்து கிளம்புவேன்
குட்டி ராக்கெட் ஏறுவேன்
கும்மாளமாய் செல்லுவேன்
இட்டமான தோழர்களை
ஏற்றிக்கொண்டு செல்லுவேன்!

– அழகிய பெரியவன்

# எங்கள் ஊரில் நடந்தது



## ஊசியா?

என் அண்ணன் பையன் அசோக் எல்.கே.ஜி. படிக்கிறான். எல்லோரும் வியக்கும் அளவிற்குப் பேசுவான். அவன் மழலைப் பேச்சு கேட்டு எல்லோரும் அவனிடம் இனிமையாகப் பழகுவார்கள். அவனுக்குக் காய்ச்சல் வந்தது. டாக்டரிடம் தூக்கிச் சென்றனர். அந்தக் காய்ச்சலிலும் டாக்டர் கேட்கும் கேள்விகளுக்கு மழலை மொழியில் பதில் சொல்லி வந்தான் அசோக். டாக்டர் அவனிடம் "சாப்பிட்டாயா?" என்ன சாப்பிட்டே? என்ன படிக்கிறே? என்று கேட்டுக் கொண்டே ஊசியைக் குத்தி விட்டார். அதிலிருந்து அவனிடம் யார் அவனைப் பற்றி விசாரித்தாலும் பதில் சொல்லத் தயங்குவான். எங்கள் வீட்டுக்கு விருந்தினர் வந்திருந்தனர். அவர்கள் அவனிடம் "என்ன படிக்கிறே" சாப்பிட்டாயா? என்ன சாப்பிட்டே? அப்பா எங்கே?" என்று விசாரிக்க ஆரம்பித்தனர். அவர்களை நிமிர்ந்து பார்த்த அசோக், "நீங்க எனக்கு ஊசி போடப் போறீங்களா?" என்று கேட்டான். எங்களுக்கு புரிந்து விட்டது. எல்லோரும் சிரித்து விட்டோம்.

மேலப்பாதி, என். ராஜலெட்சுமி.




## அவரவர் தேவை!

ஒன்பதாம் வகுப்புப் பாடம் நடந்து கொண்டிருந்தது. தமிழ் ஆசிரியர் பெரிய புராணம் நடத்திக் கொண்டிருந்தார். ஒரு மாணவனிடம், "கடவுள் உன் எதிரே தோன்றினால் அவரிடம் என்ன வரம் கேட்பாய்?" என்று கேட்டார் ஆசிரியர். கூடவே, "நானாக இருந்தால் நிறைய அறிவு கொடுங்கள் என்று கேட்பேன். நீ என்ன கேட்பாய்?" என்று விளக்கிக் கேட்டார். மாணவன் "நிறையப் பணம் கொடுங்கள் என்று கேட்பேன் சார்" என்றான். ஆசிரியர், "அறிவை விடவா பணம் பெரிது? அறிவு வேண்டாமா உனக்கு?" என்று கேட்டார். மாணவன் "அவரவர் தங்களிடம் எது இல்லையோ அதைத் தானே சார் கேட்பார்கள்?" என்றான். வகுப்பறையே மாணவர்கள் ஆசிரியர் உட்பட சிரிப்பலையில் நிறைந்து வழிந்தது.

கருப்பனூர், அதே. இளங்குமரன்

## எங்கே இருக்கும்?


எங்கள் வீட்டில் ரேடியோ பாடிக் கொண்டிருந்தது. அது என் பார்வையில் இல்லாதபடி கூடத்தில் இருந்தது. நான் பக்கத்து அறையில் புத்தகம் படித்துக் கொண்டிருந்தேன். ரேடியோ 'எந்த ஸ்டேஷனில் இருக்கிறது?' என்பதை அறிய "ரேடியோ எதில் இருக்கிறது?" என்று சகோதரரிடம் கேட்டேன். என் கேள்வியின் பொருளைப் புரிந்து கொள்ளாத அவர் "ரேடியோ எங்கே இருக்கும்? டேபிளில் தான் இருக்கு" என்றார். ஒரே சிரிப்பு தான்.


திருக்கண்ணங்குடி, ஏ. ராகவேந்திரா.


## போர்டில் உள்ளது!

என் தம்பி பார்த்திபன் இரண்டாம் வகுப்பில் படிக்கிறான். அவனது தமிழ்ப் பாடத்தில், தாஜ்மஹால் பற்றி ஒரு இடத்தில் வரும். ஒரு நாள் வகுப்பில் ஆசிரியர் 'தாஜ்மஹால்' என்று கரும்பலகையில் எழுதி விட்டு, மாணவர்களை சிலேட்டில் எழுதச் சொன்னார். தம்பியும் சிலேட்டில் எழுதி, ஆசிரியரிடம் காட்டினான். ஆசிரியர் 'தாஜ்மஹால் எங்குள்ளது?" என்று அவனிடம் கேட்டார். அதற்கு சரியான பதில் "ஆக்ராவில் உள்ளது" என்பது தானே? ஆனால், எனது தம்பியோ "போர்டில் உள்ளது சார்!" என்று கரும்பலகையில் எழுதி இருந்ததைக் காட்டினான். ஆசிரியர் தன்னை மறந்து சிரித்தார். செய்தி கேட்டு நாங்களும் சிரித்தோம்.

முடிகொண்டான், கவிதா வீராசுவாமி.




## த.பி.பா.

பள்ளியில் அரையாண்டுத் தேர்வின் போது எல்லோரும் அமைதியாக எழுதிக் கொண்டிருந்தோம். எனக்கு முன்னால் இருந்த ரமேஷ் என்ற மாணவன் என்னைத் திரும்பிப் பார்த்து நான் எழுதுவதைப் பார்த்து எழுதிக் கொண்டிருந்தான். இதை ஆசிரியரே கவனித்து 'விறுவிறு'வென்று அவனருகில் வந்தார். "ஏன் ஜெயகாந் தனைப் பார்த்துக் காப்பி அடிக்கறே?" என்று கேட்டார். உடனே அவன் பணிவாக எழுந்து வினாத்தாளை எடுத்துக் காட்டினான். வினாத்தாளில், கேள்விகளுக்குக் கீழே "த.செ.பி.பா"(தயவு செய்து பின் பக்கம் பார்க்க) என்று இருந்தது. எல்லோரும் சிரித்தோம்.


துத்திப்பட்டு, இராம. ஜெயகாந்தன்.

## முந்திரி

எனது நண்பனின் மாமாவுக்கு காலில்

"மரு"க்கட்டி என்ற பாலுண்ணி. அதைத் தீய்த்து விடுவதற்காக ஊரிலிருந்து கொண்டு வந்த முந்திரிப் பழத்திலிருந்து கொட்டையை எடுத்து உடைத்து, முந்திரி எண்ணெயை எடுத்து மருவின் மீது ஜாக்கிரதையாகத் தடவினார். இரண்டு மூன்று தினங்களில் மருகாய்ந்து விட்டது. அதனைப் பார்த்து எனது நண்பன் வியந்து போனான். அவன் முகத்தில் பரு ஏராளம். மாமா பண்ணினது போலவே முந்திரி எண்ணெயை எடுத்து தன் முகப் பருமேல் வைத்துக் கொண்டான். யாரிடமும் கேட்கவில்லை. உடனே முந்திரி எண்ணெய் பட்ட இடத்தில் எல்லாம் முகத் தோல் வெந்து புண்ணாகி முகம் வீங்கி விட்டது. மருத்துவரிடம் சென்று சிகிச்சை செய்து கொண்டான். அவனது அறியாமையைக் கண்டு அனைவரும் சிரித்ததுடன் அவனைப் பார்த்தாலே "முந்திரி" என்று கூப்பிட ஆரம்பித்து விட்டார்கள்.


பூதனூர், எம். விவேக்குமார்.




## தோட்டை!

என் அக்கா பையன், வயது 5. முதல் வகுப்பில் படித்து வருகிறான். அவனுக்கு 'க' எழுத்தை உச்சரிக்க வராது. எவ்வளவோ முயன்றும் அதை மாற்ற முடியவில்லை. 'க' எழுத்தை 'த'வென்று உச்சரிப்பான். கணக்கு என்பதை தணக்கு என்று உச்சரிப்பான். நான் ஒரு முறை கடை வீதிக்கு அழைத்துச் செல்வதற்காக, அவனுக்கு அலங்காரம் செய்து, "உன் புது ட்ரெஸ்ஸை எடுத்துவா. உன்னை என் கூட அழைத்துப் போகிறேன்" என்றேன். உள்ளே சென்று ஏதோ ட்ரெஸ்ஸை எடுத்து வந்து கொடுத்து விட்டு "மாமா என் 'தோட்டை', 'தாண வில்லை" என்றான். நான் 'உனக்குத் தான் 'காது' குத்தவே இல்லையே! ஏது தோடு?'' என்றேன். இதைக் காதில் வாங்கிக் கொண்டிருந்த என் சகோதரி "அவனுக்கு 'க' எழுத்தைச் சொல்ல வராது. அவன் தன்னுடைய புதிய கோட்டைக் காணவில்லை என்கிறான் என்று விளக்கம் தந்தார். எல்லோரும் சிரித்து விட்டோம்.

மேலப்பாதி, எஸ். நாகராஜன்.




## உடையாத முட்டை

எங்கள் தெருவில் ஒரு சிறுமி இரண்டாம் வகுப்பில் படிக்கிறாள். சுமாராகப் படிப்பாள். ஆனால் நல்ல புத்திசாலித் தனம். ஒரு முறை அவள் பள்ளியில் வைத்த கணக்குத் தேர்வில் பெற்ற மதிப்பெண்ணுடன் வீட்டுக்கு வந்தாள். வந்ததும் தன் அம்மாவிடம் "அம்மா நேற்று சத்துணவில் கொடுத்த முட்டையை உடைத்து விட்டேன் என்று திட்டினாயே? இன்று உடையாத முட்டை வாங்கி வந்






துத் தந்து விடுவேன் என்று அம்மா பய மூட்டினாள். அன்று சாயங்காலம் ராஜேஷ் பள்ளியில் இருந்து திரும்பினான். "'மிஸ்' இன்னிக்கி என்ன சொல்லி தந்தார்கள்?" என்று அம்மா கேட்டாள். A,B,C,E,F, என்று சொல்லி நிறுத்தினான் ராஜேஷ். ஏண்டா நிறுத்திட்டே? D சொல்லு என்று அம்மா கேட்டாள். "நீதான் 'D' சொன்னால் பூச்சாண்டியிடம் பிடித்துத் தந்து விடுவேன்னு சொல்லியிருக்கியே? எனக்கு பயம்பா. நான் சொல்ல மாட்டேன்" என்று சொன்னான். வீட்டில் அனைவரும் சிரித்தோம்.

சித்தூர், ஆர். ஜெயஸ்ரீராகவன்.


## ஐ வகைப்பால்!


எங்கள் பாடசாலையில் தமிழாசிரியர் திணை, பால், எண் இடம் என்ற பாடத்தைப் படிப்பித்துக் கொண்டிருந்தார். ஒரு குறும்புக் கார மாணவன் தனக்கு அருகில் இருந்த மாணவனோடு கதைத்துக் கொண்டிருந்தான். இதனைக் கவனித்து விட்ட ஆசிரியர் அவனை எழுப்பி "ஐந்து வகைப் பால்களையும் சொல்லு?" என்றார். உடனே அவன் ஆட்டுப்பால், பசும்பால், டினோபால், எருமைப்பால், நாய்ப்பால் என்று சொன்னான். வகுப்பே சிரிப்பில் ஆழ்ந்தது.


கரவெட்டி, (ஸ்ரீலங்கா) இ. சிறீநிவாசன்,

(இந்தியாவில் தொடர்பு முகவரி தரப்பட வில்லை!)

# போட்டி







பழமொழிகளை வைத்துப் போட்டி நடத்தி வெகு காலமாகிவிட்டது. அதனால் பழமொழிகளை வைத்து ஒரு போட்டி வையுங்கள் என்று வாசக அன்பர்கள் அடிக்கடி கடிதம் எழுதி வந்திருக்கிறார்கள். இவர்களது விருப் பத்தை நிறைவேற்றவே இந்தப் போட்டி தயாரிக்கப்பட்டிருக்கிறது. இங்கே உள்ள பத்துப் படங்களையும் கவனமாகப் பாருங்கள். இந்தப் பத்துப் படங்களுக்குள் உங்களுக்கு மிகவும் பழக்கமான பழமொழி ஒன்று ஒளிந் திருக்கிறது. அது என்ன பழமொழி என்பதைக் கண்டுபிடியுங்கள். கண்டு பிடித்து ஒரு தபால் கார்டில் எழுதி, உங்கள் பெயர், முகவரி (பின்கோடு உட்பட)யையும் எழுதி, முகவரிக் கூப்ப னைக் கத்திரித்து ஒட்டி அனுப் புங்கள். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரி யைக் கண்டிப்பாகத் தரவேண்டும். முடிவு தேதி : 31.7.95. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஜூலை '95

பெறுநர் :

ஆசிரியர் - கோகுலம்
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

# பொறுப்பு என்பது...



பிரேயருக்குப் போவதற்காக மாணவ, மாணவிகள் பள்ளியை விட்டு வெளியே வந்தனர்.

முதல் 'ரேங்க்' எடுக்கும் மாணவனை முன்னால் நிற்க வைத்து, அடுத்தடுத்த 'ரேங்க்' எடுக்கும் மாணவர்களைப் பின்னே நிற்க வைத்துக் கொண்டிருந்தான் லீடர் மூர்த்தி.

மூர்த்திக்கு ரேங்க் எடுக்கும் மாணவர்களிடம் தனி ஈடுபாடு இருந்தது. எதிலும் அவர்களுக்கே முதல் இடம் தந்தான். வகுப்பில் உட்காருவதில் கூட 'ரேங்க்' முறைப்படிதான் உட்கார வைப்பான். கடைசி பெஞ்சுகாரர்கள் எல்லாம், ரேங்க்கில் பின்னால் இருப்பார்கள். அவன் 'லீடர்' என்பதால், ஆசிரியர்கள் யாரும் அவனைக் கண்டு கொள்வதில்லை.

அவன் கடைசி ரேங்க் மாணவர்களுடன் பேசுவது கூட இல்லை என்பதை நெடுநாட்களாகவே தமிழாசிரியர் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்.

அன்று மாலை, பள்ளிக்கூடம் முடிந்திருந்தது. தமிழாசிரியர், மூர்த்தியைக் கூப்பிட்டனுப்பினார். போனான்.

"மூர்த்தி, நீ வகுப்பின் சிறந்த மாணவன். ஒழுக்கத்தில்; ஊக்கத்தில் சிறந்தவன். அதனால்தான் மாணவர் தலைவனாக உன்னை நியமித்தார்கள். பள்ளியின் நன்மையை எண்ணி, எல்லோரையும் ஒன்றாக எண்ண வேண்டியவன் நீ. ஆனால், நீ முதல் ரேங்க் வரிசை மாணவர்களுக்கே முன்னுரிமை தருகிறாய். இது தவறு இல்லையா?"

"ஒரு மரத்துல காய்க்கிற அத்தனை காய்களும், மரத்திலேயே கனிந்து விடுவதில்லை. சில காய்களைத் தோட்டக்காரன்தான் கனிய வைப்பான். தானாகக் கனியட்டும் என்று விட்டுவிட்டால், அது அழுகிப் போய் விடும். ரயில் எஞ்சின், தன் பின்னால் கோக்கப்பட்டிருக்கும் எல்லாப் பெட்டிகளையும் பாரபட்சம் இல்லாமல் இழுத்துச் செல்லும். அது போல்தான் நீயும் இருக்க வேண்டும். கடைசி 'ரேங்க்' எடுப்பவனை முன்னால் நிறுத்தி வை. படிப்பில் அவர்களையும் பிரியம் கொள்ளவை. வகுப்பில் முன்னால் உட்காரவை. அவர்களுக்கும் நம்மால் முடியும் என்ற நம்பிக்கை வர வேண்டும்." என்றார் ஆசிரியர்.

ஆசிரியரின் மாறுபட்ட சிந்தனை, மூர்த்திக்கும் பிடித்திருந்தது. அது உண்மைதானே? "மாணவர் தலைவனின் பொறுப்பு என்பது வகுப்புக்குள் ஒழுங்கை மட்டும் நிலை நாட்டுவது அல்ல. கல்வியில் பின்தங்கி இருப்பவர்களையும் மேலே கொண்டுவர; கை தூக்கிவிட முயல வேண்டும் என்பதும் கூட என்பதை உணர்ந்து கொண்டேன் சார்" என்றான் மூர்த்தி.

— அருப்புக்கோட்டை செல்வம்

சந்திரனின் அப்பாவுக்கு சென்னைக்கு மாற்றலாகி விட்டது. கிராமத்தை விட்டுப் பட்டணம் போவதில் அதிகமாக மகிழ்ச்சியடைந்தவன் சந்திரன்தான். அப்பாவின் மாறுதல், கிடைத்தற்கரிய அதிர்ஷ்டமாக அவனுக்குப் பட்டது.

'சென்னையில் நாகரிகமான சூழ்நிலையில் பகட்டுடனும் மிடுக்குடனும் வாழலாம். அத்துடன் தரமான கல்வியும் கிடைக்கும்' என்பது சந்திரனின் எண்ணம்.



# பொல்லாத போக்கிரி!

நாட்களைத் தள்ளிப் போடாமல், மாறுதல் உத்தரவு கிடைத்த அன்றே சென்னைக்குக் கிளம்பி விட்டனர்.

சென்னையில் சிறந்த பள்ளி ஒன்றில், சந்திரனுக்கு ஒன்பதாம் வகுப்பில் சேர இடமும் கிடைத்து விட்டது. அவனது மகிழ்ச்சிக்குக் கேட்க வேண்டுமா!

அன்று முதல் முதலாக வகுப்புக்குச் சென்றான் சந்திரன். அவனுக்கு மனம் நிறைந்திருந்தது. வகுப்பறை அழகாகக் காட்சியளித்தது. மாணவர்கள் அனைவரும், தூய சலவை உடைகளில் ஜொலித்தனர்.

நெடு நெடுவென்ற வளர்த்தி. சிவந்த நிறம். முறுவல் பொருந்திய முகம். கம்பீரமான தோற்றம். இத்தனையும் நிறைந்தவனாய், அவன் அருகே அமர்ந்திருந்தான் திருமால்.

திருமால் கலகலப்பாகப் பேசினான். அவனது கண்களில் ஒரு

புவனை கலைச்செழியன்

துறுதுறுப்பு. மற்ற மாணவர்களை விட அவன் எடுப்பாகக் காணப்பட்டான்.


"புதிதாகச் சேர்ந்திருக்கும் உன்னை உள்ளன்போடு வரவேற்கிறேன்" என்றான் திருமால், மெல்லிய குரலில்.

திருமாலுக்கு நேராக முன் டெஸ்க்கில் வேறொரு மாணவன் அமர்ந்திருந்தான். அவன் முகம் பொலிவற்றுக் காணப்பட்டது. குச்சிக் குச்சியாக நீண்டிருந்த கோரை முடி.

கொண்டிருந்ததால், அவன் கவனமும் பாடத்தில் ஒன்றியது.

முதல் நாள் தோன்றிய சந்திரன், திருமால் இருவரின் தொடர்பும், அருகம் புல் போல் வேர் விட்டு வளர்ந்தது. திருமாலின் நட்புக் கிடைக்க முன் பிறவியில் தான் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று நினைத்தான் சந்திரன்.

திருமால் மிகவும் வசதியானவன் என்று அவனது பேச்சும், பழக்கமும், நடை, உடைகளும் சந்திரனை நம்ப




அட்டைக் கறுப்பாக உடல் நிறம். போட்டிருந்த சட்டையும் கந்தலாக இருந்தது. அவன்தான் வாசு.

வாசுவும் சந்திரனைப் பார்த்துப் புன்னகை புரிந்தான். அந்தப் புன்னகைகூடக் கோரமாகத் தோன்றியது சந்திரனுக்கு. கண்டு கொள்ளாதவன் மாதிரி முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டான். வாசுவை அவனுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை! வகுப்பில் பாடம் தொடங்கி விறுவிறுப்பாகப் போய்க்

வைத்தன. அவனது பற்றுக்கும் பாசத்திற்கும் காரணம், உண்மையாகவே அவனுக்குத்தன் மீது ஏற்பட்டிருக்கும் அக்கறைதான் என நம்பினான் சந்திரன்.

அன்று திருமால், தனக்குப் பிறந்த நாள் என்று சொல்லி, கொண்டு வந்திருந்த இனிப்புகளைச் சந்திரனுக்குத் தாராளமாக வழங்கினான். சந்திரனுக்கு இது பெருமையாக இருந்தது. "நீ என்மீது இவ்வளவு அன்பாக இருக்க நான்

ரொம்பக் கொடுத்து வைத்தவன்" என்று உவகையுடன் கூறித் திருமாலின் தோள்மீது கை போட்டுக் கொண்டான்.

"நானும் அதிகம் கொடுத்து வைத்தவன்தான், சந்திரா!" என்று பதிலுக்குக் கூறினான் திருமால்.

சந்திரனின் பார்வை, அவனையறியாமல் முன் டெஸ்க்குக்குத் தாவியது. வாசு அவனைக் கனிவுடன் பார்த்துக் கொண்டிருந்தான். இருப்பினும் அவன் கிட்டே வரவர, இவன் எட்டி எட்டி விலகிப் போனான்.

"அந்த அசிங்கம் பிடித்த பயலோடு பழக்கம் வைத்துக் கொள்ளாதே சந்திரா! பொல்லாத போக்கிரி அவன். அவன் பார்வையே அவனோட குணத்தை நிரூபிக்கும்"- வாசுவைப் பற்றிய திருமாலின் விமர்சனம் இது.

"நீ சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை, திருமால்! அவனைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கலை!



அந்தப் பார்வை ஏனோ குரூரம் மிக்கதாகவே பட்டது சந்திரனுக்கு. திருட்டுத் தனமும், வஞ்சகமும் உடையவனாகவே வாசு அவனுக்குத் தோன்றினான். வெறுப்பும், குரோதமும் நிறைந்த பார்வையை வீசிவிட்டு, மறுபடியும் திருமாலின் பக்கமே திரும்பிக் கொண்டான் அவன்.

நாட்கள் ஓடின.

பலமுறை சந்திரனோடு பேசிப் பழக முயன்றான் வாசு. ஆனால், ஆனால், எப்படியாவது என்னோடு வந்து ஒட்டிக் கொள்ளப் பார்க்கிறான் அந்தப் பரதேசிப்பயல்!" என்று அவனுக்கு ஒத்து ஊதினான் சந்திரன்.

வாசு முரட்டுத்தனம் மிகுந்தவனாகவும், திருமால் மென்மைத் தன்மை கொண்டவனாகவும் சந்திரனுக்குப் புலப்பட்டனர்!.

அன்று மாலை...

பள்ளி முடிய இன்னும் அரைமணி நேரம் இருந்தது.

"எனக்குத் தலையை வலிக்கிறது. நான் சற்று முன்னதாகவே வீட்டிற்குப் போகிறேன்" என்று சந்திரனிடம் திருமால் கூறிவிட்டு ஆசிரியரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு பாதி வகுப்பில் போய்விட்டான்.

அவன் போன சிறிது நேரத்திற்கெல்லாம், தனது புத்தகப் பைக்குள் கைவிட்ட சந்திரனுக்குத் தேள் கொட்டிய மாதிரி அதிர்ச்சி ஏற்பட்டது! அவனது ஜியாமென்டரி பெட்டியைக் காணவில்லை!

சந்திரன் மிரள மிரள விழித்தான்.

"ஏன் சந்திரா! என்ன ஆயிற்று?" இதமாக வினவினான் வாசு.

அவனுக்குப் பதில் சொல்வதா, வேண்டாமா என ஒரு கணம் யோசித்தான் சந்திரன்.

"ஏதாவது பொருளைக் காணோமா சந்திரா?" நடந்ததை யூகித்தவன் போல வாசு கேட்டது, அவன் இது வரை தான் எண்ணியிருந்த வாசு இல்லை என்பதைச் சந்திரனுக்கு நிரூபிக்கிற மாதிரி இருந்தது. "ஆமாம்" என்பதற்கு அறிகுறியாகத் தலையாட்டினான்.

உடனே வாசு திருமாலின் இடத்தில் வந்து உட்கார்ந்து, ஆர்வமோடு விசாரித்தான். அவனது குரல் கரகரப்பாக ஒலித்தாலும், அதில் கனிவு இருப்பதை முதல் முதலாக உணர்ந்தான் சந்திரன்! வெறியும், முரட்டுத் தனமும் நிறைந்தது என்று நினைத்திருந்த அந்தப் பார்வை, இப்போது கருணையின் உறைவிடமாகத் தோன்றியது!

"என் ஜியாமென்டரி பாக்சைக் காணோம், வாசு!" விசும்பினான் சந்திரன்.

"கவலைப்படாதே சந்துரு. அதைக் கண்டுபிடித்துத் தர வேண்டியது என் பொறுப்பு" நம்பிக்கை ஊட்டியது வாசுவின் குரல். "பள்ளி முடியும் வரை அமைதியாக இரு!"

பள்ளிக் கூடம் முடிந்ததற்கு அறிகுறியாக மணி ஒலித்தது. வாசுவும், சந்திரனும் ஒன்றாக வெளியேறினர்.

இருவரும் திருமாலின் வீடு நோக்கி விரைந்தனர்.

அப்போது சந்திரனின் மனத்தில் ஒரு சந்தேகம். 'அது உண்மையாக இருக்குமோ?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

திருமால் தனது அறைக்குள் இருப்பது வெளிப்புற ஜன்னல் வழியே தெரிந்தது. சந்திரனுடன் கை கோத்துக் கொண்டு ஓடிய வாசு, "திருமால்!" என்று சப்தம் போட்டுக் கூவினான்.

தெருப் பக்கம் திரும்பிய திருமாலின் முகம் வாசுவுடன் சந்திரனைக் கண்டதும் திடுக்கிட்டது!

"திருமால், சந்திரனின் ஜாமென்டரி பாக்சை நீ பாட்டிற்குச் சொல்லாமல், கொள்ளாமல் எடுத்துக்கிட்டு வந்துட்டியே! என்ன அர்த்தம்?" என்றான் வாசு.

"நீ என்ன சொல்றே, வாசு?" முகம் வெளிரக் கேட்டான் திருமால்.

"சொல்றேன்– சுரைக்காய்க்கு உப்பில்லைன்னு! ஒழுங்காய்... மரியாதையாய்... அவனோட பாக்சைக் கொடுத்து விடு!"

ஜன்னல் வழியாகத் தனது நீளமான கையை நுழைத்து, திருமாலின் கையை வலுவாகப் பற்றிக் கொண்டான் வாசு. "உள்ளே போய், அதோ மேஜை மேல் கிடக்கிற புத்தகப் பையைக் குடைந்து பார், சந்துரு!" என்றான் வாசு அதட்டலாக.


சந்திரன் திருமாலின் அறைக்குள் போனான். திருமாலின் பையைத்

---

**"பையன் ஏன் அழறான்?"**

**"பழைய சட்டையே நல்லாருக்கு. அதை உரிக்கமாட்டேன்னு அழறான்!"**

**— கே.சோமசேகர்**





தலைகீழாகக் கவிழ்த்தான்.
புத்தகங்களோடு வெளியே வந்து பொத்தென்று விழுந்தது, அவனது ஜியாமெண்டரி பாக்ஸ்!

யாரை யோக்கியன் என்று இதுவரை நினைத்திருந்தானோ, அவன் ஒன்னாம் நம்பர் திருடன் என்பது தெரிந்து விட்டது! வெறுப்பு நிறைந்த பார்வை ஒன்றை அவன்மீது வீசி விட்டு வெளியே வந்தான் சந்திரன்.


"அயோக்கியப் பயல்... நம்பிக்கைத் துரோகி! அவன் உன்னோடு ஒட்டி. ஒட்டிப் பழகும் போதே, அவனது உள்நோக்கம் எனக்குத் தெரிந்து விட்டது, சந்துரு!" என்றான் வாசு.

"நான் உண்மை புரியாமலேயே இருந்துட்டேன் வாசு!"


"இந்தப் பட்டணத்துல உண்மைக்கும், பொய்க்கும் வித்தியாசம் கண்டு பிடிக்கிறது மகா கஷ்டம்... முகத்தைப் பார்த்து யார் எப்படிப் பட்டவங்கன்னு அறிஞ்சிக்க முடியாது! கிராமத்தில் வளர்ந்த கள்ளங் கபடு தெரியாத – உசந்த மனமுள்ள பிள்ளை நீ. நம்முடன் குணவான் மாதிரி பழகிக் கிட்டு நமக்கே குழி பறிக்கப் பார்ப்பானுக. யார் கிட்டவும் உஷாராத்தான் நடந்து கொள்ளணும்!"


இதற்கு முன்பு அருவருக்கத் தக்கவனாகத் தோன்றிய வாசு, இப்போது குண அழகால் பொலிவதைக் கண்டு, பெருமகிழ்ச்சியடைந்தான் சந்திரன்.

# பசியால் வாடினாலும்...



பசியால் வாடிய நரி ஒரு நாள் காட்டை விட்டு வெளியே வந்தது.
எதிரே வந்த நாய் நரியைப் பார்த்து-
நண்பா... ஏன் வருத்தமுடன் இருக்கிறாய்?
நான் உணவு உண்டு ஒரு வாரம் ஆகிறது?
இதைக் கேட்ட நாய் பரிதாபத்துடன்-
நான் உங்களுக்கு உதவுகிறேன்!


என்னை வளர்க்கும் எஜமான் ரொம்ப நல்லவர்
எனக்கு நிறைய உணவு தருகிறார்! உனக்கும் தருவார் வா, என்னோடு!
மகிழ்ச்சி அடைந்த நரி நாயுடன் சென்றது-
மிக்க நன்றி! இந்த உதவியை என்றும் மறக்கமாட்டேன்!
வழியில்- நாயின் கழுத்தில் இருந்த வளையத்தைக் கண்ட நரி-
இது எதற்கு?!


என் எஜமான் என்னை சங்கிலியால் கட்டி வைப்பதற்கு!
இரவில் தான் என்னை அவிழ்த்து விடுவார்..!
இதைக் கேட்ட நரி- மீண்டும் காட்டினுள் ஓடியது.
அப்படியா..? நான் பசியால் வாடினாலும்... உணவுக்காக உன்னை போல் அடிமையாக வாடமாட்டேன்! நான் வரமாட்டேன்.
3

# எனக்கு வேண்டாம்!

ரா. முத்துச்செல்வன்



அருண் ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் மாணவன். படிப்பில் சுமார்தான். எப்பொழுதும் பள்ளிக்கு நடந்துதான் செல்வான். அருணுடைய நண்பன் பாஸ்கர்.

தெருமுனையிலேயே பாஸ்கர் புத்தம் புது சைக்கிளுடன் எதிர்ப்பட்டான். "எங்க அப்பா புதுசா வாங்கி கொடுத்தாரு. இனி தினமும் பள்ளிக்கு சைக்கிளில்தான் வருவேன் என்றான்'' பாஸ்கர்.

"பாஸ்கர் நானும் உன்னுடைய சைக்கிளிலேயே வரேன்டா'' என்றான் அருண்.

''சாரிடா அருண். என்னை மன்னிச்சுடு. எங்க அப்பா யாரையும் சைக்கிள்ல ஏற்றிக் கொண்டு செல்லக் கூடாது என்று கண்டிப்பாகக் கூறியுள்ளார். வேண்டுமானால் நீயும், உங்க அப்பாவிடம் சொல்லி புதுசா சைக்கிள் வாங்கிக் கொள்ளேன்?" என்று விரைந்தான் பாஸ்கர்.

பாடவேளை நடந்து கொண்டிருந்தது. அருணுடைய மனம், பாஸ்கர் கூறியதைப் போன்று நாமும் சைக்கிள் ஒன்று வாங்கி விட்டால் எவ்வளவு மகிழ்ச்சியாகப் பள்ளிக்குச் சென்று வரலாம் என்பதிலேயே இருந்தது. பள்ளி இறுதி மணி ஒலித்தது. இன்று எப்படியாவது சைக்கிள் வாங்கி விட அப்பாவிடம் கூறி விட வேண்டும் என்ற உறுதியுடன் விரைந்தான் அருண்.

அருணுடைய அப்பாவுக்குக் குறைந்த சம்பளம்தான். இருந்தும் தனது தேவைகளையெல்லாம் குறைத்துக் கொண்டு மிக உயர்ந்த பள்ளியில் அருணைப் படிக்க வைத்திருந்தார். தன்னுடன் பயிலும் பணக்கார நண்பர்களைப் பார்த்து ஏங்குவான் அருண்.

அன்று இரவு, அப்பா வருவதற்கு நெடுநேரமாகி விட்டது. அருண் அவர் வரும் வரை தூங்காமல் காத்திருந்தான். தனக்கு உடனடியாக சைக்கிள் வாங்கி தரும்படி கேட்டான்.

"கொஞ்ச நாள் பொறுத்துக்க அருண். தீபாவளிக்கு போனஸ் வரும். அதுல வாங்கித் தர்றேன், இப்ப போய் சாப்பிட்டு விட்டுப் படுத்துத் தூங்கு. எது இருந்தாலும் காலையில்



## பயந்த காரணம்!

எங்கள் வீட்டுப் பரணிலே
எலிகள் கொட்டம் அடிக்குது
என்ன என்று தெரியலே
ஏதும் எனக்குப் புரியலே!

எலிகள் தொல்லை ஒழிக்கவே
எடுத்து வளர்த்த பூனையும்
எலிகள் சத்தம் கேட்டதும்
எங்கோ ஓடிப் பதுங்குதே!

பதுங்கிப் பாயும் பூனையார்
பணிந்து ஒதுங்கிப் போவதேன்?
ஒளிந்து ஓடும் எலிகளும்
ஓடி ஆடித் திரிவதேன்?

பிடித்து எலியைத் தின்பதால்
'பிளேக்' வரும் என்பதை
அம்மா எடுத்துச் சொன்னதால்
அரண்டு பூனை ஓடுறார்!

— மு. நடராசன்

பேசிக் கொள்ளலாம்" என்றார் அப்பா அலுப்பை மறைத்துக் கொண்டு.

அருண் விடவில்லை. அழுது அடம் பிடித்தான். காலையில் தனக்கு சைக்கிள் வாங்கித் தராவிட்டால் தான் இனி பள்ளிக்கே போகப் போவதில்லை என்று உறுதியாகக் கூறினான்.

அவனது பிடிவாதத்தால் மனம் நொந்து போன அப்பா, "சரி அருண். உனக்கு சைக்கிள்தானே வேணும்? இப்போதைக்கு என்னுடைய சைக்கிளை நீ எடுத்துக்கோ. நான் வேற புது சைக்கிள் வாங்கித் தந்த பிறகு அதை எனக்குத் திருப்பிக் கொடு" என்றார்.

அருணுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி! தனக்கு சைக்கிளைக் கொடுத்து விட்டு அப்பா என்ன பண்ணப் போகிறார் என்பதைப் பற்றி அவன் யோசித்துக் கூடப் பார்க்கவில்லை!

எப்படியோ, அடுத்த தெருவில் உள்ள பள்ளிக்குப் போக தனக்கு ஒரு சைக்கிள் கிடைத்து விட்டது என்ற மகிழ்ச்சியுடன் அடுத்த நாள் பள்ளிக்குக் கிளம்பினான்.

அருண் மகிழ்ச்சிக் கடலில் மிதந்த படி அப்பாவின் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது அவன் கண்கள் சாலை ஓரத்தில் சென்று கொண்டிருந்த சிறுவனை நோட்டமிட்டன. அவன் கால் ஊனமுற்ற சிறுவன். தன் கைகளையே கால்களாகக் கொண்டு தரையில் ஊன்றி, உடலை உந்தி உந்தி இழுத்துக் கொண்டு சென்றான். அவன் முதுகில் புத்தகப் பை வேறு அழுத்திக் கொண்டிருந்தது.

அருணுக்கு அவனைத் தெரியும். பஸ் நிறுத்தத்துக்குப் பக்கத்தில் இருந்த பள்ளியில் அவன் படித்து வந்தான். நான்கு சக்கரங்கள் வைத்த ஒரு பலகையில் உட்கார்ந்து கொண்டு விந்தி விந்தி நகர்ந்து அவன் பள்ளிக்குப் போவதைப் பல முறை அருண் பார்த்திருக்கிறான். இன்றைக்கு பலகையைக் காணவில்லை.

சைக்கிளை விட்டு இறங்கிய அருண், "தம்பி, உன் பலகைக்கு என்ன ஆச்சு? நான் வேண்டுமானால் உன்னைப் பள்ளியில் கொண்டு போய் விடட்டுமா?" என்று கேட்டான்.

"வேண்டாம் அண்ணா. எங்கப்பாவுக்கு உடம்பு சரியில்லே. அதனால் என்னுடைய பலகையை அடகு வைச்சு நூறு



ரூபாய் கடன் வாங்கி மருந்து வாங்கிக் கொடுத்திருக்கிறேன்" என்றான் சிறுவன்.

"பலகையை எப்படி மீட்டுப்பே?"

"மேம்பாலம் தாண்டினதும் வலது பக்க மைதானத்தில் காவலர் பயிற்சி பள்ளி இருக்கு இல்லே. அதுல இருக்கிற வங்களோட பூட்ஸுக்கு பாலீஷ் போடு வேன். மாலையில் பள்ளி விட்டதும் அங்கேதான். மூன்று மணி நேரம் பாடு பட்டால் அறுபது ரூபாய் கிடைக்கும். ரெண்டு வாரத்தில் பலகையை மீட்டு விடுவேன்" என்று தன்னம்பிக்கையோடு பதிலளித்த சிறுவன், "ஊனமாகப் பிறந்த என்னை, ஒதுக்கி வெறுத்து விடாது, ஆளாக்கி விட கடினமாக உழைத்து வரும் எங்கப்பாவுக்கு, இதைக் கூட நான் செய்யாவிட்டால் மகன்னு சொல்லிக் கொள்வது தப்பு இல்லையா அண்ணா?" என்று கேட்டுச் சிரித்து ஊர்ந்தான்.

உடலைத் தேய்த்துத் தேய்த்து கைக ளால் விந்தி விந்தி நகர்ந்தபடி அந்தச் சிறுவன் செல்வதையே அருண் பார்த் துக் கொண்டிருந்தான்.

காவலர் பயிற்சி மைதானம் என்பது ஒரு கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். இந்த ஊனமுற்ற சிறுவனுக்கு தந்தையின் மேல் எத்தனை அன்பு இருந்தால், பலகை கூட இல்லாது உடலைத் தேய்த் துக் கொண்டு இப்படியே விந்தி விந்திச் சென்று உழைத்து வரக் கிளம்பியிருப் பான்! அடுத்த தெருவில் உள்ள பள்ளிக் குப் போக, அப்பாவின் சைக்கிளைப் பிடிவாதம் பிடித்து வாங்கிக் கொண் டுள்ள தன்னுடைய சுயநலம் எங்கே? இந்தச் சிறுவனின் உயர்ந்த உள்ளம் எங்கே? உண்மையில் யார் ஊனமுற்ற வர்கள்? தனக்கு சைக்கிளைக் கொடுத்து விட்டு அப்பா எப்படி அலுவலகம் போவார் என்பதை அப்பொழுதுதான் அருண் எண்ணிப் பார்த்தான்.

குடையைப் பிடித்தபடி வெயிலில் நடந்து கொண்டிருந்த அப்பா, சைக் கிளில் வழிமறித்த அருணைப் பார்த்தார்.

"ஏம்ப்பா! பழைய சைக்கிள்னு நண் பர்கள் கேலி பண்ணினார்களா அருண்? கொஞ்ச நாள் பொறுத்துக்க. தீபாவளி போனஸ் வந்ததும் உனக்குப் புது சைக் கிள் வாங்கித் தந்துடறேன்."

"அப்பா. பக்கத்துத் தெருவில் இருக் கும் பள்ளிக்குப் போக எனக்கு சைக்கிள் வேண்டாம்பா. உங்களுக்குத்தான் வேணும். எனக்கு நீங்களும் உங்கள் அன்பும்தான் வேணும்" என்று கலங்கிய அருணை அப்பா திகைப்புடன் பார்த் தார்.

## சார் தபால்!

● மரகதச் சிலை பயங்கரமான விறுவிறுப்பு மிக்க கதை. படங்கள் சினிமாவைப் பார்ப்பது போன்ற பிரமிப்பை ஏற்படுத்துகின்றன! - சின்னமலை வா. மாணிக்கம், பொட்டிக்கனூர் மா. இராதா, குணசேகரன் பட்டி வா. மல்லிகா, மேலப்பாதி எஸ். நாகராஜன், ஆனைக்கல்மேடு சி. மாதேஸ்வரன், சித்தம்பூண்டி கே. சி. கோகுலன், கச்சிராபாளையம் ஜெ. முருகன், ஆரணி பா. ஞானமூர்த்தி, விசனூர் ஜி.ஜி. கிருஷ்ணன், கன்னியாக்குறிச்சி கோகுலப்பிரியன், மற்றும் பலர்.

● கன்னப்பை இல்லாத குரங்கு உண்டா? கதை இதுவரை இல்லாத அறிவியல் அணுகுமுறை! கோவை - 4 கு. பவானி, தூத்துக்குடி மா. பெரியசாமி, விருத்தாசலம் இரா. பிரபாகர், ஏழுகிணறு எஸ். பாலாஜி, மேலப்பாதி ராஜலட்சுமி நாகராஜன், கச்சிராபாளையம் கவிக்கம்பன், ஆரணி பி. ஞானமூர்த்தி, மற்றும் பலர்.

● 'அம்மாவா தொணதொணப்பு!' சூப்பர் சார். எல்லாப் பள்ளிகளிலும் போட வேண்டிய நாடகம். வாலாஜா ரோடு பா. மூர்த்தி, திருவான்மியூர் வா. நெற்குப்பை, திருத்துறைப்பூண்டி கா. பிரசன்னா, விருத்தாசலம் வி. பிரபாகர், ஆரணி யுவராஜ், தோப்புத்துறை வி. ராஜசேகர், கன்னியாக்குறிச்சி இராம. பரமேஸ்வரன், மற்றும் பலர்.

● குழந்தைகளின் புத்தகச் சுமை பற்றிய அலசல் கோகுலத்தின் அக்கறையைக் காட்டுகிறது. தேவைப்படும் பொருள்தான் - நாமக்கல் வா. சுபா, ஸ்ரீசைலம் வா. முகுந்தன், விருத்தாசலம் ஷ. பிரபாகரன், பவித்திரமாணிக்கம் டி. முருகேசன், சென்னை கி. சிவா மற்றும் பலர்.

● 'சிரிப்புக்கு ஒரு சின்னபாபு!' என்று வாசகர் அளித்த பட்டத்தை மிக அருமையாகத் தக்க வைத்துக் கொண்டுள்ளார் சின்னபாபு! படித்தோம்! ரசித்தோம்! வயிறு வலிக்கச் சிரித்தோம்! - விருத்தாசலம் கே. பிரபாகர், திருச்சி எஸ். வி. பார்த்தசாரதி, கச்சிராபாளையம் ஜெ. முருகன், மற்றும் பலர்.

● 'சத்தியம் செய்!' பரிசுக் கதை, உண்மையாகவே பரிசுக்கு உரிய உயர்ந்த கதைதான். விஷ்வந்த் மறக்க முடியாத பாத்திரம். விருத்தாசலம் இரா. பிரசன்னகுமார், தென்னமாரி சுப. சிவராஜா சகோதரர்கள், ஆரணி ப. ஞானமூர்த்தி, சித்தம்பூண்டி வி. குமார் & சகோதரி, திருக்கண்ணங்குடி சரவணகுமரன், குடந்தை ஆர். எஸ். நாதன் மற்றும் பலர்.

● ''வண்ண லேபிள்கள்'' கண்கவர் பரிசுகள். குழந்தைகள் போட்டியிட்டனர் - பூதலூர் சா. மாயாண்டி, காவேரிப்பட்டணம் விக, விருத்தாசலம் இரா. பிரசன்னகுமார், திட்டக்குடி அமுத பாலாஜி.

● 'தீபன் கேட்ட கேள்வி', நகரப் பள்ளிகளுக்குப் படையெடுக்கும் மாணவர்களுக்கு நல்ல சவுக்கடி. வேகமான எழுத்து. - வெள்ளிக்கிடங்கு ஆர். முருகானந்தம், ஆரணி ப. ஞானமூர்த்தி, கே. யுவராஜ், ஆரணி, காட்டுமன்னார்கோயில் மோ. பத்மநாபன், மற்றும் பலர்.

● நீங்கள் வைக்கும் போட்டிகளிலும், வெளியிடும் கதை, கட்டுரை, பாடல்களிலும் எங்களைப் போன்ற வெளிநாட்டினர் பங்குகொள்ள வழியே இல்லையா? எங்களுக்கு இந்தியாவில் நண்பர்களோ, உறவினரோ இல்லையே? - ஸ்ரீலங்கா க. பாலமுருகன், கோகுல்நாத் மற்றும் பலர்.

*(உங்களைப் போன்றவர்களின் படைப்புகளை வெளியிடவும், பரிசுக்குப் பரிசீலனை செய்யவும் ஆவன செய்ய முயன்று வருகிறோம் - ஆசிரியர்)*

● என்ன சார்! இரண்டு போட்டிகளுக்கான முகவரிக் கட்டங்களையும் அடுத்தடுத்த பக்கங்களில் போட்டு விட்டீர்களே! - சாத்தூர் மா. கன்னுசாமி, லால்குடி ரா. மதுராம்பாள், புலியூர் கா. குணசேகர், விருத்தாசலம் இரா. பிரசன்னகுமார், ஆர். ஜானகி, கொரடாச்சேரி, வெள்ளிக்கிடங்கு ஆர். முருகானந்தம், திருநெல்வேலி டி.எஸ்.ஏ. பிள்ளையன், சிதம்பரம் ஆர். கீதப்பிரியா, மற்றும் ஏராளமானோர்.

*(பெஞ்சிமேல் ஏறிக் கொள்கிறேன். இனிமேல் இந்த கைய தவறு ஏற்படாது. சரிதானே? - ஆசிரியர்)*

● 'ஜாடிகள்' கதையும், எங்கள் ஊரில் நடந்தது பகுதியில் வெளியான 'கதவடை'யும் ஏற்கெனவே வேறு பத்திரிகைகளில் வெளியானவை. அவ்வப்பொழுது தூங்கிவிடுவீர்களா? - குடியாத்தம் மா. அப்துல் முத்தலிப், சின்னாளப்பட்டி வா. பூமணி, ஈரோடு கா. சண்முகம், காட்டுமன்னார்கோயில் எம். சுதாகர்.

---

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி, ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.

GOKULAM (Tamil) July '95 REGISTERED NO. TN MS (S) 281 Registered as Newspaper in Sri Lanka